# உதயன்



www.onlineuthayan.com

28 : பக்கங்கள் சுடர் 27 கதிர் 343 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 18 சனிக்கிழமை (03/11/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 20.00


# வாக்குறுதி தவறினால் அபாயப்பொறி நிச்சயம்

## இலங்கையைப் பகிரங்கமாகக் கண்டித்தது அமெரிக்கா

ஜெனிவா, நவம்பர் 3

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 19 ஆவது கூட்டத்தொடரில் அரசுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றி இராஜதந்திரச் சமரில் இலங்கையை மண்டியிட வைத்த அமெரிக்க வல்லரசு, தற்போது ஜெனிவாவில் நடைபெறும் பூகோள காலக்கிரம மீளாய்வுக் கூட்டத்தொடரிலும் இலங்கைக்குச் சிம்மசொப்பனமாகத் திகழ்ந்து வருகின்றது.

குறிப்பாக, சர்வதேச சமூகத்திடம் தான் வழங்கிய உறுதிமொழிகளை இலங்கை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறும் ஜெனிவாத் தொடரில் அபாயப் பொறி நிச்சயம் என்று அமெரிக்கா கடுந்தொனியில் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதேவேளை, சர்வதேச சமூகத்திடம் அளித்த உறுதிமொழிகளை நிறைவேற்றாமல் ஜனநாயக விரோத செயல்களில் இலங்கை அரசு தொடர்ந்தும் ஈடுபடுமானால் எதிர்வரும் மார்ச் மாத ஜெனிவா அமர்வில் இலங்கை பெரும் நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டிவருமென பல தரப்பினரா

பார்க்க பக்கம் 4

## 26 இலங்கையரை திருப்பி அனுப்பியது ஆஸ்திரேலியா

கான்பரா, நவ.3

ஆஸ்திரேலியாவின் கொக்கொஸ் மற்றும் கிறிஸ்மஸ் தீவுகளுக்கு இந்த வார முற்பகுதியில் படகுகளில் வந்து சேர்ந்த 26 ஆண்கள் நேற்று முன்தினம் இரவு இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இந்த வாரத்தின் ஆரம்பத்தில் இவர்கள் படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்குள் நுழைய உரிய விசா, சட்ட நடைமுறைகளை கையாளவில்லை என்பதைக் காரணம் காட்டி ஆஸ்திரேலிய குடிவரவு அதிகாரிகள் இவர்களை நாடு கடத்தியுள்ளனர்.

பார்க்க பக்கம் 4

## நீதியரசர் மீதான பிரேரணைக்கு எதிராகப் புதிய வியூகம் வகுப்பு

### சட்டத்தரணிகள் சங்கம் அதிரடி; 9 இல் பொதுச்சபைக் கூட்டம்

கொழும்பு, நவ.3

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குற்றவியல் பிரேரணை தொடர்பாக விசேட மாற்றுத் தீர்மானங்களை மேற்கொள்வதற்காக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முழுவீச்சுடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அத்துடன், பிரதம நீதியரசருக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேற்படி பிரேரணையானது தனிப்பட்ட முறையில் அவரைப் பழிதீர்ப்பதற்காக அரசால் மேற்கொள்ளப்படும் சதித்திட்டம் என்று சட்டத்தரணிகள் சங்கம் கடுமையாகச் சாடியது.

மேற்படி குற்றவியல் பிரேரணை தொடர்பில் விசேட

பார்க்க பக்கம் 4

## நீதி தேவதைக்கு இப்போது கைவிலங்கு

### சாடுகிறது 'கபே' அமைப்பு

கொழும்பு, ஒக்.3

நீதி தேவதைக்கு கைவிலங்கிடப்பட்டுவிட்டது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி வேடிக்கை பார்த்துக் கொண்டு, அறிக்கை விடுவதுடன் தனது கடமை முடிந்துவிட்டது எனக் கூறுகிறதா? - இவ்வாறு கடுமையாகச் சாடுகிறார் 'கபே' அமைப்பின் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன்.

அதேவேளை, சுதந்திர

பார்க்க பக்கம் 4

## "அடிபணியார் என் அன்னை"

### பிரதம நீதியரசரின் மகன் ஆவேசம்

கொழும்பு, நவ.3

''எனது தாயார் தமது நிலைப்பாட்டிலிருந்து இறங்க மாட்டார். இந்த நாட்டுப் பிரஜைகள் அவருக்குப் பக்கபலமாக இருக்கவேண்டும்'' என நாடாளுமன்றத்தின் நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்நோக்கும் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் புதல்வர் செவீன் பண்டாரநாயக்க தமது 'பேஸ்புக்'கில் தெரிவித்துள்ளார்.

ஓர் ஆணோ, பெண்ணோ தம்மைச் சூழ்ந்துள்ள அநீதிக்கு மத்தியில் வாழக்கூடும், குருட்டுப்பார்வையோடு மறக்கப்பட்ட ஒரு நபராகக் கூட மடியலாம். அல்லது அந்த ஆணோ பெண்ணோ கொடுங்

பக்கம் 4

## பொய் வாக்குறுதிகளையே வழங்கியுள்ளது இலங்கை

### நம்பவேண்டாம் என்கிறது சர்வதேச மன்னிப்புச் சபை

நியூயோர்க், நவ 03

மனித உரிமை மேம்பாடு தொடர்பிலான இலங்கையின் உறுதிமொழிகளை ஏற்க முடியாதெனச் சர்வதேச மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது.

மனித உரிமை விவகாரங்கள் தொடர்பிலான இலங்கை அரசின் வாக்குறுதிகளைத் தொடர்ந்தும் சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்ளக் கூடாது என அந்தச் சபை கோரியுள்ளது.

யுத்தத்தின் பின்னரான குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் புதிதாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென அது வலியுறுத்தியுள்ளது.

2008ஆம் ஆண்டு பூகோள கால மீளாய்வு அமர்வுகளில் இலங்கை அரசு வழங்கிய உறுதிமொழிகளில் பல இன்னமும் நிறைவேற்றப்படவில்லை என மன்னிப்புச் சபை குற்றம் சுமத்தியுள்ளது.

சில தசாப்தங்களாகவே மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் இலங்கை வெற்று வாக்குறுதிகளை வழங்கி வருவதாக அது தெரிவித்துள்ளது.

பார்க்க பக்கம் 4


**5** தேசிய வாசிப்பு மாத நூலக சேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தில் சிறந்த சேவைகளை வழங்கிய 13 பொது நூலகங்களுக்கு வடமாகாணத்தில் தேசிய விருதுகள் கிடைத்துள்ளன.

**8** காங்கிரஸ் தலைவர் சோனியா மற்றும் அவரது மகன் ராகுல் ஆகியோர், பொதுத்துறை நிறுவனத்தை முறைகேடாகக் கைப்பற்றியுள்ளனர்

**9** நைஜீரிய இராணுவத் தினரால் அங்குள்ள பொகோ ஹராம் போராளிக் குழுக்களுக்கு எதிராக பெரியளவில் மனித உரிமை மீறல்கள்.


## ஷராணிக்கு எதிரான பிரேரணையை கைவிடுவதே ஜனநாயக உரிமைக்கு மதிப்பு

### மனித உரிமை புத்திஜீவிகள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, நவ.3

பிரதம நீதியரசருக்கு எதிராக அரசால் கொண்டுவரப்பட்டுள்ள குற்றவியல் பிரேரணையானது ஜனநாயக சம்பிரதாயங்களுக்கும், தார்மீக உரிமைகளுக்கும் எதிரான செயல் எனத் தெரிவித்துள்ள மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான புத்திஜீவிகள் சங்கம், குறித்த குற்றவியல் பிரேரணை தொடர்பான நடவடிக்கைகளை அரசு உடனடியாகக் கைவிட்டு நீதித்துறை சுயாதீனத்தை நாட்டில் நிலைநிறுத்தவேண்டும் என்று அரசுக்கு அழுத்தம் கொடுத்தது.

பிரதம நீதியரசருக்கு எதிராக அரசால் கொண்டுவரப்பட்டுள்ள குற்றவியல் பிரேரணையைக் கண்டித்து மனித

பார்க்க பக்கம் 4

## தமிழருக்கு நீதி வேண்டும்; மாகாணசபை வேண்டாம்

### எதிரும் புதிருமாகக் கூறுகிறார் தேரர்

கொழும்பு, நவ.3

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் அரசியல் தீர்வைக் காணுமாறு சர்வதேசசமூகம் உட்பட பல தரப்பினரும் இலங்கை அரசை தொடர்ச்சியாக வலியுறுத்தி வரும் நிலையில், தமிழர்களுக்கு விரைவில் நியாயம் கிடைக்க வேண்டுமென கண்டி மல்

பார்க்க பக்கம் 4

## யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தில் அரசியல் தலையீட்டை ஏற்கமுடியாது

### விஞ்ஞான ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.3

யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தில் அரசியல் தலையீடு என்பது கண்டனத்துக்குரியது என்று யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அறிக்கையொன்றை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அண்மைய நாள்களில் பத்திரிகை ஒன்றில் பிரசுரிக்கப்பட்ட சில செய்திகள் எமது பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்தில் அரசியல் தலை

பார்க்க பக்கம் 4

## இந்திய மீனவர்களை மனிதர்களாக நடத்துக

### பீரிஸிடம் கோரினார் குர்ஷித்

புதுடில்லி,நவ 3

இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் மனிதாபிமானத்துடன் நடத்த வேண்டும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தியாவின் புதிய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்துக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கும் இடை

பார்க்க பக்கம் 4

## 'திவிநெகும' குறித்த நீதிமன்றின் முடிவு 6ஆம் திகதி நாடாளுமன்றில் அறிவிப்பு

கொழும்பு, நவ.3

'திவிநெகும' சட்டமூலம் குறித்தான உயர்நீதிமன்றத்தின் முடிவை எதிர்வரும், 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நாடாளுமன்றில் அறிவிக்கவுள்ளார்.

குறித்த சட்டவரைவு தொடர்பிலான தனது முடிவை உயர்நீதிமன்றம் கடந்த 31 ஆம் திகதி ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் அனுப்பி வைத்துள்ளது.

நாடாளுமன்றம் எதிர்வரும் 6ஆம் திகதி கூடவுள்ளது. இதன்போது சபாநாயக

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு வலயம் இருப்பதை ஒப்புக்கொண்ட வடக்கு ஆளுநர்

யாழ்ப்பாணம், நவ.3

இலங்கையின் எந்தப் பாகத்திலும் உயர் பாதுகாப்பு வலயம் இல்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்து வருகின்ற நிலையில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் யாழ். மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயம் இன்னமும் இருக்கின்றது என்பதை ஒப்புக் கொண்டுள்ளனர்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன்போதே யாழ். மாவட்டத்தில் உயர்பாதுகாப்பு வலயம் இருக்கிறது என்பதை இவர்கள் இருவரும் ஒப்புக் கொண்டனர்.

**ஜி.ஏ.சந்திரசிறியும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் யாழ். மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயம் இன்னமும் இருக்கின்றது என்பதை ஒப்புக் கொண்டுள்ளனர்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வலி. வடக்குப் பிரதேசத்தில் தனியார் காணிகள் அடாத்தாகப் பறிக்கப்பட்டு மீன் உற்பத்தி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்த போது-

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி இதன்போது நீங்கள் குறிப்பிடும் இடம் உயர் பாதுகாப்பு வலயத்துக்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ அமைக்கப்பட்டுள்ளது எனக் கேட்டார்.

இதன்போது அருகிலிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் எதுவும் பேசாமல், ஆளுநர் தெரிவித்த கருத்தை ஆமோதித்தார்.

நாட்டின் தலைவரான ஜனாதிபதி உலக நாடுகளிடம், இலங்கையில் உயர் பாதுகாப்பு வல்யம் என்ற ஒன்று இல்லை எனக் கூறி வருகின்ற நிலையில் அவரின் பிரதிநிதிகளான ஆளுநரும், அமைச்சரும் யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயம் உள்ளதெனக் குறிப்பிட்டுள்ளமையானது அரசின் பொய்ப் பிரசாரத்தை வெளிப்படுத்திக் காட்டுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது. (த-5)

## ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், நவ.3

முல்லைத்தீவு முள்ளிவாய்க்காலை அண்மித்து வெவ்வேறு கிலோகிராம் நிறையுடைய 15 தற்கொலை அங்கிகள் உட்பட சில ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக யாழ். பிராந்தியப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

விசேட புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்ற அவர்கள் ஆயுதங்களை மீட்டதாக அவர் தெரிவித்தார்.

3 கிலோகிராம் நிறையுடைய தற்கொலை அங்கிகள்- 7, 8 கிலோகிராம் நிறையுடைய தற்கொலை அங்கிகள் -4, 4 கிலோகிராம் நிறையுடைய அங்கிகள்-3, ஒரு கிலோகிராம் நிறையுடைய அங்கி ஒன்று, மற்றும் ஆர்.பி.ஜி. குண்டு 1, தொலைத் தொடர்புக்கருவி -1, ரி-5 ரக துப்பாக்கி ஒன்று என்பனவே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக எரிக் பெரேரா மேலும் தெரிவித்தார். (த-4)

## சிறுவர்தின பரிசளிப்பு

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் நடத்தப்பட்ட பேச்சு, கட்டுரை, ஓவியம் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் இன்று சனிக்கிழமை வழங்கப்படவுள்ளன.

நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள மாவட்ட சிறுவர் தின நிகழ்வில் இவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (எ)

## அதிவேக நெடுஞ்சாலையில் மண்சரிவு

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் வெலிபன்ன - பின்னதுவ பகுதியில் மணிசரிவு ஏற்பட்டுள்ளது. தவத்துடுவ, கொம்பத்தல எனுமிடத்தில் மலைப்பாங்கான பகுதியொன்றிலேயே இந்த மண்சரிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மண்சரிவு காரணமாக கொட்டாவ காலிக்கிடையிலான நெடுஞ்சாலையின் தவத்துடுவ முதல் காலி வரையான வீதியின் சுமார் ஒரு கிலோமீற்றர் பகுதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இந்த வீதியில் ஒரு மருங்கு மட்டுமே தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகவும் இதனால், ஏனைய மருங்கினூடாக இருவழிப் போக்குவரத்தை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளுக்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது. (த)

## புலம்பெயர் நாடுகளில் தமிழ்ச்செல்வனுக்கு வணக்கம்



தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்களால் நேற்று நினைவு கூரப்பட்டது.

கடந்த 2007ஆம் ஆண்டு நவம்பர் 2 ஆம் திகதி பிரிகேடியர் தமிழ்ச்செல்வன் உட்பட 7 போராளிகள் இலங்கை விமானப்படை தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டு ஐந்து ஆண்டு பூர்தியடைந்துள்ளது.

இந்த நிலையில் புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ் மக்கள் விசேடமாக அமைக்கப்பட்ட நினைவிடங்களில் தமிழ்ச் செல்வனுக்கும் ஏனைய மாவீரர்களுக்கும் வணக்கம் செலுத்தினர். (ஐ)

## 'அனைவருக்கும் மின்சாரம்' டிசெம்பருக்குள் பூர்த்தியாகா

### கைவிரிக்கின்றார் மின்சாரசபை அதிகாரி

யாழ்ப்பாணம், நவ. 3

2012ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துக்கு முன்பாக 'அனைவருக்கும் மின்சாரம்' செயற்திட்டத்தின் கீழ் மின்சாரம் வாழங்கி முடிக்க வேண்டிய போதும், அவ்வாறு வாழங்கி முடிக்க முடியாது என்று இலங்கை மின்சார சபையின் வடக்கின் வசந்தம் திட்ட முகாமையாளர் எம்.குணசீலன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது-

இலங்கை மின்சார சபையின் 'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் ஊடாக 130 வேலைத் திட்டங்கள் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் 104 வேலைத்திட்டங்கள் இதுவரையில் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக 350 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.

இன்னமும் 26 வேலைத் திட்டங்கள் 172 மில்லியன் ரூபா செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

2012ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் 'அனைவருக்கும் மின்சாரம்' செயற்திட்டம் முடிக்கப்பட வேண்டும். இருப்பினும் டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் மேற்படி செயற்திட்டத்தை முடிவுறுத்த முடியாது.

அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்கு முன்னரே மேற்குறித்த செயற்திட்டம் நிறைவடையும். வேலைத் திட்டத்துக்குரிய மூலப் பொருள்கள் சீனாவில் இருந்து வருவதற்கு தாமதமடைவதே வேலைத்திட்டம் தாமதம் அடைவதற்கு காரணம்- என்றார். (த-5)

## ஆனந்தபுரத்தில் உயிரிழந்த சிறுமி குடும்பத்துக்கு நஷ்டஈடு

யாழ்ப்பாணம், நவ.3

புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் பச்சைப் புல்மோட்டையில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்த சிறுமியின் குடும்பத்துக்கு மீள் குடியேற்ற அமைச்சினால் நஷ்ட ஈடு வழங்கப் பட்டுள்ளது.

கடந்த 27ஆம் திகதி இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் ஜோசப் நிக்கிலஸ் நிசாந்தினி (வயது-10) என்ற சிறுமி உயிரிழந்ததுடன் அவரது சகோதரியான ஜோசப் நிக்கிலஸ் புஸ்பலதா (வயது-28) என்பவர் காயமடைந்திருந்தார்.

இவர்களது குடும்பத்துக்கு கேப்பாப்பிலவில் வைத்து மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோன் நஷ்ட ஈட்டுத் தொகையை வாழங்கினார்.

மேலும் 8ஆம் நாள் செலவுக்காக 15,000 ரூபாவும், உணவுத் தேவைக்கான பொருள்களும் அமைச்சரால் வழங்கப்பட்டது. சிறுமியின் பெற்றோர் இறுதிப் போரின் போது உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (க-400)

## வன்னியில் இரும்புப் பொருள்களுக்கு பொலிஸார், படையினர் பாதுகாப்பு

வன்னியிலுள்ள இரும்புகளுக்கு பொலிஸாரும் இராணுவத்தினரும் பாதுகாப்பு வழங்குகின்றனர். சட்ட விரோதமாக அவற்றை ஏற்ற முடியாது. அவ்வாறு சட்ட விரோதமாக ஏற்றுபவர்களை ஓமந்தைச் சோதனைச் சாவடியில் வைத்து பொலிஸார் கைது செய் கின்றனர் என்று யாழ். பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

வன்னிப்போரின் போது இடம்பெயர்ந்த மக்களின் சைக்கிள்கள், வாகனங்கள் என்பன கைவிடப்பட்ட நிலையில் உள்ளன. அவற்றை தென் பகுதியிலிருந்து வரும் இரும்பு வியாபாரிகள் சட்டவிரோதமாக இரவு பகலாக வாகனங்களில் ஏற்றிச் செல்கின்றனர் என்று ஊடகவியலாளர்கள் சுட்டிக்காட்டியபோதே எரிக் பெரேரா இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

**தென் பகுதியிலிருந்து வரும் இரும்பு வியாபாரிகள் சட்டவிரோதமாக இரவு பகலாக வாகனங்களில் ஏற்றிச் செல்கின்றனர்**

அங்கிருந்து சட்ட விரோதமாக இரும்புகள் ஏற்ற முடியாது. அவற்றிக்குப் பொலிஸாரும் படையினரும் பாதுகாப்பு வழங்குகின்றனர். சட்ட விரோதமாக இரும்பை ஏற்றிச் செல்லும் இரும்பு வியாபாரிகள் வவுனியா ஓமந்தைச் சோதனைச் சாவடியில் வைத்துக் கைது செய்யப் படுகின்றனர். அந்தக் காணிகளுக்கு உரித்தானவர்கள் தமது காணியிலுள்ள இரும்புகளையே எடுக் கிறார்கள் என்றார். (த-4)

## மன வளர்ச்சி பாதிக்கப்பட்ட யுவதியை வன்புணர்வுக்குட்படுத்தியவருக்கு சிறை

யாழ்ப்பாணம், நவ.03

மனவளர்ச்சி பாதிக்கப்பட்ட யுவதியை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றவாளிக்கு யாழ்.மேல் நீதிமன்றம் 10 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்ததோடு, நஷ்டஈடாக யுவதிக்கு 50 ஆயிரம் ரூபா பணத்தை வழங்கு மாறும் உத்தரவிட்டுள்ளது.

யாழ். மேல் நீதிமன்றில் ஆணையாளர் ஜே. விஸ்வநாதன் முன்னிலையில் இந்த வழக்கு தீர்ப்புக்காக நேற்று வெள்ளிக்கிழமை எடுத்துக் கொள்ளப்பட்டது அதன் போது இந்தத் தண்டனை விதிக்கப் பட்டது.

2007 ஆம் ஆண்டு சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பிரஸ்தாப யுவதியை வன் புணர்வு செய்த குற்றச் சாட்டில் உடுவிலைச் சேர்ந்த கந்தையா தியாக ரட்ணம் (வயது -62) என்பவர் சுன்னாகம் பொலிஸாரினால் கைது செய்யப் பட்டார். அவர் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு சுருக்க முறையற்ற விசாரணை நடைபெற்றது. மல்லாகம் நீதிமன்றினால் சந்தேக நபர் பிணையில் விடுவிக்கப் பட்டிருந்தார்.

சுருக்க முறையற்ற விசாரணை நிறைவடைந்த பின்னர் அது யாழ். மேல் நீதிமன்றுக்குப் பாரப் படுத்தப் பட்டது. வழக்குத் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக் களத்துக்கு அனுப்பி வைக்கப் பட்டது.

சட்டமா அதிபர் திணைக் களத்தினால் 2011 மார்ச் மாதம் சந்தேக நபருக்கு எதிராக யாழ் மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வழக்குத் தொடர்ந்தது.

விசாணைகளின் பின்னர் சந்தேக நபர் நீதிமன்றினால் குற்றவாளியாக இனங் காணப்பட்டார். அதனையடுத்து தீர்ப்புக்காக இந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப் பட்டது.

குற்றவாளியாக இனங் கண்ட தியாக ரட்ணத் துக்கு நீதிமன்று 10 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்தது. பாதிக்கப்பட்ட யுவதிக்கு நஷ்டஈடாக 50 ஆயிரம் ரூபா செலுத்த உத்தரவிட்டமன்று அதனைச் செலுத்தத் தவறின் மேலதிகமாக ஒரு வருட சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

சட்டமா அதிபர் திணைக் களத்தைப் பிரதி நிதித்துவப் படுத்தி சட்டவாதி செல்வி நளினி கந்தசாமி முன்னிலையாகி வாதாடியிருந்தார். எதிரி சார்பில் சட்டத்தரணி என்.ஸ்ரீகந்தா கடுமையாக வாதாடியிருந்த போதும் அவர் குற்றவாளியாக இனங் காணப்பட்டுத் தண்டனை உறுதிப்படுத்தப்பட்டது. (த-4)

## ஆனைக்கோட்டை ஆலயத்தில் திருட்டு

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆனைக்கோட்டை புளியங்காடு பிள்ளையார் கோயிலிருந்து பெறுமதி மிக்க குதிரை, இடப வாகனங்கள் திருட்டுப் போயுள்ளதென மானிப்பாய் பொலிஸார் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 25ஆம் திகதி இவை திருட்டுப் போயுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸ் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (த-4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பளை பஸ் நிலையம் மக்கள் பாவனைக்கு

பளை,நவ. 3

50 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பளை பஸ் நிலையம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தொடக்கம் பொது மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

இந்த பஸ் நிலையம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியடைந்து கடந்த மாதம் திறந்து வைக்கப்பட்ட போதிலும் பயணிகள் வாகனங்கள் வீதியோரத்தில் தரித்து நின்றே பயணிகளை ஏற்றி வந்தன.

இந்த நிலையில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தலைவரின் ஏற்பாட்டின் பிரகாரம் தற்போது வாகனங்கள் பஸ் நிலையத்தில் தரித்து பயணிகளை ஏற்றிச் செல்வதைக் காணமுடிந்தது.

போர் ஆரம்பிப்பதற்கு முன்னர் ஏ-9 வீதியில் செல்லும் அனைத்து பயணிகள் வாகனங்களும் உணவுக்காகவும், தண்ணீர் அருந்துவதற்காகவும் பளை பஸ் நிலையத்தில் தரித்துச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (க-9)

### புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரி கைவேலியில் நெருக்கடிக்கு மத்தியில்

# மருத்துவ வசதி பெறமுடியாது 7 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

முல்லைத்தீவு, நவ.3

**முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பொதுமருத்துவமனை போதிய ஆளணி மற்றும் பௌதிக வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கி வருவதனால் இம்மருத்துவமனையைச் சூழவுள்ள சுமார் 7 ஆயிரம் வரையான குடும்பங்கள் தமது மருத்துவத் தேவைகளைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவு, கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கிய புதுமாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால், இரணைப்பாலை, கோம்பாவில், சிவநகர், ஆனந்தபுரம், வள்ளிபுனம், தேராவில், விசுவமடு ஆகிய கிராமங்களில் வாழும் சுமார் 7 ஆயிரம் வரையான குடும்பங்களின் மருத்துவ தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய நிலையில் புதுக்குடியிருப்பு மருத்துவமனை உள்ளது. இந்த மருத்துவமனையின் கட்டடங்கள் கடந்த போரின்போது அழிவடைந்த நிலையில் தற்போது அவற்றின் கட்டுமானப்பணிகள் இடம்பெற்று வருகின்றன.

புதுக்குடியிருப்பு மருத்துவமனை தற்போது கைவேலி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தில் பல்வேறு நெருக்கடிகளுக்கும் மத்தியில் இயங்கி வருகின்றது.

இந்த நிலையில் தினமும் நூற்றுக்கும் மேற்பட்ட நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவிலும் 15 க்கும் மேற்பட்டவர்கள் உள்நோயாளர் பிரிவிலும் சிகிச்சை பெறுகின்றனர். ஆனால் போதிய கட்டட வசதிகள் இல்லாத நிலையே காணப்படுகின்றது. மேலும் வெளிநோயாளர் பிரிவு கொள்கலன் பெட்டி ஒன்றிலேயே இயங்கி வருகின்றது. அத்துடன் ஒரே ஒரு மருத்துவர் மட்டுமே சேவையாற்றி வருவதுடன் மருத்துவருக்கான விடுதி வசதியும் அமைத்து வழங்கப்படவில்லை.

அத்துடன் குறித்த மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படும் அவசர நோயாளிகளுக்கு சிகிச்சைகள் வழங்க முடியாத நிலை இங்கு காணப்படுவதால் அத்தகைய நோயாளர்கள் அம்புலன்ஸ் மூலம் மோசமான நிலையிலுள்ள பாதைகள் ஊடாக சுமார் 45 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள கிளிநொச்சி அல்லது முள்ளியவளை வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டிய பரிதாப நிலை காணப்படுகின்றது. (க-6)

# வவுனியா தமிழ்ச் சங்கத்தால் திருமூலருக்கும் பெருவிழா

வவுனியா, நவ.3

வவுனியா தமிழ்ச் சங்கத்தினால் திருமூலருக்கு விழா எடுக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

சித்தர்களின் வரிசையில் மூத்தவரும் சைவ சித்தாந்த தத்துவத்தின் முன்னோடியுமான திருமூலர் பெருமானுக்கு வவுனியா தமிழ்ச் சங்கத்தினர் நாளை ஞாயிற்றுக்கிழமை விழாவெடுக்கவுள்ளனர்.

வவுனியா ஆதி விநாயகர் ஆலயத்தின் பாலாம்பிகை மண்டபத்தில் காலை 9.30 மணியளவில் இந்த விழா ஆரம்பமாகவுள்ளது.

தமிழருவி த.சிவகுமாரன் விழாவுக்குத் தலைமை வகிப்பார். மங்கல விளக்கை கதிரவேலு பரமானந்தம் தம்பதிகள் ஏற்றி வைக்க தமிழ் வாழ்த்தை தமிழிசையரசி அருந்ததி சிவக்கொழுந்து பாடவுள்ளார்.

வாழ்த்துரையை வவுனியா நகர சபையின் முன்னாள் தலைவரான என்.ஜி. நாதனும், தொடக்கவுரையை செட்டிகுளம் பிரதேச சபைச் செயலர் சுப்பிரமணியம் விஜயதாசும் வழங்குவார்கள். அடுத்து இடம் பெறும் தமிழோடு இசை பாடல் நிகழ்வில் திருமந்திரப் பாடல்களை ந.பரந்தாமன், திருமதி சிவவதனி பரந்தாமன் ஆகியோர் பாடவுள்ளனர்.

சிறப்பு நிகழ்ச்சியாக மந்திரத்தின் பெருமையை மாநிலம் அறியட்டும் என்ற தொனிப்பொருளில் இடம் பெறும் கருத்துக்களத்தில் முனைவர் கனகசபாபதி நாகேஸ்வரன் நடுவராகக் கடமையாற்றுவார்.

திருமந்திரத்தின் வைப்புமுறை என்னும் பொருளில் பொ. சத்திய நாதனும், திருமந்திரத்தில் வாழ்வியல் என்னும் பொருளில் தமிழருவி த. சிவகுமாரனும், திருமந்திரத்தில் ஆன்மிகம் என்னும் பொருளில் க. ஐயம்பிள்ளையும் உரையாற்றவுள்ளனர்.

வவுனியா தமிழ்ச் சங்கத்தினரின் இதுபோன்ற விழாக்கள் தமிழுக்கும், சைவத்துக்கும் புதிய உத்வேகத்தை அளித்து வருவதாக வவுனியாவிலுள்ள தமிழ் ஆர்வலர்கள் கருத்து வெளியிடுகின்றனர். (க-400-402)



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கூமாங்குளம் இளைஞர் கழகத்தினால் சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கில் தேசிய இளைஞர் சேவைகள் சம்மேளனச் செயலாளர் திருமதி சரோஜா, வளவாளர் திருமதி பாமினி ஆகியோர் உரையாற்றுகின்றனர். மாணவர்கள் அதனை உன்னிப்பாகச் செவிமடுக்கின்றனர். (க-435)

### கலைக்கூறு–1 பயிற்சிகள் இன்றும் நாளையும்

கிளிநொச்சி கல்வி வலயப்பாடசாலைகளின் சாரண ஆசிரியர்களுக்கான கலைக்கூறு -1 பயிற்சிகள் இன்றும் நாளையும் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். கிளிநொச்சி சாரண மாவட்ட சாரண ஆசிரியர்களை பயிற்சிகளில் கலந்து கொள்ளுமாறு சாரணர் மாவட்ட ஆணையாளர் செ. சுப்பிரமணியம் தெரிவித்தார். (3-9)

### சாரணர் தீப்பாசறை

கிளிநொச்சி சாரணர் மாவட்டத்தைச் சேர்ந்த பூநகரிப் பிரதேச பாடசாலைகளின் சாரணர் தீப்பாசறை கடந்த 26 ஆம் 27 ஆம் திகதிகளில் வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. பாசறையில் வலைப்பாடு றோ.க.த.க. பாடசாலை, வேரவில் இந்து ம.வி, கிராஞ்சி அ.த.க. பாடசாலை ஆகியவற்றின் சாரணர்கள் கலந்துகொண்டனர்.

இரு நாள் தீப்பாசறைக்கு விருந்தினர்களாக சாரணர் மாவட்ட ஆணையாளர் செ.சுப்பிரமணியம், உதவித் திட்டமிடல் ஆணையாளர் கு.சுமுகலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். (3-9)

# தொடர்ந்து பெய்த அடைமழையால் 3 ஆயிரத்து 734 குடும்பங்கள் பாதிப்பு

## புதுக்குடியிருப்பு உதவி பிரதேச செயலர் தகவல்

வவுனியா,நவ.3

தொடர்ந்து பெய்து வந்த அடைமழையினால் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 734 குடும்பங்கள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் 206 குடும்பங்கள் தற்காலிகமாக பாடசாலைகளிலும், தேவாலயங்களிலும் தங்கவைக்கப்பட்டுள்ளன. கடந்த 10 நாள்களுக்கு மேலாக பெய்து வந்த தொடர் மழையினால் மீளக்குடியமர்ந்த தற்காலிக கொட்டகைகளில் தங்கியிருந்த மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் வீடுகளுக்குள் வெள்ளநீர் புகுந்ததால் மக்கள் உணவு தேடுவதற்கும் இடர்படுகின்றனர்.

இவர்களுக்கு புதுக்குடியிருப்பு பிரதேச சபையினால் சமைத்த உணவுகள் வழங்கப்படுகின்றன. வெள்ளத்தால் மூவாயிரத்து 732 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 12 ஆயிரத்து 331 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். உடையார்கட்டு தெற்கில் 45 குடும்பங்களைச் சேர்ந்த 182 பேரும், சிதம்பரபுரத்தில் 185 குடும்பங்களைச் சேர்ந்த 567 பேரும், விசுவமடு மேற்கில் 145 குடும்பங்களைச் சேர்ந்த 572 பேரும், விசுவமடு கிழக்கில் 65 குடும்பங்களைச் சேர்ந்த 253 பேரும், தேராவிலில் 46 குடும்பங்களைச் சேர்ந்த 173 பேரும், வள்ளுவர்புரத்தில் 32 குடும்பங்களைச் சேர்ந்த 126 பேரும், மாணிக்கபுரத்தில் [illegible] குடும்பங்களைச் சேர்ந்த [illegible] பேரும், வள்ளுவர்புரத்தில் ணக்கந்தலில் 130 குடும்பங்களைச் சேர்ந்த 511 பேரும், சிவநகரில் 310 குடும்பங்களைச் சேர்ந்த 1248 பேரும், கோம்பாவிலில் 276 குடும்பங்களைச் சேர்ந்த 527 பேரும், புதுக்குடியிருப்பு கிழக்கில் 535 குடும்பங்களைச் சேர்ந்த 1117 பேரும், புதுக்குடியிருப்பு மேற்கில் 204 குடும்பங்களைச் சேர்ந்த 1024 பேரும், மந்துவிலில் 517 குடும்பங்களைச் சேர்ந்த 1596 பேரும், மல்லிகைத்தீவில் [illegible] குடும்பங்களைச் சேர்ந்த [illegible] பேரும், ஆனந்தபுரத்தில் 210 குடும்பங்களைச் சேர்ந்த 727 பேரும், இரணைப்பாலையில் 235 குடும்பங்களைச் சேர்ந்த 949 பேரும், தேவிபுரத்தில் 110 குடும்பங்களைச் சேர்ந்த 350 பேரும், வள்ளிபுனத்தில் 284 குடும்பங்களைச் சேர்ந்த 1028 பேரும், உடையார்கட்டு வடக்கில் 25 குடும்பங்களைச் சேர்ந்த 113 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 206 குடும்பங்களைச் சேர்ந்த 761 பேர் பாடசாலைகளில் மற்றும் தேவாலயங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மந்துவில் அரசரட்ணம் வித்தியாலயத்தில் 71 குடும்பங்களைச் சேர்ந்த 750 பேரும், மல்லிகைத்தீவைச் சேர்ந்த 64 குடும்பங்களைச் சேர்ந்த 277 பேரும், ஆனந்தபுரத்தில் 50 குடும்பங்களைச் சேர்ந்த 200 பேரும், இரணைப்பாலை தேவாலயத்தில் 21 குடும்பங்களைச் சேர்ந்த 88 பேரும் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று புதுக்குடியிருப்பு உதவி பிரதேச செயலர் ஐ.பிரதாப் தெரிவித்துள்ளார். (க-400)

கடந்த 10 நாள்களுக்கு மேலாக பெய்து வந்த தொடர் மழையினால் மீளக்குடியமர்ந்த தற்காலிக கொட்டகைகளில் தங்கியிருந்த மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

### ஹஜ் தின நிகழ்வுகள்

மன்னார்,நவ.3

மன்னார் எருக்கலம்பிட்டியில் வருடா வருடம் நடைபெறும் ஹஜ் தின சிறப்பு நிகழ்வுகள் கடந்த 28 ஆம் 29 ஆம் திகதிகளில் மன்னார் எருக்கலம்பிட்டிக் கிராமத்தில் இடம்பெற்றன.

எருக்கலம்பிட்டிக் கிராமத்தில் உள்ள இளைஞர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த இரண்டு நாள் ஹஜ் தின நிகழ்வுகளில் ஆயிரக்கணக்கான மக்கள் மிகவும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

குறித்த இரு தினங்களும் கடும் மழை பெய்த போதும் மக்கள் அதனை பொருட்படுத்தாது கலந்து கொண்டிருந்தனர்.

புத்தளம் மற்றும் கற்பிட்டி ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்களும் குறித்த நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

இதன் போது கிடுகு பின்னுதல், ஓட்டப்போட்டி, கயிறு இழுத்தல், படகுப் போட்டி உட்பட ஆண், பெண் இருபாலாருக்குமான பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

மன்னார் எருக்கலம்பிட்டியின் 7ஆவது வருட ஹஜ் தின சிறப்பு நிகழ்வுகள் இவை என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதியரசர்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

மாற்றுத் தீர்மானங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக சட்டத்தரணிகள் சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டத்தை எதிர்வரும் 9ஆம் திகதி ஏற்பாடுசெய்ய வேண்டுமெனக் கோரி சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாஸ ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் கடிதமொன்றை சட்டத்தரணிகள் சங்கத்தினர் விரைவில் சமர்ப்பிக்கவுள்ளனர்.

இந்த வேண்டுகோள் கடிதத்துடன் சட்டத்தரணிகளின் கையொப்பமிடப்பட்ட பத்திரத்தையும் அவரிடம் சமர்ப்பிக்கவுள்ளோம் என்றும் சங்கத்தினர் தெரிவித்தனர்.

பிரதம நீதியரசருக்கு எதிராக அரசால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குற்றவியல் பிரேரணையானது, நாட்டின் நீதித்துறையின் சுயாதீனத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளதுடன், நீதித்துறைக்கு விழுந்த பேரிடி என்று சட்டத் தரணிகள் சங்கத்தினர் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் இலங்கை இளைஞர் சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் நலின் போபகே கருத்துத் தெரிவிக்கையில்,

''பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக அரசால் சபாநாயகரிடம் குற்றவியல் பிரேரணையொன்றைச் சமர்ப்பித்தமையானது, ஆளுந்தரப் பால் தனிப்பட்ட முறையில் அவர் மீது பழிதீர்ப்பதற்காக மேற்கொள் ளப்படும் செயல் எனத் தெளிவாகத் தெரிகின்றது.

நீதித்துறையின் சுயாதீனம் தற்போது கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து நாம் போராடத் தயாராகவுள்ளோம். பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பான மாற்று தீர்மானங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக சட்டத்தரணிகள் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டத்தை எதிர்வரும் 9ஆம் திகதி கூட்ட வேண்டுமெனக் கோரி சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாஸ ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிக்கவுள்ளோம். அத்துடன், நாடு முழுவதுமுள்ள சட்டத்தரணிகளின் கையொப்பங்களைப் பெற்று விசேட பத்திரமொன்றையும் அவரிடம் சமர்ப்பிக்கவுள்ளோம்.

மேற்குறிப்பிட்ட கடி தத்தை அடுத்த வார ஆரம்பத்துக் குள் சங்கத்தின் தலைவரிடம் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்'' - என்றார்.

இது தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினர் தகவல் வெளியிடுகையில்,

''பிரதம நீதியரசருக்கு எதிராக அரசால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேற்படி குற்றவியல் பிரேரணை தொடர்பில் மாற்றுத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம்.

சுயாதீன நீதித்துறைக்கு அரசால் பெரும் தாக்குதல் நடத்தப்பட்டுவருகின்றது. பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை, நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண மீதான தாக்குதல் சம்பவங்கள் ஆகியன இதனைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

எனவே, நீதித்துறையின் சுயாதீனத்தைப் பாதுகாப்பதற்கு நாம் நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ளவேண்டும் என்று குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது'' - என்றனர். (த-சி)

## பொய்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

போர் நிறைவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் மாற்றுக் கருத்துக்களை வெளியிடும் தரப்பினர் ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதாகச் சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சுமத்தியுள்ளது. மனித உரிமைக்காகக் குரல் கொடுப்போர் மீது அச்சுறுத்தல் விடுக்கப்படுவதுடன் குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் குறித்தும் அரசு கவனம் செலுத்தாதுள்ளது எனவும் அது குற்றம்சாட்டியுள்ளது.(த)

## அடிபணியார்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

கோலருக்கு எதிராகவும் நிமிர்ந்து நிற்கலாம். இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் பிரதம நீதியரசரும் அத்தகைய ஒரு நிலைப்பாட்டை எடுக்கக்கூடும். ஒரு பிரஜை எடுக்கும் நிலைப்பாட்டிற்கு இலங்கையர்களாகிய நாம் உறுதுணையாக இருக்கவேண்டுமென்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (த-சி)

## யாழ்....

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

யீடு இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன. இது உண்மையெனின் அது கண்டனத்துக்குரியது.

தனது விவகாரங்களைத் தானே கவனித்துக் கொள்வதற்கான பல்கலைக்கழகத்தின் தன்னாட்சி உரிமையைச் சகல தரப்பினரும் மதிக்க வேண்டும் என்று எமது சங்கம் கேட்டுக் கொள்கின்றது.

வரையறுக்கப்பட்ட விதிகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் அமைவாகப் பல்கலைக்கழகம் இயங்குவதற்கு இடையூறுகள் ஏற்பட்டால் அது பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியைப் பாதிக்கும் என்பதை எமது சங்கம் சகலருக்கும் தெளிவுபடுத்த விரும்புகிறது. சமீபத்தில் நடைபெற்ற பல்கலைக்கழக ஆசிரியர்களின் போராட்டத்தில் பல்கலைக் கழகங்களின் சுயாதிபத்தியம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது முக்கியமானதொரு கோரிக்கை என்பதும் குறிப்பிடத்தக்கது - என்றுள்ளது. (த-4)

## வாக்குறுதி...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

லும் அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் மீளாய்வுக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இதனையடுத்து நேற்று ஜெனிவாவில் ஒன்றுகூடிய முக்கிய நாடுகளின் இராஜதந்திரிகள் இலங்கையின் நிலவரம் குறித்து விரிவாக ஆராய்ந்தனர்.

''நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகளின் செயலாக்கம், மனித உரிமைகளின் மேம்பாடு என்பன குறித்து சர்வதேச சமூகத்துக்கு அளித்த வாக்குறுதிகளை இலங்கை முழுமையாக நிறைவேற்றாத சூழ்நிலையில், மீளாய்வுக்கூட்டம் ஐ.நாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் நாட்டின் நீதித்துறையில் இலங்கை அரசு தலையிட்டிருப்பது மோசமான ஒரு பாதையை காட்டி நிற்கின்றது'' என்று மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்ட உயர் மட்ட அமெரிக்க இராஜதந்திரி ஒருவர் குறிப்பிட்டார்.

மேற்படி இராஜதந்திரிகள் மட்டக் கூட்டத்தில் என்ன தீர்மானங்கள் எடுக்கப்பட்டன என்பது குறித்து உடனடியாக எதுவும் தெரியவரவில்லை.

''நீதித்துறையின் சுயாதீனத் தன்மையில் மேற்கொள்ளப்படும் தலையீடுகள் குறித்து மேற்குலக நாடுகள் கண்டுகொள்ளாமல் விடப்போவதில்லை.இலங்கை அரசு நீதித்துறையில் கைவைத்திருப்பதை அழிவு ஒன்றுக்கான ஆரம்பம் என்பதை மட்டும் குறிப்பிட்டு வைக்க விரும்புகிறோம்'' என்றும் அந்த இராஜதந்திரி குறிப்பிட்டார்.

இதேவேளை, கருத்து வெளியிட்ட சுவிட்சர்லாந்து அரசின் இராஜதந்திரி ஒருவர், இலங்கையில் நல்லாட்சி ஒன்று ஏற்படுவதற்கான ஒத்துழைப்புக்களை வழங்க சர்வதேச சமூகம் முயற்சிக்கும் போது அதை நாட்டுக்கு எதிரான சதி என்று கூறி இலங்கை ஆட்சியாளர்கள் மலினப்படுத்துவது கவலைக்குரியது என்று குறிப்பிட்டார்.

## ஷிராணி...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

உரிமைகளைப் பாதுகாப்பதற்கான புத்திஜீவிகள் ஒன்றியம் விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு அரசுக்கு அழுத்தம் கொடுத்தது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

பிரதம நீதியரசருக்கு எதிராகக் குற்றவியல் பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையானது நீதித்துறையின் சுயாதீனத்துக்கு விடுத்துள்ள பெரும் அச்சுறுத்தலாகும். நிறைவேற்று அதிகாரம், அரசமைப்பு, நீதித்துறை ஆகிய மூன்று முக்கிய துறைகளுக்குமிடையில் காணப்படும் சமபலத் தன்மையானது நாட்டின் ஜனநாயக நிலைமைக்குப் பெரும் உந்துசக்தியாக அமையும். நிறைவேற்று அதிகாரமும், அரசமைப்பும் இணைந்து நீதித்துறையின் சுயாதீனத்துக்கு எதிராகப் போர் தொடுக்குமாயின், அது ஏகாதிபத்திய ஆட்சியின் சுயரூபமே என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

அரசின் முறையற்ற கொள்கை முறைகளினால் நிறைவேற்று அதிகாரத்துக்கும், நீதித்துறைக்கு இடையே பெரும் மோதல் ஏற்பட்டுள்ளது. 'திவிநெகும' சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை தமக்குச் சாதகமானதாக மாற்றிக்கொள்ளவே அரசு எண்ணியது. ஆனால், இந்தச் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பானது, அரசின் அபிலாஷைகளுக்கு எதிரானதாக அமைந்ததால் இவ்வாறானதொரு மோதல் நிலைமை தோற்றம் பெற்றுள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடத்திய விசேட கலந்துரையாடலின் பின்னரே பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணையைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அத்துடன், அது சபாநாயகரிடமும் கையளிக்கப்பட்டது.

பிரதம நீதியரசருக்கு எதிராக அரசால் கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணையானது, அவருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிரேரணை அல்ல. நீதித்துறை தொடர்பில் அரசின் உண்மையான நிலைப்பாட்டையே அது வெளிப்படுத்தியுள்ளது.

நீதித்துறைக்கு எதிராக அரசு மேற்கொண்டுள்ள இந்தத் தாக்குதல் நடவடிக்கை அனுமதிக்கக் கூடிய ஒன்றல்ல. அது ஜனநாயக சம்பிரதாயங்கள் மற்றும் தார்மீக உரிமைகளுக்கு எதிரான செயலாகும். எனவே, பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை அரசு உடனடியாகப் புறந்தள்ளிவிட்டு நீதித்துறையின் சுயாதீனத்தை நாட்டில் நிலைநிறுத்த வேண்டும் என நாம் அரசுக்கு அழுத்தம் கொடுக்கின்றோம் - என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 26 இலங்கையரை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

இந்தத் தகவலை ஆஸி. குடிவரவு அமைச்சர் கிறிஸ் போவன் உறுதிப்படுத்தியுள்ளார். அத்துடன், இவர்களுக்கு ஆஸ்திரேலியாவில் இருப்பதற்கு சட்ட உரிமை இல்லை எனவும் அவர் கூறினார்.

விசேட விமானம் மூலம் இவர்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என ஆஸ்திரேலிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதியிலிருந்து 116 இலங்கையர்கள் தாமாக விரும்பி அல்லது கட்டாயத்தின் பேரில் ஆஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்குத் திரும்பியுள்ளனர்.

ஈராக், ஈரான், ஆப்கானிஸ்தான் உட்பட பல நாடுகளிலிருந்து வருவோரின் எண்ணிக்கை குறைவடைந்துவிட்டது. ஆனால் இலங்கையிலிருந்து வருவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது எனவும் ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## இந்தியா...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

யில் நேற்றுச் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்து சமுத்திரப் பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பின் 19ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காகப் புதுடில்லி சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இந்திய வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, வர்த்தக மற்றும் முதலீட்டு பிரச்சினைகள் தொடர்பாக இரு அமைச்சர்களும் கலந்துரையாடியுள்ளதாகவும், அடுத்த இந்திய-இலங்கை கூட்டுக்குழுக் கூட்டத்தை முன்கூட்டியே கூட்டப்படும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

அத்துடன் இலங்கையில் மேற்கொள்ளப்படும் இந்தியாவின் திட்டங்கள் குறித்தும், இந்தியாவில் மேற்கொள்ளும் இலங்கைத் திட்டங்கள் குறித்தும் இருவரும் விவாதித்துள்ளனர். இருநாட்டு மீனவர் அமைப்புகளினதும் கூட்டத்தை முன்கூட்டியே கூட்டுவதற்கு இருவரும் அழைப்பு விடுத்துள்ளனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், இலங்கை இந்தியாவின் முக்கிய பங்காளியாக இருப்பதாகவும், அது தவிர்க்க முடியாத பங்கை வகிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.(த)

## 'திவிநெகும'...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ரின் அறிவிப்பு வேளையில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அவர் சபைக்கு அறியப்படுத்துவார்.

'திவிநெகும' சட்டமூலத்திற்கு ஆதரவாகவும், எதிராகவும் 14 மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டிருந்தன.

குறித்த மனுக்கள் அனைத்தும் ஷிராணி பண்டாரநாயக்க, நிமல் காமினி அமரதுங்க, எஸ்.ஐ. இமாம் ஆகிய நீதியரசர்கள் குழாமினால் மூன்று நாட்கள் ஆராயப்பட்ட பின்னரே அதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஜாதிக ஹெல உறுமய, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய தரப்புகள் உட்பட மேலும் சில தரப்புகள் திவிநெகும விவகாரம் தொடர்பில் நீதிமன்றை நாடியிருந்தன.

குறிப்பாக, திவிநெகும சட்ட மூலம் தொடர்பிலான வடமாகாணத்தின் பிரதிபலிப்பை அதன் ஆளுநர் வெளிப்படுத்த முடியாது எனத் தீர்ப்பளிக்குமாறு கோரும் ரிட்மனுவை கூட்டமைப்பு எம்.பி. மாவை சேனாதிராசா மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட தறுவாயில், இது குறித்தான முடிவை அறிவிக்கும் அதிகாரம் உயர்நீதி மன்றத்துக்கே உள்ளது என மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதனையடுத்து, குறித்த மனு குறித்தான விசாரணைகள் உயர் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழருக்கு...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

வத்தை பீடத்தின் மஹாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கள தேரரும் நேற்று வலியுறுத்தியுள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வுக்காணும் வழிமுறைகள் யாவும் ஸ்தம்பிதமடைந்துள்ள தற்போதைய சூழ்நிலையிலேயே அவர் மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார்.

அத்துடன், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நாட்டில் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிறைவேற்று அதிகாரத்துக்கும் நீதித்துறைக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பனிப்போர் உக்கிரமடைந்து வரும் சூழ்நிலையிலும், மாகாண சபை முறைமை பற்றி அமைச்சர் தினேஷ் குணவர்தன நேற்றுக்காலை கண்டிக்கு விஜயம் செய்து மல்வத்தை பீடத்தின் மஹாநாயக்க திப்பட்டுவாவ சுமங்கள தேரரைச் சந்தித்து கலந்துரையாடினார். அத்துடன்,அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட புதிய உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முறைமை பற்றியும் அமைச்சர் தேரருக்கு விளக்கமளித்தார்.

இதனையடுத்து, அமைச்சரிடம் கருத்து தெரிவித்த மஹாநாயக்க திப்பட்டுவாவே ஸ்ரீசுமங்கள தேரர், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை எமது நாட்டுக்கு உகந்தது அல்ல. நாட்டுக்கு தீங்கை ஏற்படுத்தும் ஒருவரது கையிற்கு அது செல்வதை தடுக்க வேண்டும். இந்த நாட்டின் தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும். அதற்காக மாகாண சபை முறையும் தற்போதைய தேர்தல் முறையும் உகந்தது அல்ல என்று குறிப்பிட்டுள்ளார். (த-சி)

## நீதிதேவதை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

மான நீதித் துறையின் மீது கை வைப்பவர்கள் பாகிஸ்தானில் இடம்பெற்ற துரதிஷ்ட சம்பவத்தை மனதில் கொள்ளவேண்டும். தனது சர்வாதிகார நிர்வாக பலத்தால் நீதிபதியைத் தூக்கி வீசிய ஆட்சித் தலைமையை அந்த நாட்டு மக்கள் ஆட்டம் காணச் செய்துவிட்டனர். இதை இங்குள்ளவர்கள் ஒரு பாடமாகக் கொள்ளவேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பிரதம நீதியரசரை அந்தப் பதவியில் இருந்து தூக்கி வீசும் நோக்குடன் ஆளும் தரப்பினரால் சமர்ப்பிக்கப்படவுள்ள இந்தப் பிரேரணை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே கீர்த்தி தென்னக்கோன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சட்டவாக்கச் சபையும், நீதித்துறையும் சுதந்திரமாகச் செயற்பட வேண்டும். குறிப்பாக இரண்டுக்கும் தனித்தனியான சுதந்திரம் இருக்க வேண்டும். ஆனால் இங்குள்ள சட்டவாக்கம், நீதித்துறையை விழுங்கி ஏப்பம் விட முனைகிறது.

தனிப்பட்ட நபரின் சுயவிருப்புக்காகவே பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது. அது அப்பட்டமானபொய். அனைத்தும் சோடிக்கப்பட்டவை.

பாகிஸ்தானில் இ[illegible] நிலைமை ஏற்பட்ட[illegible] குள்ள பிரதான எதிர்க்கட்சி, கட்சி பேதமின்றி பொதுமக்களை ஒன்று திரட்டி நாடளாவிய ரீதியில் போராட்டம் நடத்தி வெற்றிகண்டது. ஆனால் இங்கு அறிக்கை விடுவதோடு நின்றுவிட்டது என்று கண்டித்த தென்னக்கோன் ஜனாதிபதிக்கும் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் வேறுபாடுகள் ஒன்றும் இல்லை.

மஹிந்த ராஜபக்ஷ தனது அதிகாரத்தைக் கொண்டு சட்டத்தையே மாற்றி தனது ஆட்சிக் காலத்தை காலவரை யற்றதாக்கிவிட்டார். ரணில் விக்கிரமசிங்க தனது தலைமைத்துவ பதவிக்காலத்தை ஆறு வருடங்களாக அதிகரித்து கட்சியின் யாப்பையே மாற்றிவிட்டார். [illegible] தெரிவித்தார் கீர்த்தி தென்னக்கோன். (த-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## 13 ஆவது திருத்தமும் திருகுதாளங்களும்

உள்நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும் சரி இலங்கை தொடர்பாக விஷயம் தெரிந்தவர்களால் அலசப்படுவதும், பத்திரிகைகளில் விமர்சிக்கப்படுவதுமாக இப்பொழுது மூன்று விடயங்கள் இருக்கின்றன.

இவைகளில் ஒன்று, ஜெனிவாவில் மனிதஉரிமைகள் பேரவையில் இலங்கையின் பொறுப்புக்கூறல் தொடர்பாக ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தின் அம்சங்களை எந்தளவு இந்த நாடு நிறைவேற்றியுள்ளது என்பதைப் பற்றியதாகும். இலங்கை அரசாங்கம், தானே நியமித்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தவும் செயற்படுத்தியவைகளைப் பற்றி அறிக்கையிடவும் மனிதஉரிமை பேரவை இலங்கைக்கு அவகாசம் வழங்கியிருந்தது.

இவை தொடர்பாக இலங்கை தயாரித்து வழங்கியுள்ள அறிக்கை இப்பொழுது மனித உரிமைகள் சபையின் பருவகால மீளாய்வுக் கூட்டத்தில் ஆராயப்படுகின்றது. இந்த அறிக்கை மட்டுமல்ல ஏனைய பல நாடுகளும் நிறுவனங்களும் சமர்ப்பித்துள்ள அறிக்கைகளும் ஆராயப்படுகின்றன. தமிழ்நாட்டில் இடம் பெற்ற டெசோ மகாநாட்டு தீர்மானமும் கூட இந்தக் கூட்டத்தில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுவது சாத்தியம். பருவகால ஆய்வின் விவரங்கள், இந்தியாவின் தலைமையில் ஸ்பெயின், மற்றும் பெனின் ஆகிய நாடுகளால் அறிக்கையாகத் தயாரித்து அடுத்து மார்ச் மாதம் நடைபெறும் பேரவை மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிகிறது.

பேரவை மகாநாட்டில் இலங்கை அதிகாரிகள் சமர்ப்பிக்கும் அறிக்கைகளும் சரி, நிகழ்த்தும் உரைகளும் சரி உண்மைகளை மறைப்பதாகவோ, வாக்குறுதிகளை மீறுவதாகவோ இருக்கலாகாது. ஏனென்றால், இங்கே நடைபெறும் சம்பவங்களை, வெளியிடப்படும் கருத்துக்களை எல்லாம் ஐ.நா அங்கத்துவ நாடுகள் அறிந்து வைத்துள்ளன. அவைகளுக்கு புலி ஆதரவாளர்களால் பொய்த் தகவல்கள் கொடுக்கப்படுகின்றன என்று கூறிச் சமாளிக்கவும் முடியாது. அந்த நாடுகளின் குறிப்பாக அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் இந்த விடயங்களில் அக்கறை கொண்டுள்ளன. அவற்றை விரிவாக அறிந்து கொள்வது அவைகளால் முடியாத காரியமுமில்லை.

இந்த நாட்டில் இன நல்லுறவை ஏற்படுத்துவதற்கு முதற் கருவாக அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை எடுக்கும்படி இந்தியா வலியுறுத்தி வருகிறது. ஆனால் அந்தத் திருத்தத்தையே அரசமைப்பில் இருந்து நீக்கிவிட முயற்சிகள் நடைபெறுகின்றன.

பலராலும் அலசப்படும் இன்னொரு விடயமாகும் இது.

2008 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.நா.மனித உரிமைகள் சபையின் பருவகால ஆய்வின்போது இலங்கை அரசாங்கத்தின் சார்பில் 13 ஆவது மற்றும்17 ஆவது அரசமைப்பு திருத்தங்கள் செயல்படுத்தப்படும் என்று இலங்கை சார்பில் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தலைவர்கள் - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் போன்றவர்கள் - இலங்கை இனப்பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தத்தின் கீழ் தீர்வு காணப்படும் என்று பகிரங்கமாகக் கூறியிருந்தார்கள். அதற்கு அப்பாலும் செல்லப் போவதாக ஜனாதிபதி கூறியிருந்தார்.

இப்பொழுது பாதுகாப்புச் செயலாளரும் ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ, அரசின் சகபாடிக் கட்சிகளின் தலைவர்களும் அமைச்சர்களுமான சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ச, தினேஷ் குணவர்தன மற்றும் தீவிர இனவாதிகளுடன், முக்கிய பௌத்த சமயத் தலைவர்களும் 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தை ஒழிப்பதற்குக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அரசமைப்பின் இந்தப் பிரிவை மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு ஒழித்துக் கட்டிவிடலாம் என்பது அவர்களின் எண்ணம்.

அவ்வாறாயின் உலகுக்கும், மனித உரிமைப் பேரவைக்கும், இந்தியாவுக்கும் வழங்கிய வாக்குறுதிகளைக் காற்றில் பறக்க விட்டுவிடலாம் என்பது போலும் இவர்களின் கருத்து. ஆனால் ஒரு விடயத்தை நாம் இங்கு மறந்து விடலாகாது. அரசில் உள்ளவர்களும், பங்காளிக்கட்சிகளும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை ஒழிக்க வேண்டும் என்று கூக்குரல் இட்ட போதிலும், அரசின் தலைவரும் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ இவை பற்றி எதுவும் கூறாமல் இருந்து வருகிறார் என்பதே அது. ஜனநாயக நாடொன்றில் எவரும் பொது விடயங்கள் தொடர்பில் தம் கருத்தை வெளியிடலாம் என்பது அவருடைய எண்ணமாக இருக்கலாம். ஆனால் அரசின் அல்லது கட்சியின் கொள்கை அதுவல்லவென்றால், அதற்கு மாறாக பேசுபவர்களை தலைவர் என்ற முறையில் அவர் கண்டிக்க முடியும், அல்லது தடுக்க முடியும். அவர் கடைப்பிடிக்கும் மௌனத்தின் அர்த்தம் புரியாமல் இருக்கின்றது.

பலராலும் அலசப்படும் மூன்றாவது விடயம் அரசின் நிறைவேற்று துறைக்கும் நீதித்துறைக்கும் இடையில் தோன்றியிருக்கும் முரண்பாடு.

திவிநெகும சட்டமுன்வரைவு தொடர்பாக உயர் நீதிமன்றம் மேற்கொண்ட நிலைப்பாட்டையடுத்து இந்த மோதல் உருவாகியுள்ளது.

பிரதம நீதியரசர் அரசமைப்பை மீறிச் செயல்பட்டுள்ளார் என்றொரு குற்றச்சாட்டை முன்வைத்து அவர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கு நாடாளுமன்றத்தில் இப்போது முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இதன் விளைவு எவ்வாறு அமையும் என்பதை காத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

# வடக்கில் 13 நூலகங்களுக்கு சிறந்த சேவைக்கான விருது

## தேசிய நூலகஆவணமாக்கல் சபை வழங்குகிறது

யாழ்ப்பாணம்,நவ.3

கொழும்பு தேசிய நூலக ஆவணமாக்கல் சபையினால் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட தேசிய வாசிப்பு மாத நூலக சேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தில் சிறந்த சேவைகளை வழங்கிய 13 பொது நூலகங்களுக்கு வடமாகாணத்தில் தேசிய விருதுகள் கிடைத்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் ஒட்டுசுட்டான் பொது நூலகம், கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச சபையின் கிளிநொச்சி பொது நூலகம், மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபையின் மன்னார் பொது நூலகம், மன்னார் மேற்குப் பிரதேச சபையின் அடம்பன் பொது நூலகம், நானாட்டன் பிரதேச சபையின் முருங்கன் பொது நூலகம் ஆகிய வற்றுக்கும் விருதுகள் கிடைத்துள்ளன.

இதில் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் அனலைதீவு பொது நூலகம், சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி பொது நூலகம், சரசாலை பொது நூலகம், கைதடி பொது நூலகம், மிருசுவில் பொது நூலகம் ஆகியவற்றுக்கும் சாவகச்சேரி நகரசபையின் சாவகச்சேரி பொது நூலகம், யாழ்ப்பாண மாநகர சபையின் யாழ்ப்பாணப் பொது நூலகம், நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவில் பொது நூலகம் ஆகியவற்றுக்கும் விருதுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதனைவிட முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் ஒட்டுசுட்டான் பொது நூலகம், கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச சபையின் கிளிநொச்சி பொது நூலகம், மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபையின் மன்னார் பொது நூலகம், மன்னார் மேற்குப் பிரதேச சபையின் அடம்பன் பொது நூலகம், நானாட்டன் பிரதேச சபையின் முருங்கன் பொது நூலகம் ஆகிய வற்றுக்கும் விருதுகள் கிடைத்துள்ளன.

அத்துடன் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை மேற்குப் பிரதேச சபையின் ஈச்சான் தீவு பொது நூலகம், காத்தான்குடி நகர சபையின் காத்தான்குடி பொது நூலகம், செங்கலடி பொது நூலகம், மட்டக்களப்பு மாநகர சபையின் மட்டக்களப்பு பொது நூலகம் ஆகிய வற்றுக்கும் விருதுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. (த-14)

## சந்நிதியான் ஆச்சிரமத்தின் பண்ணிசைப் போட்டி

வடமராட்சி,நவ.3

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை நடத்தவுள்ள திருவாசக விழாவை முன்னிட்டு வடமராட்சிப் பிரதேச மாணவர்களிடையே பண்ணிசைப் போட்டிகள் நடத்தப் படவுள்ளது.

தரம் 5 தொடக்கம் 10 வரையான பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படும் இந்தப் போட்டி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தரம் 5,6 மாணவர்களுக்கு சிவபுராணத்திலிருந்தும், தரம் 7,8 மாணவர்களுக்கு திருவெம்பாவையில் இருந்தும், தரம் 9,10 மாணவர்களுக்கு திருப்பள்ளி எழுச்சியில் இருந்தும் போட்டிகள் நடைபெறும். இவற்றில் நடுவர்கள் கேட்கும் பாடல்களை மோகன இராகத்தில் பாடிக் காட்டுதல் வேண்டும். அத்துடன் போட்டியில் பங்குபற்றும் ஒவ்வொரு பிரிவு மாணவர்களினதும் சமய பாடம் தொடர்பான பொது அறிவும் எழுத்து மூலம் பரீட்சிக்கப்படும்.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் கற்கும் தரம், பாடசாலை, பிறந்த திகதி என்பனவற்றை குறிப்பிட்டு பாடசாலை அதிபர் அல்லது வகுப்பாசிரியர் உறுதிப்படுத்தி எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் திருவாசகப் போட்டிக்கு சந்நிதியான் ஆச்சிரமம், செல்வச்சந்நிதி, தொண்டமானாறு என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள திருவாசக விழாவில் வைத்து வழங்கப்படும். திருவாசக விழாவுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(த-8)

## உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வு

சாவகச்சேரி நகரசபை உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வுகள் எதிர்வரும் ஆறாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

நகரசபை தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மைவிருந்தினராக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலனும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் கோ.சேதுகாவலரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் நகரசபை உத்தியோகத்தர்களின் கலை நிகழ்வுகளும், பிரதேசத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களும், தென்மராட்சி கல்வி வலயத்தில் நல்லொழுக்கமுள்ள மாணவர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

நிகழ்வில் உள்ளூராட்சி சேவையில் 2 வருட சேவையைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோரும் கௌரவிக்கப் படவுள்ளனர். (த-9)

## பரீட்சை வழிகாட்டல் நிகழ்வு

ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்துக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடி செய்முறை பரீட்சை வழிகாட்டல் நிகழ்வு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை நடத்தப்படும்.

கந்தையா உபாத்தியாயர் மண்டபத்தில் ஆசிரியர் பு.கணேசராஜாவினால் நடத்தப்படும் பயிற்சிப் பட்டறையில் ஆர்வமுள்ள ஏனைய கல்லூரி மாணவர்கள் பங்குபற்ற முடியுமெனவும் அவ்வாறு கலந்து கொள்வோர் பாடசாலைச் சீருடையுடனும் ஏனைய ஒழுங்குகளுடனும் உரிய நேரத்திற்குச் சமுகமளிக்குமாறும் கல்லூரி அதிபர் இ.ஈஸ்வரதாசன் அறிவித்துள்ளார். (த)

## தென்னை அபிவிருத்திச் சபைக்கு 28 பட்டதாரிகள்

அண்மையில் பட்டதாரிப் பயிலுநர்களாக நியமனங்கள் பெற்றவர்களுள் 28 பேர் வடபிராந்திய தென்னை அபிவிருத்திச் சபைக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர். இவர்கள் பிரதேச ரீதியாக தென்னை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

(122)

# பனை அபிவிருத்திச் சபையின் தேசிய பனை நடுகை வாரம்

யாழ்ப்பாணம்,நவ.3

பனை அபிவிருத்திச் சபை இந்த வாரத்தை தேசிய பனை நடுகை வாரமாக பிரகடனப்படுத்தியுள்ளதாக சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் அழிவடைந்த பனைவளத்தை மீண்டும் நடுகை செய்யும் வகையில் பனம் நாற்றுக்கள் இந்த வாரத்தில் பெரும் எண்ணிக்கையில் நடுகை செய்யப் படவுள்ளன.

இதற்கென 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பனம் நாற்றுக்கள் தயாராக உள்ளன.

இந்தப் பனம் நாற்றுக்களை நடுகை செய்யும் பணிகள் நேற்று வெள்ளிக்கிழமை கோப்பாயில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கோப்பாய் சந்தியில் இருந்து கைதடி வரை செல்லும் பிரதான வீதியின் இரு மருங்கிலும் இந்தப் பனம் நாற்றுக்கள் நடுகை செய்யப்பட்டன.

நேற்றைய பனம் நடுகை நிகழ்வில் 150 க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் பனம் நாற்று நடுகை தொடர்ந்து குடாநாட்டின் பல இடங்களிலும் ஒருவார காலத்துக்கு இடம்பெறவுள்ளது-என்றார். (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அக்கராயன் பகுதியில் நெற்பயிர்களுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியவாறு வயல் நிலங்களில் தேங்கி நிற்கிறது வெள்ளம். (க-18)

# மழை வெள்ளத்தால் அவதியுறும் முல்லைத்தீவு மாத்தளன் மக்கள்

முல்லைத்தீவு,நவ. 3

தமது சொந்தக்காணிகளுக்குள் அனுமதிக்கப்படாத முல்லைத்தீவு மாவட்டம் மாத்தளன் பகுதியைச் சேர்ந்த மக்கள் மழை வெள்ளம் காரணமாக பெரும் அவல நிலையில் வாழ்ந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் குடியமர்த்தப்பட்ட இடம் தாழ்வான பகுதியாகக் காணப்படுவதால் இவர்கள் அமைத்து வாழும் கூடாரங்கள் தாக்குப் பிடிக்க முடியாத நிலையில் பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும் இவர்கள் மீள் குடியமர்வுக்கென அழைத்து வரப்பட்ட போது ஒரு தறப்பாள் விரிப்பு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இதனால் முகாமிலிருந்து பிடுங்கி எடுத்து வந்த பழைய தகரங்களைப் பயன்படுத்தியே குடிசைகளை அமைத்துள்ளனர்.

மேலும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாகத் தற்காலிக வீடுகள் வழங்கப்படும் என்ற வாக்குறுதி இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. இதனால் அண்மையில் பெய்த கடும் காற்றுடன் கூடிய மழையின் போது இவர்களால் அமைக்கப்பட்ட குடிசைகள் பிடுங்கி எறியப்பட்டன. இதனால் இவர்கள் பெரும் அவலங்களை எதிர்கொண்டனர்.

தம்மைத் தமது சொந்த இடங்களில் குடியமர்த்துவதுடன் தாம் அனுபவிக்கும் அவலங்களுக்கும் முற்றுப் புள்ளி இடவேண்டுமென இந்த மக்கள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனார். (க- 426)

## கனகாம்பிகைக்குளம் நேற்று விவசாயிகளிடம் ஒப்படைப்பு

அக்கராயன், நவ.3

புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்த கிளிநொச்சி கனகாம்பிகைக் குளம் சம்பிரதாயபூர்வமாக விவசாயிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

என்றிப் திட்டத்தின்கீழ் சுமார் 17 மில்லியன் ரூபா செலவில் கிளிநொச்சியின் முக்கிய குளங்களில் ஒன்றாகிய கனகாம்பிகைக்குளம் புனரமைக்கப்பட்டுள்ளது.

இதனை நேற்று முற்பகல் 10 மணியளவில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ திறந்து வைத்ததுடன் விவசாயிகளிடம் சம்பிரதாயபூர்வமாக ஒப்படைத்துள்ளார். இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் எஸ்.சிவபாதம், திட்டமிடல் பணிப்பாளர் செ.மோகனபவன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் என்.சுதாகரன் நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். கிளிநொச்சியின் முக்கிய குளங்களில் ஒன்றாகிய கனகாம்பிகைக்குளம் 10 அடி உயரத்துக்கு நீரைக் கொள்ளக் கூடியது. தற்போது குளம் நிறைந்து வான் பாய்கின்றது.

சுமார் 250 ஏக்கர் மேட்டு நிலப் பயிர்ச் செய்கையை இந்தக் குளத்தின் நீரைக் கொண்டு மேற்கொள்ள முடியுமென்பது குறிப்பிடத்தக்கது. (க-18)

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில்

## தாய், தந்தையரை இழந்த நிலையில் 22 சிறுவர்கள்

கிளிநொச்சி, நவ.3

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் சுமார் 22 சிறுவர்கள் தாய், தந்தை இருவரையும் இழந்த நிலையில் உள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள 18 கிராம அலுவலர் பிரிவுகளிலும் பெறப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் 22 சிறுவர்கள் தாய், தந்தையர் இருவரையும் இழந்த நிலையில் உள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

இதனைவிட சுமார் 503 விதவைப் பெண்கள்தலைமை தாங்கும் குடும்பங்களும் காணப்படுகின்றன. மேலும் 227 ஊனமுற்றோர், 545 முதியோர்களும் இங்கு உள்ளனர்.

சுமார் 3 ஆயிரத்து 45 குடும்பங்களிலேயே மேற்படி தாய், தந்தையர்களை இழந்த 22 சிறுவர்களும் மற்றும் விதவைகள் விசேட தேவையுடையோர், முதியவர்கள் உள்ளடங்கியுள்ளனர்.

இங்குள்ள விசேட தேவையுடையவர்கள் தமது அன்றாடத் தேவைகளுக்கு பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (க-6)

## ஆலய பொதுக் கூட்டம்

கிளிநொச்சி உருத்திரபுரம் சக்திபுரம் முருகன் ஆலய வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

மேற்படி கூட்டம் முற்பகல் 10 மணியளவில் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகவும் இதில் ஆலயத்தின் பூசைகள் தொடர்பாக ஆராயப்படுவதுடன் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறுமெனவும் ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (க-6)

## கடை வாசலில் மின்மாற்றி கிராம மக்கள் அச்சத்தில்



மல்லாவி பிரதான நகரப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையத்தின் முன்பாகப் பொருத்தப்பட்டுள்ள மின்மாற்றி தொடர்பாக இங்கு வரும் மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

தற்போது துணுக்காய், பாண்டியன்குளம் பிரதேசங்களில் பருவமழை ஆரம்பித்துள்ளது. மேலும் இந்தப் பகுதியில் கடந்த காலங்களில் மின்னல் தாக்கத்தினால் பலர் உயிரிழந்தனர். இந்த நிலையில் கடைக்கு முன்பாக இந்த மின்மாற்றி பொருத்தப்பட்டுள்ளமை தொடர்பாக இங்கு வரும் மக்கள் அச்சம் வெளியிட்டு வருகின்றனர்.

எனவே இந்த மின்மாற்றியை முன்னர் இருந்த இடத்தில் பொருத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-415)

## கொட்டப்பட்டுள்ள கருங்கல்லினால் பாதிப்பை எதிர்கொள்ளும் வாகனங்கள்

### யாழ்.-மன்னார் வீதியில் அவலம் காற்றுப் போனால் அதோகதிதான்



மன்னார், நவ.3

யாழ்ப்பாணம் - மன்னார் பிரதான வீதியில் சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் நீளத்துக்கு கருங்கற்கள் கொட்டப்பட்ட நிலையில் கவனிப்பாரற்றுக் காணப்படுவதால் இவ்வழியாகப் பயணிக்கும் ஏராளமான வாகனங்கள் தினமும் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றன.

ஏ-32 என அழைக்கப்படும் யாழ்ப்பாணம் - மன்னார் வீதியின் புனரமைப்புப் பணிகள் கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் இடம்பெற்று வருகின்றன.

மன்னார் நகரிலிருந்து 19 கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள நாயாற்றுவெளிப் பகுதியில் கடந்த ஒரு வருடகாலமாக ஒன்றரைக் கிலோ மீற்றர் நீளத்துக்கு கருங்கற்கள் கொட்டப்பட்ட நிலையில் கவனிப்பாரற்றுக் காணப்படுகின்றது.

இதனால் தினமும் இந்த வீதியால் பயணிக்கும் ஏராளமான வாகனங்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றன.

மேலும் இந்த வீதியில் வாகன ரயர்களைச் சீர்செய்யும் கடைகளும், வாகனங்களைத் திருத்தும் நிலையங்களும் இல்லாததால் வாகனங்களில் செல்பவர்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

காற்றுப் போனால் மோட்டார் சைக்கிள்களில் செல்பவர்கள் அவற்றை நீண்ட தூரத்துக்கு உருட்டிச் செல்வதைக் காணமுடிகின்றது. இந்த வீதியின் அவல நிலை தொடர்பாக எந்தவோர் அதிகாரியும் அக்கறை காட்டுவதாகத் தெரிய வில்லையென பாதிக்கப்படுபவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (க-86)

# மொழி உரிமை இங்கு மீறப்படுவதாலேயே நல்லிணக்கம் ஏற்படுவதற்கு முட்டுக்கட்டை

### வவுனியா நிகழ்வில் சட்டத்தரணி புஞ்சிஹேவா

கிளிநொச்சி,நவ.3

மொழிரீதியான பாகுபாடுகளும் மொழி உரிமை மீறப்படுகின்றமையுமேதான் இனங்களுக்கிடையிலே நல்லிணக்கமும் புரிந்துணர்வும் ஏற்படாதமைக்குக் காரணமாக உள்ளன. இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தைச் சேர்ந்த எஸ்.ஜீ.புஞ்சிஹேவா.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் ஏற்பாட்டில் மொழி உரிமை, மொழிக் கொள்கை தொடர்பாக விளக்கச் செயலமர்வு ஒன்று கடந்த 31ஆம் திகதி வவுனியா குருமன்காட்டில் உள்ள ஆர்.டி.எப் பயிற்சி வள நிலையத்தில் இடம்பெற்றது.

இதில் ஊடகவியலாளர்கள், மொழிச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சிவில் சமூகத்தினர் எனப் பலர் கலந்து கொண்டனர். இதன் போது கலந்து கொண்ட சட்டத்தரணி எஸ்.ஜீ.புஞ்சிஹேவா அங்கு மேலும் கூறியதாவது:-

> 1947 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சோல்பரி அரசமைப்பின் மொழியும் சட்டமும் என்ற பகுதியின் 29 ஆவது சரத்தில் எந்தவொரு இனத்துக்கோ மொழி ரீதியாகவோ பாரபட்சம் காட்டக்கூடாது என்று கூறப்பட்டது.

மொழி உரிமைகள் மீறப்படுகின்ற போது பொது மக்களை விழிப்படையச் செய்ய வேண்டிய பொறுப்பும் உரியவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய கடமையும் ஊடகவியலாளர்களுக்கு உள்ளது. ஆட்சியாளர்கள் தமக்கேற்ற விதத்தில் அரசமைப்புகளை உருவாக்குகின்றார்கள், மாற்றுகின்றார்கள். இதன் போது பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் நாட்டு மக்களும் அவர்களின் இன ஒற்றுமைகளும் தான்.

1947 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சோல்பரி அரசமைப்பின் மொழியும் சட்டமும் என்ற பகுதியின் 29 ஆவது சரத்தில் எந்தவொரு இனத்துக்கோ மொழி ரீதியாகவோ பாரபட்சம் காட்டக்கூடாது என்று கூறப்பட்டது. ஆனால் அதன் பின்னர் பதவிக்கு வந்த அரசு 1978 ஆம் ஆண்டு அரசமைப்பை மாற்றியமைத்த போது மொழி ரீதியாகப் பாகுபாடு காட்டப்பட்டது. தமிழ் மொழி புறந் தள்ளப்பட்டது.

இதன் பின்னர் இடம்பெற்ற அசாதாரண சம்பவங்களைக் கருத்தில் கொண்டு 13 ஆவது திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்டு சிங்களமும் தமிழும் அரச கரும மொழிகள் ஆக்கப்பட்டன. ஆனால் இன்று 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கச் சொல்லிப் பலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர். இது நிறைவேறுமானால் அரச கரும மொழி என்பது மீண்டும் வலுப்பெற்றுவிடும். தமிழ் மொழியும் நீக்கப்பட்டுவிடும். இதனால் இனங்களுக்கு இடையே ஐக்கியத்தையோ நல்லிணக்கத்தையோ ஏற்படுத்த முடியாது. மீண்டும் இனங்களுக்கிடையே குழப்பங்கள்தான் ஏற்படும்.

தற்போது தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு அமைக்கப்பட்டு மொழிரீதியான மேம்பாட்டுக்கும் ஐக்கியத்துக்குமாகச் செயற்பட்டு வருகின்றமை வரவேற்கத்தக்கது. ஆனாலும் தமிழ் மொழி பேசுகின்றவர்கள் சிங்கள மொழி பேசுகின்றவர்களையும் சிங்கள மொழி பேசுகின்றவர்கள் தமிழ் மொழி பேசுகின்றவர்களையும் புரிந்து கொண்டு இன ஐக்கியத்துடன் வாழ்வதற்கான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது அவசியம் என்றார் புஞ்சிஹேவா. (க-426)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேந்தாங்குளத்தில் குடிசைகளின் கூரைகளைப் பிடுங்கிய காற்று

## 60 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் அந்தரிப்பு

வலி.வடக்கு.நவ.3

வலி.வடக்கு சேந்தாங்குளம் பகுதியில் வாழும் சுமார் 60 இற்கும் மேற்பட்ட குடும்பங்களின் தற்காலிகக் கொட்டில்கள் அண்மையில் வீசிய கடும் காற்றினால் சேதமடைந்துள்ளமையால் மக்கள் நிர்க்கதியாகியுள்ளனர்.

கடற்கரையோரத்தில் தற்காலிக கொட்டில்களை அமைத்து இந்தக் குடும் பங்கள் கடந்த ஒரு வருட காலமாக வசித்து வருகின்றன.

**கடற்கரையோரத்தில் தற்காலிக கொட்டில்களை அமைத்து இந்தக் குடும் பங்கள் கடந்த ஒரு வருட காலமாக வசித்து வருகின்றன.**

கடந்த நான்கு நாள்களாகத் தொடர்ந்து பெய்த மழை மற்றும் காற்றினால் இவர்களுடைய கொட்டில்களின் கூரைகள் பிடுங்கி வீசப்பட்ட நிலையில் இவர்கள் பெரும் இன்னல்களை எதிர் கொண்டுள்ளார்.

இவர்களுக்கு வேண்டிய உணவு வசதிகளை பிரதேச சபையினரும் கடற்படையினரும் பிரதேச செயலகத்தினரும் வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-86)

# திருநெல்வேலிச் சந்தையில் பெரும் சுகாதாரச் சீர்கேடு



யாழ்ப்பாணம்,நவ.3

திருநெல்வேலி பொதுச் சந்தையின் ஒரு பகுதியில் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளமை குறித்து விசனம் தெரிவிக்கப்படுகிறது.

வாழைப்பழக் கடையை அண்டிய கட்டடப் பகுதிகளில் குப்பை கூளங்கள் நிறைந்தும் மழை நீர் தேங்கியும் உள்ளமையால் அந்தப் பகுதிகளுக்குள் பாவனையாளர்கள் செல்ல முடியாத நிலை உள்ளது.

சந்தையின் கீழ்த் தளத்தின் மேற்குப் பகுதி வெறிச்சோடிக் கிடப்பதால் அங்கே சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் நிறுத்தப்படுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

உட்பகுதியில் உள்ள கழிவு வாய்க்கால் நீண்ட நாள்களாகத் துப்புரவு செய்யப்படாமையால் அங்கு சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் சந்தை நேரம் முடிந்ததும் மதுபானப் பிரியர்கள் கூடி அட்டகாசம் செய்கின்றனர்.

எனவே இது குறித்து உரிய தரப்பினர் கவனம் செலுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-17)

# இரு பாடசாலைகளில் வகுப்பறைகள் திறப்பு

தென்மராட்சி நவம்.3

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த இரு பாடசாலைகளில் நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறை கட்டடத் தொகுதிகள் இன்று சனிக்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளன.

கைதடி- நாவற்குழி அ.த.க. பாடசாலை கைதடி குருசாமி வித்தியாலயம் ஆகியவற்றில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களே திறந்து வைக்கப்படவுள்ளன.

இன்று மு.ப 10.00 மணிக்கு கைதடி- நாவற்குழி அ.த.க. பாடசாலையிலும் 11.00 மணிக்கு கைதடி குருசாமி வித்தியாலயத்திலும் கட்டடங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்கள் தலைமையில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார். மாகாண வலயக் கல்வித் திணைக்கள அதிகாரிகளும் இதில் கலந்து கொள்வர். (த-9)

# பாவனையற்று ஓட்டோக்கள்

தென்மராட்சி,நவ.3

கால்நடை உற்பத்தித் திணைக்களத்தினால் கடந்த மாதம் வழங்கப்பட்ட ஓட்டோக்கள் பாவனையின்றி வைக்கப்பட்டுள்ளன.

ஓட்டோக்களைச் செலுத்துவதற்கு இன்னமும் சாரதிகள் நியமிக்கப்படாததால் அவை பாவனையின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டக் கால்நடை வைத்தியர் அலுவலகங்கள் மற்றும் சாவகச்சேரி, சண்டிலிப்பாய் ஆகிய கால் நடை வளர்போர் கூட்டுறவு அபிவிருத்திச் சங்கங்களுக்கு கடந்த மாதம் ஓட்டோக்கள் வழங்கப்பட்டிருந்தன.

ஓட்டோக்கள் வழங்கப்பட்ட போதிலும் கால் நடை வைத்தியர் அலுவலகங்களில் சாரதிகள் இல்லாததாலும் வாகனங்கள் வழங்கி ஒரு மாதமாகியும் இதுவரை சாரதிகள் நியமிக்கப்படாததாலும் அந்த ஓட்டோக்கள் பயன்படுத்த முடியாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. (த-9)

# மட்டுவில், கல்வயல் பகுதிகளில் அடிக்கடி ஏற்படும் மின் தடை

தென்மராட்சி,நவ.3

தென்மராட்சி பிரதேசத்திற்கு 'லக்ஸபான' மின் விநியோகம் வழங்கப்பட்ட போதிலும் சில பகுதிகளில் அடிக்கடி மின்தடை ஏற்படுவதாகப் பொது மக்கள் கவலை தெரிவித்தனர்.

மட்டுவில் தெற்கு, மட்டுவில் வடக்கு, சந்திபுரம், கல்வயல், மட்டுவில் கிழக்கு, சரசாலை ஆகிய பிரதேசங்களிலேயே அடிக்கடி மின் தடை ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக இலங்கை மின்சார சபையுடன் தொடர்பு கொண்ட போது,

மீசாலை- புத்தூர் வீதியில் அகலிப்புப் பணிகள் இடம்பெற்றதால் மேற்படி பிரதேசங்கள் 'லக்ஸபான' மின்விநியோகத் திட்டத்தில் இணைக்கப்படாமல் புத்தூர் மீசாலை மார்க்கத்தில் கனகன் புளியடி வரை இணைக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் பெய்த கடும் மழையினால் மரம் முறிந்து வீழ்ந்ததில் மின்கம்பம் சாய்ந்ததாகவும் அப்பகுதியில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில் மின்தடை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# வல்வெட்டித்துறையில் டெங்கு ஒழிப்புத் தீவிரம்



வல்வெட்டித்துறை நனுவிலடிப்பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக டெங்கு நோய் இனங்காணப்பட்டதையடுத்து அந்தப் பகுதியில் இருந்து சுமார் 500 மீற்றர் வரையான பகுதியில் உள்ள வீடுகள், வெற்றுக் காணிகள் கைவிடப்பட்ட வீடுகள் மற்றும் மீன் சந்தைப் பகுதியில் டெங்கு நோய் பரப்பக் கூடிய நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதற்காக புகையூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பருத்தித்துறை சுகாதார வைத்திய பணிமனையுடன் இணைந்து வல்வெட்டித்துறை நகரசபை சுகாதாரப் பிரிவினால் டெங்கு நுளம்புகளை அழிப்பதற்கான இந்தப் புகையூட்டல் நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இதனால் விரைவான சுகாதாரப் பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டமையால் அந்தப் பிரதேசங்களில் டெங்கு நோயைப் பரப்பக்கூடிய நுளம்புகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரக்கூடியதாக இருந்தது.

கொழும்பு மற்றும் தெஹிவளைக்குச் சென்று வருபவர்களே டெங்கு நோயால் பாதிக்கப்படுவதால் இவ்வாறான டெங்கு நோய் பரவும் இடங்களுக்குச் சென்று வருபவர்கள் தம்மை உரிய மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்திக் கொள்ளுமாறு வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் ந.அனந்தராஜ் நகர மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வல்வெட்டித்துறையில் டெங்கு நோய் காணப்பட்ட இரண்டாவது பிரதேசம் இதுவாகும். அதேவேளை நுளம்புகள் பெருகும் இடங்களைத் துப்புரவு செய்து நீர் தேங்கும் இடங்களை மூடி நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வல்வெட்டித்துறை நகர சபையுடன் ஒத்துழைக்குமாறும் நகர சபைத் தலைவர் நகர மக்களிடம் மேலும் கோரியுள்ளார். (த-8)

# வீதி மோசமாகச் சேதம் காயமடைந்தார் முதியவர்

தென்மராட்சி,நவ.3

மோசமான சேதமடைந்த வீதியால் சைக்கிளில் சென்ற முதியவர் வீதியோரத்தில் செல்ல முற்பட்ட வேளையில் தடுமாறி பள்ளத்தில் வீழ்ந்து காயங்களுக்கு இலக்கானார்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மிருசுவில் ஏ-9 வீதியிலிருந்து உசனுக்குச் செல்லும் வீதியில் இடம்பெற்றது.

இந்த வீதி மிகவும் மோசமாக சேதமடைந்து காணப்படுகிறது. இருள் சூழ்ந்த வேளையில் சைக்கிளில் சென்ற முதியவர் வெள்ளத்தில் மறைந்திருந்த குழியில் சைக்கிள் சில்லு இறங்கியதால் தூக்கி வீசப்பட்டு மதகுப் பள்ளத்தில் வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏ-9 வீதியிலிருந்து உசன் கந்தசாமி கோவில் வரையான வீதி கனரக வாகனங்களின் பாவனையால் மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றது.

ஏனைய வீதிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதால் பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் உட்பட விடத்தற்பளை, உசன், கெற்பேலி போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இதேவேளை மீசாலை சந்தியிலிருந்து அல்லாரை ஊடாக கச்சாய்க்குச் செல்லும் வீதியும் சேதமடைந்துள்ளதால் இவ் வீதியினைப் பயன்படுத்துவோரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இந்த வீதிகளைப் புனரமைக்குமாறு உரிய அதிகாரிகளுக்குப் பல தடவைகள் அறிவித்தும் பயன் கிடைக்கவில்லை என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (த-9)

# சாவகச்சேரி நகர சபைகளால் பத்து வீதிகள் புனரமைப்பு

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பத்து வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

முதலாம் வட்டாரத்தில் கேணியடி வடக்கு ஒழுங்கை, இரண்டாம் வட்டாரத்தில் புதிய வீரபத்திரர் வீதி, ஐந்தாம் வட்டாரத்தில் வீரபத்திரர் வீதி, எட்டாம் வட்டாரத்தில் நாகலிங்கம் வீதி, ஒன்பதாம் வட்டாரத்தில் பெருங்குளம் சங்கத்தானை வீதி ஆகியவை சபை நிதியில் புனரமைக்கப்படவுள்ளதாக நகரசபைத் தலைவர் இ.வேதநாயகம்பிள்ளை தெரிவித்தார்.

மேலும் ''புறநெகும'' வேலைத்திட்டத்தின் கீழ் இரண்டாம் வட்டாரத்தில் வெள்ளை மாவடிப் பிள்ளையாரர் கோயில் வீதி, மூன்றாம் வட்டாரத்தில் பங்களா வீதி , ஐந்தாம் வட்டாரத்தில் தாளையடி அம்மன் வீதி இரண்டாம் ஒழுங்கை, ஏழாம் வட்டாரத்தில் ஆடியம்பிட்டி, நுணாவில் கல்வயல் முதலாம் ஒழுங்கை, பதினொராம் வட்டாரத்தில் சப்பச்சிமாவடி வீதி ஆகியவையும் புனரமைக்கப்படவுள்ளன என்றும் தெரிவித்தார். (த-9)

# நல்லூரில் தென்னங்கன்று விநியோகம்

வாழ்வெழுச்சித் திட்டத்தின் ஊடாக நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள குடும்பங்களுக்குத் தலா இரண்டு தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்சமயம் கிடைத்துள்ள 800 தென்னங் கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. ஏனையவர்களுக்குத் தென்னங் கன்றுகளின் அடுத்த தொகுதி வந்து சேர்ந்ததும் வழங்கப்படும். அனேகமாக இந்த மாதம் 15ஆம் [illegible] [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

# அகற்றப்படும் கழிவுப் பொருள்களை மீள்சுழற்சி செய்வதற்கு நிதி ஒதுக்கீடு

வலி.வடக்கு,நவ.3

வலி.தெற்குப் பிரதேச சபையில் கழிவகற்றல் மூலம் பெறப்படும் பொருள்களை மீள் சுழற்சி மூலம் பயன்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்வ தற்கு மத்திய சுற்றாடல் அபிவிருத்தி அதிகார சபை நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டுள்ளது.

வலி.தெற்குப் பிரதே சபை தனது பிரிவில் இருந்து கழிவுகளை அகற்றுவதில் கடந்த காலத்தில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வந்தது.

இந்தநிலையில் மத்திய சுற்றாடல் அபிவிருத்தி அதிகார சபை 78 லட்சம் ரூபா நிதியைக் கழிவுப் பொருள்களை மீள் சுழற்சி மூலம் பயன்படுத்தவும் உக்கக் கூடிய பொருள்களைப் பசளையாக்கவும் தேவையான திட்டத்தை மேற்கொள் வதற்காக இந்தப் பணத்தை வழங்கி யுள்ளதாகப் பிரதேச சபையின் தலைவர் தெரிவித்தார். (த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஜயகாந்துக்கு முன்பிணை



பத்திரிகையாளரை அவதூறாகப் பேசிய வழக் கில் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்துக்கு நிபந் தனையுடன் முன்பிணை வழங்கப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையத்தில் பத்திரிகையாளரை அவதூறாக நாய் என்று திட்டிய வழக்கில் முன் பிணை கோரி விஜயகாந்த் மனு தாக்கல் செய்திருந்தார்.

மேற்படி மனுவை நேற்று முன்தினம் விசாரித்த நீதிபதி, சாட்சிகளை அச்சுறுத்தக் கூடாது எனவும் பொலிஸாரின் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றநிபந்தனையுடன்பிணை வழங்கி உத்தரவிட்டுள்ளார்.

மேலும் ஒரு லட்சம் ரூபா முன்பிணை தொகையாக வழங்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (வ)

# சோனியா, ராகுல் ஆகியோர் மீது நில அபகரிப்புக் குற்றச்சாட்டு

### சுப்பிரமணிய சுவாமி பரபரப்புக் கருத்து

காங்கிரஸ் தலைவர் சோனியா மற்றும் அவரது மகன் ராகுல் ஆகியோர், பொதுத்துறை நிறுவனத்தைக் முறைகேடாகக் கைப்பற்றியுள்ளனர் என்று ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணியசுவாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

சோனியாவும் ராகுலும் இணைந்து பொதுத்துறை நிறுவனத்தை தனியார் நிறுவனமாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இதையொட்டி 25 தனியார் நிறுனங்களை ஒன்றிணைத்து 'யங் இந்தியன்' என்ற நிறுவனத்தை ஆரம்பித்துள்ளனர். அத்துடன், 'அசோசியேட்டட் ஜர்னல்ஸ் லிட்' என்ற பொதுத்துறை நிறுவனத்தையும் கைப்பற்றியுள்ளனர். இந்த 'அசோசியேட்டட் ஜேர்னல்ஸ்' என்ற நிறுவனத்துக்கு 'நேஷனல் ஹெரால்ட் அண்ட் க்வாமி அவாஸ்' செய்தித்தாள் நிறுவனம் மட்டுமின்றி ரியல் எஸ்டேட் மூலம் அதிகமான சொத்துக்கள் டில்லியிலும், உத்தரப்பிரதேசத்திலும் உள்ளன.

மேற்படி நிறுவனத்துக்கும், சோனியாவின் 'யங் இந்தியா' நிறுவனத்துக்கும் முறைகேடான முறையில் சட்டத்துக்கு விரோதமான ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது. இதன் மூலம் டில்லியில் உள்ள 'ஹெரால்ட்' இல்லத்தைக் கைப்பற்ற, சோனியா மற்றும் ராகுல் திட்டமிட்டுள்ளனர். இதன் மதிப்பு ஆயிரத்து 600 கோடி ரூபா-என்றார்.

இந்தக் குற்றச்சாட்டை அகில இந் திய காங்கிரஸ் பொதுச்செயலர் ராகுல் மறுத்துள்ளார். இது தொடர்பாக சுப்பிரமணிய சுவாமிக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.



ராகுல் மறுப்பு

இதேவேளை மேற்படி குற்றச்சாட்டை அகில இந்திய காங்கிரஸ் பொதுச்செயலர் ராகுல் மறுத்துள்ளார். இது தொடர்பாக சுப்ரமணிய சுவாமிக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளார். அதில் தன் மீதான குற்றச்சாட்டில் எந்த உண்மையும் இல்லை. தனது புகழுக்குக் களங்கம் ஏற்படுத்தவே அவதூறான குற்றச்சாட்டு கூறப்பட்டுள்ளது. இது தொடர்பாக சுப்பிரமணிய சுவாமி மீது சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும். என்று தெரிவித்தார். (வ)

## தெலுங்கு தேசக் கட்சியின் முன்னாள் தலைவர் நாயுடு வீதி விபத்தில் சாவு



ஆந்திர மாநிலத்தின் தெலுங்கு தேசக் கட்சியின் மூத்த தலைவரான எர்ரான் நாயுடு(வயது 55) நேற்று முன்தினம் இடம்பெற்ற வீதி விபத்தில் சாவடைந்தார். விழா ஒன்றில் பங்கேற்ற நாயுடு, தனது காரில் வந்து கொண்டிருந்த போது எதிரே வந்த பெற்றோல் டாங்கி லொறி மீது அவரது கார் மோதியதில் நாயுடு படுகாய மடைந்தார்.

உயிருக்குப் போராடிய நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டும் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார்.

அவருடன் காரில் இருந்த மாவட்ட நிர்வாகிகள் இருவரும் காயமடைந்தனர்..

விவசாய குடும்பத்தில் பிறந்து ஸ்ரீகாகுளம் தொகுதியில் 4 முறை நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவர்.

முன்னதாக ஹார்சி சந்திரபுரம் தொகுதியில் 4 முறை சட்டபேரவை உறுப்பினராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார். சட்டம் பயின்ற அவர், பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் விவசாயத் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்தவர். .

தெலுங்குதேசக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுத் தலைவராகவும் இருந்துள்ளார். அவரது உடல் தொண்டர் களின் அஞ்சலிக்காக அவரது வீட்டில் வைக்கப் பட்டுள்ளது. (வ)

## ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்தியா தலையிடவேண்டும்

**மன்மோகனிடம் கனிமொழி நேரில் வலியுறுத்து**

இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்வில் இந்தியா தலையிட வேண்டும் என்று மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரதமர் மன்மோகன் சிங்கை நேற்று முன்தினம் சந்தித்த போதே கனிமொழி இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளர்.

இதன்போது கனிமொழி கோரிக்கை மனு ஒன்றையும் மன்மோகன்சிங்கிடம் கையளித்துள்ளார்.



புதுடில்லியில் உள்ள பிரதமர் மன்மோகன் சிங்கின் வாசஸ்தலத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)



சென்னை ராஜ்பவனில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்து வாழ்த்தினார் ஆளுநர் ரோசையா.

## உலகின் வயதான தம்பதிகளாக பஞ்சாப் மாநிலத்தின் 'ஜோடி'

**சைவ உணவு, காய்கறிகளால் ஆரோக்கியம்**



பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த கரம் சந்த் மற்றும் அவரது மனைவி கடாரி இருவரும் உலகின் மிக வயதான தம்பதிகள் என்ற சாதனையைப் படைத்துள் ளனர்.

உலகின் மிக வயதான தம்பதிகளான அவர்களுக்கு 8குழந்தைகளும், 28 பேரக் குழந்தைகளும் உள்ளனர். அவர்களுக்குத் திருமணமாகி 87 வருடங்கள் கடந்து விட்டன. தங்கள் வாழ்க்கையின் வெற்றியே தனது மனைவியை எப்போதும் நகைச் சுவை சொல்லி சிரிக்க வைத்து பார்த்துக் கொண்டே இருப்பதாகும் என்று 107 வயதாகும் கரம்சந்த் குறிப் பிட்டார். உணவுடன் நகைச்சுவைகளையும் அவர்கள் பகிர்ந்து கொண்டு வாழ்ந்து வரு கின்றனர்.

ஒவ்வொரு சிறிய விடயங்களையும் ஒருவருக் கொருவர் செய்து வருவதே தங்களின் காதல் மற்றும் அன்யோன்யத்தின் இரகசியம் என்று குறிப்பிடுகின்றனர் அவர்கள்.

ஆரோக்கியமான சைவ உணவு, பச்சைக் காய்கறிகள் ஆகியவற்றைச் சாப்பிடுவதே தாங்கள் ஆரோக்கியமாக இருப்பதற்கான காரணம் என்று 100 வயதாகும் கடாரி கூறுகிறார். கடந்த 5 வருடங்களுக்கு முன்பு, கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பெறும் வாய்ப்பை நழுவ விட்ட இந்தத் தம்பதிகள் தற்போதுஅதில் இணைந்து புதிய சாதனை படைத்திருக்கின்றனர். (வ)

### ஸ்பெக்ட்ரம் ஊழலில்

## தயாநிதி மாறன் மீதான வழக்கை விரைந்து விசாரிக்க உத்தரவு

டில்லி, நவ.3

ஸ்பெக்ட்ரம் அலை வரிசை ஒதுக்கீட்டு ஊழலில் தயாநிதி மாறன் தொடர்புடைய ஏர்செல்-மேக்சிஸ் வழக்கை விரைந்து விசாரிக்க வேண்டும் என்று மத்திய புலனாய்வுத் துறைக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஸ்பெக்ட்ரம் அலை வரிசை கோரி ஏர்செல் நிறுவனம் விண்ணப்பித்திருந்தது. ஆனால் அப்போது மத்திய அமைச்சராக இருந்த தயாநிதி மாறன் ஸ்பெக்ட்ரம் அலைவரிசையை ஒதுக்கீடு செய்யாமல் இழுத்தடித்தார் என்று கூறப்பட்டது. பின்னர் ஏர்செல் நிறுவனத்தை மலேசியாவின் மேக்சிஸ் நிறுவனம் வாங்கியதும் ஸ்பெக்ட்ரம் அலை வரிசையை தயாநிதி மாறன் ஒதுக்கீடு செய்தார் என்று [illegible] பட்டது. ஏர்செல் நிறுவ



னத்தை தமது அமைச்சர் பதவியை வைத்து மிரட்டி மேக்சிஸ் நிறுவனத்துக்கு விற்கச் செய்தார் என்றும் இதன் பிரதிபலனாக தயாநிதி மாறனின் சகோதரர் கலாநிதி மாறனின் சன் குழுமத்தில் பெருமளவு பணத்தை மேக்சிஸ் நிறுவனம் முறை கேடு செய்தது என்றும் சுப்பிரமணிய சுவாமி, பிரசாந்த் [illegible] ஆகியோரது வழக்கில் குறிப்பிடப்பட்டுள்து. (வ)

## தரை தட்டிய கப்பலின் ஊழியர் இருவரது சடலங்கள் ஒதுங்கின



சென்னையில் தரை தட்டிய சரக்குக் கப்பலில் இருந்து உயிர் தப்பிக்க குதித்து காணாமல் போன 5 பேரில் இருவரது சடலங்கள் நேற்று கரை ஒதுங்கின.

சென்னையில் 'நீலம்' புயல் நிலைகொண்டிருந்த போது எரிபொருள் இல் லாமல் தவித்த 'பிரதிபா காவிரி' என்ற சரக்குக் கப்பல் அலையால் இழுத்து வரப்பட்டு சென்னை பட்டினப்பாக்கம் கடற்பரப்பில் கரை ஒதுங்கியது. இதனால் கப்பலில் இருந்த உதவிப் பட குகள் மூலம் ஊழியர்கள் பலர் உயிர் தப்பிக்க முயற்சித்தனர். ஆனால் நீலம் புயலின் பேரலைகள் அந்தப் படகுகளை தூக்கிப் புரட்டிப் போட்டன. இதில் தத்தளித்த வர்களை மீனவர்கள் காப்பாற்றி கரை சேர்த்தனர். அவர்களில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் ஐவர் காணாமல் போய் இருந்தன. இந்நிலையில் அந்த 5 பேரில் இருவரது சடலங்கள் நேற்று சென்னை கடற்பரப்பில் கரை ஒதுங்கியுள்ளன. இரு சடலங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும் மூவரைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெறுகின்றது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தோனேசியா ஜனாதிபதி சுசிலோ பாம்பங் யுதோயோனோ, லண்டனில் உள்ள பக்கிங்ஹாம் மாளிகையில் பிரிட்டன் ராணி 2ஆம் எலிசபெத்தைச் சந்தித்தார். அங்கு நடந்த இரவு விருந்தில் இருவரும் கலந்துகொண்டனர்.

## யூதர்களுக்கு எதிராகப் பேசிய டுனீசிய மத போதகர் நாடு கடத்தப்பட்டார்

யூதர்களுக்கு எதிராக கருத்துக்களைப் பரப்பிய குற்றச்சாட்டில் டுனீசிய மத போதகர் ஒருவரை, பிரான்ஸ் நாட்டை விட்டு வெளியேற்றியுள்ளது.

மொஹமட் ஹமாமி என்ற 77 வயதான மத போதகரே இவ்வாறு நாடு கடத்தப்பட்டுள்ளதாக பிரான்ஸ் உள்விவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நாட்டுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ள நிலை யில் பிரான்ஸ் இந்த நடவடிக் கையை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

முகமது நபியை அவமதிக்கும் வாசகம்

## பாகிஸ்தானில் பெண்கள் பாடசாலை சூறையாடல்



பாகிஸ்தானில் முகமது நபியை அவமதிக்கும் வகையில் வாசகம் இடம் பெற்றதால், பெண்கள் பாடசாலை சூறையாடப் பட்டு பொருள்களும் தீ வைத்து எரிக்கப்பட்டன.

பாகிஸ்தானின் லாகூரில் வரலாற்றுப் பிரசித்த பெற்ற மசூதி அருகே பெண்கள் உயர்நிலைப் பாடசாலை செயற்பட்டு வருகிறது.

மேற்படி பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற பரீட்சை வினாத்தாளில் முகமது நபியை அவமதிக்கும் வகையில் வாசகம் இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

இதனால் கோபமடைந்த ஜமாத்-உத்-இஸ்லாமிய மாணவர் இயக்கத்தினரும், மாணவிகளின் பெற்றோரும் ஆவேசத்துடன் பாடசாலை முன்பாகத் திரண்டு போராட்டம் நடத்தினர்.

உடனே பொலிஸார் விரைந்து சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை கலைத்தனர்.

அவர்களில் ஒரு பகுதியினர் திடீரென்று பாடசாலைக்குள் நுழைந்து நிர்வாகியைத் தேடினர். அவர் சிக்கவில்லை. இதனால் அங்குள்ள 3 கட்டடங்களில் இருந்த மாணவிகளை வெளி யேற்றினார்கள்.

பின்னர் அந்தக் கட்டடத்தில் நுழைந்து பொருள்களை அடித்து நொருக்கிச் சூறையாடினர். அங்கிருந்த மேசை- நாற்காலிகள் மற்றும் பொருள்களை வெளியே போட்டு தீ வைத்தனர். பாடசாலை நிர்வாகியின் காரும் தீ வைத்து எரிக்கப்பட்டது.

இதுதொடர்பாக லாகூர் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து பாடசாலை அதிபர் அசிம் பாரூக், ஆசிரியர் அரீபா ஆகிய 2 பேரைக் கைது செய்தனர். அத்துடன் பாட சாலையில் சூறையாடல், தீ வைப்பில் ஈடுபட்ட சிலரையும் பொலிஸார் தேடி வருகின்றனர். (வ)

# மனித உரிமை மீறல்களில் நைஜீரிய இராணுவத்தினர்

## சர்வதேச மன்னிப்பு சபை குற்றச்சாட்டு

நைஜீரிய இராணுவத்தினர் அங்குள்ள பொகோ ஹராம் போராளிக் குழுக்களுக்கு எதிராக பெரியளவில் மனித உரிமை மீறல்களை மேற்கொள்வதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித் துள்ளது.

சட்டவிரோத கொலைகள், காணமற் போதல், சித்திரவதை உட்பட பல மனித உரிமை மீறல்கள் அங்கு இடம்பெறுகின்றன என்று மன்னிப்புச் சபையால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பொகோ ஹராம் போராளிகள் குழு நைஜீரியாவில் இஸ்லாமியர்களுக்கான தனி மாநிலம் ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்படுகின்றது.

2009 ஆம் ஆண்டில் நைஜீரியாவின் வடக்கு மற்றும் மத்திய மாநிலங்களில் அதிரடியான பல தாக்குதல்களை போராளிகள் வெற்றிகரமாக மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அவர்கள் கொலை மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும் பாடசாலைகளுக்கும் எரியூட்டியமையுடன் ஊடகங்களுக்கு எதிரான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

மேற்படி அறிக்கை குறித்து நைஜீரிய இராணுவத்தின் பேச்சாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நைஜீரிய பாதுகாப்புத் தரப்பினர் சட்ட வரையறைக்கு உட்பட்ட வகையிலேயே செயற்படுவதாக குறிப்பிட்டு, மன்னிப்புச் சபையின் அறிக்கையை நிராகரித்துள்ளார். (வ)

**பொகோ ஹராம் போராளிகள் குழு நைஜீரியாவில் இஸ்லாமியர் களுக்கான தனி மாநிலம் ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்படுகின்றது.**

## 'பேய் திருவிழா'வில் நெரிசலில் சிக்கி இளம் பெண்கள் மூவர் உயிரிழப்பு



ஸ்பெயின் நாட்டில் கொண்டாடப்பட்ட 'பேய் திருவிழா' வான ஹலோவீன் விழாவில் கூட்ட நெரிசலில் சிக்கி மூன்று இளம் பெண்கள் உயிரிழந்தனர்.

பேய் வேடமணிந்து தீ மூட்டி கெட்ட ஆவிகளை விரட்டும் சடங்குகள் ஹாலோவீன் விழாவில் நடத்தப்படுவது வழக்கம். அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இந்த விழா கொண்டாடப்படுகிறது.

ஸ்பெயின் நாட்டின் மாட்ரிட் நகரில் உள்ள மைதானத்தில் கடந்த புதன் கிழமை இரவு நடந்த இந்த விழாவில் 10 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர். இந்த விழாவை யொட்டி ஆடல், பாடல் மற்றும் உற்சாகமான நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இதன்போது திடீரென சிலர் தீப் பந்தத்தை பார்வையாளர்கள் மீது வீசியதாகக் கூறப்படுகிறது. இதனால் பயந்துபோன மக்கள் அலறியடித்து வெளியே ஓடினர்.

ஒரே நுழைவாயில் என்பதால் இதன் வழியாக பலரும் வெளியே முயன்றதால் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி மூன்று இளம் பெண்கள் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். (வ)

## டயானா பயணித்த கார் வருகிறது ஏலத்திற்கு



பிரிட்டனின் மறைந்த இளவரசி டயானா பயன் படுத்திய ரோல்ஸ் ரோய்ஸ் கார் ஏலம் விடப்படவுள்ளது. இந்தக் கார் 2 லட்சம் அமெரிக்க டொலர் வரை ஏலம் போகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிக்காகோவில் உள்ள வோலோ ஓட்டோ அருங்காட்சியகம் இந்த ஏலத்தை எதிர்வரும் 9 ஆம் திகதி நடத்தவுள்ளது. மறைந்த இளவரசி டயானாவும், பிரிட்டன் இளவரசர் சார்ள்ஸும் 1985 ஆம் ஆண்டு அமெரிக்கா சென்றிருந்தபோது அப்போதைய ஜனாதிபதி றொனால்ட் றீகன் அவரது மனைவி நான்சி ஆகியோரைச் சந்தித்தனர்.

அப்போது குறித்த காரைப் பயன்படுத்தினர். அமெரிக்காவில் உள்ள பிரிட்டன் தூதரகத்தால் 1979ஆம் ஆண்டு இந்தக் கார் வாங்கப்பட்டது. பின்னர் நிபுணர்கள் 3 ஆண்டுகள் உழைத்து மேற்படி காரை குண்டு துளைக்காத, ஆயுதங்கள் பொருத்தப்பட்ட காராக மாற்றினர். இதற்காக சுமார் ரூ.1.07 கோடி செலவிடப்பட்டுள்ளது.

விஷவாயு மற்றும் வெடி குண்டுகளால் சேதம் ஏற்படாத வகையில் அதிகபட்ச பாதுகாப்புடன் இந்தக் கார் வடிவமைக்கப்பட்டுள்ளது. [illegible] இக்காரின் ஆரம்ப ஏல விலை 10 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## நடிகை ஐஸ்வர்யாராய்க்கு பிரான்ஸின் செவாலியர் விருது

பாரிஸ்,நவ.3

பொலிவூட் நடிகை ஐஸ்வர்யா ராய்க்கு பிரான்ஸின் கலைத்துறைக்கான செவாலியர் உயரிய விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸில் சிவிலியனுக்கு வழங்கப்படும் இரண்டாவது மிக உயரிய விருது இது. இதனை பிரான்ஸ் அரசு சார்பில் இந்தியாவுக்கான பிரான்ஸ் தூதர் பிரான்ஸுவாஸ் ரிசியெர் அறிவித்தார்.

உலக சினிமா மற்றும் இந்திய - பிரெஞ்சு சினிமா இடையில் நல்லுறவை வளர்த்தெடுக்கும் முகமாக சினிமா, கலை, கலாசாரம் போன்ற துறைகளில் ஐஸ்வர்யா ராயின் அர்ப்பணிப்புப் பணிகளை நினைவுகூர்ந்து இவ்விருது வழங்கப்படுகிறது.

ஹிந்தி நடிகர் ஷாருகான், ரகு ராய், நந்திதா தாஸ், ஹாபிப் தன்வீர் மற்றும் உம்பமன்யு சட்டர்ஜீ போன்ற இந்திய கலைஞர்கள் ஏற்கனவே மேற்படி விருதைப் பெற்றுள்ளனர்.

அந்தவரிசையில் ஐஸ்வர்யா ராய்க்கு தற்போது இவ் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் பத்மஸ்ரீ விருதைப் பெற்ற இளவயது நடிகை எனும் பெருமை பெற்றவர் ஐஸ்வர்யா ராய். 2002 ஆம் ஆண்டு அவர் நடித்த தேவதாஸ் திரைப் படம், கேன்ஸ் திரைப்பட விழாவுக்கு இந்தியத் தெரிவாக அனுப்பி வைக்கப்பட்டது.



பிரான்ஸ் மக்களால் அதிக பாராட்டுக்களை இத் திரைப் படம் பெற்றது. கேன்ஸ் திரைப்பட விழா நடுவர் குழுவில் இடம் பெற்ற முதல் இந்திய நடிகை எனும் பெருமையும் ஐஸ்வர்யா ராயைச் சாரும். ஐஸ்வர்யாராயின் பிறந்த தினமான நேற்று முன்தினம் இவ் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## அல்குவைதாவுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் எகிப்தில் கைது

அல்குவைதாவுடன் தொடர்புடைய தீவிரவாதிகள் 12 பேர் எகிப்தில் கைது செய்யப்பட்டனர். எகிப்திலுள்ள சினாய் பகுதியில் தீவிரவாதிகள் அடிக்கடி தாக்குதலில் ஈடுபட்டு வந்தனர். இதனை அடுத்து தலைநகர் கெய்ரோ அருகேயுள்ள நச்செர் நகரில் இராணுவத்தினர் மேற் கொண்ட தேடுதலில் 12 தீவிரவாதிகளைக் கைது செய்தனர். இவர்கள் அனைவரும் அல்குவைதா இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் என்று தெரிய வருகிறது. கைது செய்யப்பட்ட 12 பேரும் எகிப்திலும் வெளி நாடுகளிலும் தாக்குதல்கள் நடத்த சதித்திட்டம் தீட்டினர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பாதுகாப்பு அலுவலகம் அருகே வெடித்தது எரிபொருள் கொள்கலன்

## சவூதியில் 22 பேர் சாவு; 110 பேர் காயம்



ரியாத்,நவ.3

சவூதி அரேபியாவின் தலைநகர் ரியாத்தில் எரிபொருளுடன் சென்று கொண்டிருந்த எரிபொருள் அடங்கிய கொள்கலன் ஒன்று நேற்று முன்தினம் விபத்துக்குள்ளானதில் 22 பேர் உயிரிழந்ததுடன், 110 பேர் காயமடைந்துமுள்ளனர்.

சவூதியின் கிழக்கு மாநிலத்திலுள்ள தொழிற்சாலைகளுடன் கூடிய நகரில் அமைந்துள்ள தேசிய பாதுகாப்புக் கட்டடத்துக்கு அருகில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. தற்போது மீட்புப் பணிகள் துரிதமாக முடுக்கி விடப்பட்டுள்ளன. எனினும் இந்த விபத்தில் உயிரிழந்தவர்கள் தொகை அதிகரிக்கலாம் என்று அச்சம் நிலவுகின்றது.

அதிவேகப் பாதையிலிருந்து கட்டுப்பாட்டை இழந்து பாலத்துக்கு அருகில் மேற்படி கொள்கலன் மோதி விபத்துக்குள்ளானது எனக் கூறப்பட்ட போதும் இந்தச் சம்பவத்தின் பின்னணியில் தீவிரவாதிகளின் சதித் திட்டம் உள்ளதா எனவும் அதிகாரிகள் ஐயப்படுகின்றனர்.

இதேவேளை சவூதியின் தீவிர கட்டுப்பாடுகளால் இந்த விபத்து எப்படி நிகழ்ந்தது என்பது குறித்து நேரில் பார்த்தவர்கள் ஊடகங்களுக்குத் தகவல் கொடுப்பதற்கு அஞ்சுவதுடன் விவரம் தெரிவித்த ஒரு சிலரும் தமது பெயரை வெளியிட விரும்பவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# இஸ்ரேல் மனநோயாளிகள் மீது பாலியல் ரீதியான துன்புறுத்தல்

## மருத்துவர் உட்பட 70 பேர் கைது

இஸ்ரேலில் மன நோயாளிகளை பாலியல் கொடுமைக்கு ஆளாக்கியதாக மருத்துவர்கள் உட்பட 70 பேர் கைது செய்யப்பட்டனர்.

இஸ்ரேலின் பெட்டா திக்வா நகரில் மனநல நிலையம் உள்ளது. இதில் 160 மனநோயாளிகள் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையத்தில் உள்ள நோயாளிகளை கட்டிலில் கட்டி வைத்து பாலியல் கொடுமைக்கு உள்ளாக்குவதாகவும் அடித்து துன்புறுத்துவதாகவும் சுகாதாரத் துறைக்கு கடந்த ஆண்டு முறைப்பாடுகள் கிடைத்தன. அவை குறித்து பொலிஸ் விசாரணை நடத்த அமைச்சகம் உத்தரவிட்டது.

அதன் பேரில் பொலிஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தினர். மனநல மையத்தில் இருந்த கண்காணிப்புக் கமராக்களின் உதவியுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மனநோயாளிகளிடம் மருத்துவர்கள், ஊழியர்கள் முறைகேடாக நடந்ததுடன், பாலியல் ரீதியாக சித்திரவதை செய்தது தெரிய வந்தது. இதையடுத்து மருத்துவர்கள், ஊழியர்கள் உட்பட 70 பேர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டனர். (வ)

# மனித வெடிகுண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய முக்கிய நபர் கைது

## பிரான்ஸிலிருந்து துபாய்க்குச் செல்ல திட்டமிட்ட வேளையில்

மனித வெடிகுண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய முக்கிய தீவிரவாதி போத் சரோலி ஜேர்மனியில் கைது செய்யப்பட்டார்.

2003 ஆம் ஆண்டு நடைபெற்ற மனித வெடி குண்டுத் தாக்குதலில் வியூகம் வகுத்துக் கொடுத் தவர் என்று அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இதனையடுத்து சர்வதேச பொலிஸ் சரோலியை உடனே கைது செய்யுமாறு உத்தரவு பிறப்பித்தது. இந்த நிலையில் சரோலி தன் குடும்பத்தினருடன் மூனிச்சுக்கு வந்துள்ளார் என்று தகவல் கிடைத்தது.

பிரான்ஸில் இருந்து துபாய்க்குச் செல்ல திட்டமிட்டிருந்த நேரத்திலேயே அவர் கைது செய்யப்பட்டார். (வ)

# மகனை 50 முறை கத்தியால் குத்தி படுகொலை செய்த கொடூரத் தாய்

## 7 வயதுப் பாலகனுக்கு நேர்ந்த கதி

கணவர் மீதிருந்த கோபத்தால் அமெரிக்கப் பெண் ஒருவர் 7 வயது மகனை கத்தியால் குத்தி படுகொலை செய்துள்ளார்.

அமெரிக்காவின் சிகாகோ நகரைச் சேர்ந்தவரான எலிசபெத் பிளாகோஸ்கா (வயது 40) என்பவரே தனது கணவன் மீதிருந்த கோபத்தில் 7 வயது மகனை 50 முறை கத்தியால் குத்தி கொலை செய்தார். இதனையடுத்து அந்தப் பெண்ணை கைது செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டதையடுத்து, கைது செய்யப்பட்டார்.

விசாரணையின் போது, லொறிச்சாரதியான தனது கணவர் குழந்தைகள் இருவரையும் கவனிக்கும்படி தன்னிடம் தனிமையில் விட்டதாகவும், அதனால் ஏற்பட்ட கோபத்தால் தான் தனது மகனைக் குத்திக் கொன்றதாகவும் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவில் நடந்த விருந்தில் துப்பாக்கிச்சூடு

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸில் ஹலோவீன் விருந்து நிகழ்வில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் நடைபெற்றுள்ளது.

தெற்கு கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த ஹலோவீன் விருந்தின் போது மேற்படி துப்பாக்கிச்சூடு நடைபெற்றிருப்பதுடன் இதில் குறைந்தது நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தச்சம்பவம் குறித்து ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். உடனடியாக பல் கலைக்கழகச் செயற்பாடுகள் முடக்கப்பட்டு துப்பாக்கிச் சூடு நடந்த வளாகத்துக்குள் மாணவர்களை வரவேண்டாம் என்ற எச்சரிக்கை விடப்பட்டது.

2008 ஆம் ஆண்டு இதே பல்கலைக்கழகத்தில், பிரிஷொன் நெலும் எனும் விளையாட்டு வீரர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதே போன்றதொரு ஹலோ வீன் விருந்தில் அவருடைய கால்களில் மூன்று தடவை சுடப்பட்டது. (வ)


## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் நன்னித்தம்பி சியம்புநாதன்
(ஓய்வு பெற்ற தபாலதிபர்)
திதி: பஞ்சமி

தோற்றம்
19.09.1926

மறைவு
17.10.2011

அன்போடு அரவணைத்து
பாசக் கரம் நீட்டி
எல்லோர் மனதிலும்
நிறைந்தவரே
நேச மோடு எம்மை அழைக்கும்
நெஞ்சத்தை எங்கு காண்போம்.

உடுவில் மேற்கு,
சுன்னாகம்.

(24988)(45.6.7)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### முத்துச்சாமி தங்கராசா
(இ.போ.ச. முன்னாள் சாரதி)

இலக்கண வத்தை, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்துச்சாமி தங்கராசா கடந்த (31.10.2012) புதன்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் பத்மாவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான முத்துச்சாமி - சின்னாச்சி தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான அருணாச்சலம் - அமிர்தம் தம்பதியரின் மருமகனும், ரவிச்செல்வன் (ஆஸ்திரேலியா), ரவிவதனி (லண்டன்), ரவிச்சந்திரிக்கா (சுவிஸ்), ரவிச்சந்திரன் (லண்டன்), ரவீந்திரா (பிரான்ஸ்), சுபாஸ், (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலினி, பூரணானந்தன், உதயகுமார், ஜெயந்தி, காலஞ்சென்ற வர்களான குணம், மீரா ஆகியோரின் பாசமிகு மாமனும், விதுஷா, விதுஷன், தட்ஷா, ஜனந்தினி, யாழினி, ஜனனி, ஜசிந்தன், ஜனார்த்தனன் காலஞ்சென்றவர்களான யரிஷா, சாருஜன், சாருஜா, லக்ஸ்மன் ஆகியோரின் அருமைப் பேரனும், காலஞ்சென்றவர்களான முருகேசு, செல்ல மாணிக்கம், குலசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.11.2012) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி பத்மாவதி
தங்கராசா
(குடும்பத்தினர்).

இலக்கண வத்தை,
உடுப்பிட்டி.

(9/4510) (45.6.7)

## காணி விற்பனைக்கு

அச்சுவேலி, போறம்பலம் தெற்கு, அச்சுவேலியில் 06 (ஆறு) பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0774404269

(24960)(2-6)

## வீடு வாடகைக்கு

282, அரசடி வீதி, நல்லூரில் உள்ள மாடி வீடு தனியார் நிறுவனத்துக்கு வாடகைக்குக் கொடுக்கப்படும்.
தொடர்பு:
0722928781, 072 2058854

## லொறி விற்பனைக்கு

Ashok leyland 1618
Model, LI xxxx
தொடரிலக்கமுடைய
மிகக்குறைந்த தூரம் ஓடிய
அரை பொடி லொறி
விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0776219223

(24989)(2-6-7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும், வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு
17.09.1958

உதிர்வு
04.10.2012

அமரர்
நடராசா இராசலிங்கம்

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசை புரிந்த அன்பு உள்ளங்களுக்கும் ஆறுதல் அஞ்சலிகள் தெரிவித்து கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (03.11.2012) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தேவி கோயிலடி,
ஏழாலை மேற்கு,ஏழாலை .

குடும்பத்தினர்.

(24953) (10,6,7)

## 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயார்
Rajah Mahendran
RETD. SLAF INDRAN
Consultant Vasanthy



Suresh



Priyanthi



Mahendraraj

Vasanthy Sivapatham தத்தின் அன்புப் புதல்வர்கள்

மறைவு
03 . 11 . 1987

இருபத்தைந்து ஆண்டுகள் ஆனாலும் ஆறிடுமோ எம் நெஞ்சம்
அன்பால் அனைவரையும் கவர்ந்துவிட்டு சென்றதேனோ ?
என்றும் நீங்கள் எம் நெஞ்சில் வாழ்ந்திட இறைனைப் பிரார்த்திக்கின்றோம்

வில்லிஸ்தான், மானிப்பாய் வீதி, உடுவில்.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்சந்தை மூலம் வேலைவாய்ப்பு

## மட்டக்களப்பில் விசேட செயற்றிட்டம்



எருவில்,நவ.3

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழில் வாய்ப்பற்ற கல்வி கற்ற இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் விசேட செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் முதல் கட்டமாக மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேசத்துக்குட்பட்ட இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கும் வகையிலான தொழிற்சந்தை மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முதல் நடைபெற்றுவருகின்றது.

தேசிய உற்பத்தி திறன் அமைச்சின் மனித வள வேலைவாய்ப்பு திணைக்களம் இதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழில் வாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளை அரச தொழில் மட்டுமன்றி தனியார் துறைகளுக்குள்ளும் உள்வாங்கும் நோக்குடன் இந்தச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று மட்டக்களப்பு மாவட்ட செயலக மனித வள அபிவிருத்தி மாவட்ட இணைப்பாளர் தெரிவித்தார்.

இந்த தொழிற்சந்தையில் 10 இற்கும் மேற்பட்ட தொழில் வழங்கும் நிறுவனங்கள் தமது சேவையை வழங்கியிருந்ததுடன், மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேசத்துக்குட்பட்ட சுமார் 500 இற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் இதன்போது பயனடைந்துள்ளனர் என்று மண்முனை வடக்கு பிரதேச செயலக மனிதவள உத்தியோகத்தர் மைக்கல் கொலின் தெரிவித்தார். (ச-31)

## 45 பேருடன் தப்பியது பஸ்



பதுளை,நவ.3

கொழும்பு - பதுளை நோக்கிப் பயணித்த இ.போ.ச. பஸ்ஸொன்று அப்புத்தளை பிரதேசத்தில் வைத்து வீதியைவிட்டு விலகிச்சென்று சுமார் 10அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாக இருந்ததை பஸ் சாரதி தமது சாதுர்யத்தை பயன்படுத்தி குறித்த விபத்திலிருந்து பஸ்ஸை மீட்டுள்ளார்.

இந்த பஸ்ஸில் 45 பேர் பயணித்திருந்தமை குறிப் பிடத்தக்கது. அதிக பனிமூட்டம் காரணமாகவே பஸ் வீதியை விட்டு விலகியது என்று பஸ் சாரதி தெரிவித்தார். (ச)

## மூன்றாம் மாடியிலிருந்து குதித்தான் திருடன்

### முறிந்தன இரு கால்களும்

திருடுவதற்காக மாடி வீட்டுத் தொகுதியொன்றுக்குச் சென்ற திருடன் ஒருவன், உரிமையாளரிடமிருந்து தப்பிக்கொள்வதற்காக மாடியிலிருந்து குதித்ததில் தனது இரண்டு கால்களையும் முறித்துக்கொண்ட சம்பவம் கண்டி, மஹியாவ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தின் போது திருடனைப் பிடிப்பதற்கு முற்பட்ட வீட்டு உரிமையாளரும், மாடியிலிருந்து கீழே குதித்ததில் அவருடைய காலொன்றும் முறிந்துள்ளது என்று கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை ஒரு மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

மூன்று மாடிகளைக் கொண்ட இந்த வீட்டில் மூன்று குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்த வீடுகளுக்கு சென்ற திருடன் மூன்றாவது மாடியிலுள்ள வீட்டில் திருடும் போது அதன் உரிமையாளர் கண்டுள்ளார்.

அவரிடம் இருந்து தப்புவதற்காக திருடன் மூன்றாம் மாடியில் இருந்து குதித்துள்ளார். இதன்போதே திருடனது இரண்டு கால்களும் முறிந்துள்ளன.

அவரை பிடிப்பதற்காக முதலாம் மாடியில் இருந்து கீழே குதித்த வீட்டின் உரிமையாளரும் கால் முறிவுக்கு இலக்காகியுள்ளார். தற்போது இந்த இருவரும் கண்டி போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## மின்சாரம் தாக்கி இருவர் சாவு

கண்டி, மடவல பகுதியில் நேற்றுமுன்தினம் இருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்ததுடன், சிறுமியொருவர் படுகாயமடைந்துள்ளார்.

கண்டி, மடவல பசார் பகுதியைச் சேர்ந்த தாயொருவரும் (வயது-58), அவரது மகளுமே (வயது-20) இவ்வாறு உயிரிழந்துள்ளனர். 7 வயதான சிறுமியே படுகாயமடைந்துள்ளார் என்று பொலிஸார் கூறினர். மின்மானியுடன் கட்டப்பட்டிருந்த கொடியில் ஆடைகளை உலர்த்துவதற்காக போட்டபோது, இவர்கள் மின்சாரத் தாக்குதலுக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## சலுகைக்காக தமிழ் பேசும் தலைமைகள் அரசின் சூழ்ச்சிக்கு இரையாகக் கூடாது

### மத்திய மாகாண சபை உறுப்பினர் தெரிவிப்பு

நுவரெலியா,நவ.3

அற்பசொற்ப சலுகைகளுக்காக, சிறுபான்மைத் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை இல்லாதொழிப்பதற்காக இந்த அரசுடன் துணைபோகும் தமிழ் பேசும் தலைமைகள் தனக்குத்தானே பொறி வைக்கும் இந்த அரசின் சூழ்ச்சிக்கு இரையாகக்கூடாது. இந்த அரசின் மிலேச் சத்தனம் தமிழ் பேசும் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளதை உலகமே பார்த்துக்கொண்டிருக்கின்றது.

இவ்வாறு மத்திய மாகாண சபை உறுப்பினர் முரளி ரகுநாதன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் பேசும் தலைமைகள் நாடாளுமன்றில் பிரதம நீதியரசருக்கு ஆதரவாக விசேட பிரேரணை கொண்டு வர வேண்டும். இதுதான் தமிழ் பேசும் தலைமைகள், உரிமைகளை நசுக்குகின்ற இந்த அரசுக்கு போதிக்கின்ற பாடமாக அமையும் .

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் கையெழுத்து இட்டுள்ளார்கள் என்று அறிய முடிகின்றது. இந்தக் கையெழுத்தில் தமிழ்பேசும் தலைமைகள் அரசுக்கு ஆதரவான நிலையைத் தெரிவித்து இருந்தால் தனக்குத் தானே பொறி என்ற ஒரு நிலையை ஏற்படுத்தி தமிழ்பேசும் மக்களுக்கு மறக்க முடியாத செய்தியாக அது அமைந்து விடும்.- என்றார்.(ச)

## காலநிலை ஓரளவு சீராகியது அம்பாறையில் நெற்செய்கை



அம்பாறை,நவ.3

அம்பாறை மாவட்டத்தில் தற்போது காலநிலை சீராகியதைத் தொடர்ந்து நெற்செய்கை நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

இந்த மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் உழவு மற்றும் விதைப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதோடு, நெற்பயிர்களைக் கொண்ட காணிகளில் களைநாசினி விசிறும் நடவடிக்கைகளும் மும்முரமாக நடைபெறுகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் இந்தமுறை சுமார் 83 ஆயிரம் ஹெக்ரெயர் காணிகளில் நெற்செய்கை இடம்பெறவுள்ளது என்று மாவட்டத்துக்குப் பொறுப்பான விவசாய உதவிப் பணிப்பாளர் எம்.எஸ்.அஹமட் சனீர் தெரிவித்தார்.

**அம்பாறை மாவட்டத்தில் இந்தமுறை சுமார் 83 ஆயிரம் ஹெக்ரெயர் காணிகளில் நெற்செய்கை இடம்பெற வுள்ளது**

அம்பாறை மாவட்டம் 4 விவசாயப் பிராந்தியங்களைக் கொண்டதாகும். அவற்றில், அட்டாளைச்சேனைப் பிராந்தியமே அதிகளவு நெற்செய்கைக் காணிகளைக் கொண்டதாகும். (ச)

## சேதமடைந்த பாடசாலையை பார்வையிட்டார் மாகாண உறுப்பினர்




கல்முனை,நவ.3

கல்முனைப் பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை வீசிய கடும் காற்றினால் பாதிக்கப்பட்ட கல்முனை கிறீன்பீல்ட் றோயல் வித்தியாலயத்தை கிழக்கு மாகாணசபை உறுப்பினர், ஆரிப் சம்சுடீன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சென்று பார்வையிட்டார்.

கிழக்கு மாகாணசபையினூடாக இந்தப் பாடசாலைக்கு வேண்டிய உதவிகளை செய்துதருவதாக குறித்த பாடசாலையின் அதிபர் எம்.எஸ்.எம்.பைசாலிடம் அவர் கூறினார். (ச)

## மலையகத்தில் தொடர்ந்து கொட்டுகிறது கடும் மழை

### மேல் கொத்மலை நீர்த்தேக்கம் முழுமையாக நிரம்பியது



மஸ்கெலியா,நவ.3

மலையகத்தில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக புதிதாக அமைக்கப்பட்ட மேல் கொத்மலை நீர்த்தேக்கம் முழுமையாக நிரம்பியுள்ளது.

மகாவலிக் கிளையாற்றின் குறுக்கே தலவாக்கலை பகுதியில் இந்த நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டதன் பின்னர் முழுமையாக நீர் நிரம்பியது இதுவே முதல்தடவை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, டெவோன் மற்றும் சென்கிளயார் நீர்வீழ்ச்சிகளில் நீரின் அளவு அதிகளவில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது


சாமிமலைஓயா, சீதகங்குல ஓயா, மறேஓயா, காட்மோர்ஓயா ஆகிய ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் மவுசாகல நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் சடுதியாக உயரத் தொடங்கியுள்ளது. அதேபோல காசல்- ரீ நீர்த்தேக்கத்திலும் நீர்மட்டம் உயரத் தொடங்கியுள்ளது.

லக்ஸபான, கெனியன் ஆகிய நீர்த்தேக்கங்களின் வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. இந்தநிலையில் கடுமையான காற்றைத் தொடர்ந்து மஸ்கெலியா - நல்லதண்ணி, நோர்வூட் - மஸ்கெலியா ஆகிய பிரதான பாதைகளில் மரங்கள் முறிந்து விழுந்துள்ளதோடு ஆங்காங்கே மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளதால் இந்தப் பாதைகளின் ஊடான வாகனப் போக்குவரத்துகளுக்கு அடிக்கடி இடையூறுகள் ஏற்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பொகவந்தலாவைப் பிரதேசத்தில் வீசிய கடுங்காற்றினால் வீடுகள் சிலவற்றின் கூரைத்தகடுகள் அள்ளுண்டு சென்றன. மலையகத்தில் தற்போது நிலவுகின்ற சீரற்ற காலநிலையினால் அடிக்கடி மின்சாரத் தடை ஏற்பட்டு வருவதோடு மக்களின் இயல்பு வாழ்க்கையும் பெரிதும் பாதிப்படைந்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 06.10.2012 சனிக்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் இராமலிங்கம் ஜெயேந்திரன் (வவா)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 03.11.2012 சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் (05.11.2012) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். எமது குடும்பத் தலைவரின் மறைவையொட்டி பத்திரிகை மூலம் அறிந்து நேரில் ஓடோடி வந்தும், தொலைபேசி மூலமும் எமக்கு ஆறுதல் வழங்கிய அனைத்து அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு இரு கரம் கூப்பி அழைக்கின்றோம்.

பருத்தித்துறை வீதி,
10 ஆம் கட்டை, ஆவரங்கால். 021 7900523

மனைவி, பிள்ளைகள்.

(சி/4513) (2-6-7)

# மரண அறிவித்தல்

## இளையதம்பி சிவானந்தன்

(முன்னாள் இலங்கை வடகிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர், பிரதிச் செயலாளர் - வடக்குக்கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சு, முன்னாள் அதிபர் உரும்பிராய் இந்துக்கல்லூரி, முன்னாள் பதிப்பாளர் - கல்வி வெளியீட்டுத்திணைக்களம்)



கோயிலாக்கண்டியைப் பிறப்பிடமாகவும், கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி சிவானந்தன் கடந்த 30.10.2012 செவ்வாய்க்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளைதம்பி - சீதேவிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான க. இ. குமாரசாமி (முன்னாள் தலைமை ஆசிரியர், கோப்பாய் சரவண பவானந்த வித்தியாலயம்) - சரஸ்வதி (முன்னாள் ஆசிரியை, கோப்பாய் நாவலர் வித்தியாசாலை) தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திரகுமாரி (இளைப்பாறிய உப அதிபர், கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி) அவர்களின் பாசமிகு கணவரும், சுசீந்திரன் (E.soft விரிவுரையாளர்) அவர்களின் அன்புத்தந்தையும், சிவகங்கா (விரிவுரையாளர்- GateWay International School ) அவர்களின் அன்புமாமனாரும், கனகசபாபதி (தேயிலைத் தொழிற்சாலை அதிபர்), சாம்பசிவம் (கணக்காளர்), சிவபாக்கியம் (ஆசிரியை) ஆகியோரின் சகோதரனும், மனோன்மணி, இராஜபூபதி, இராஜகோபால் (முன்னாள் 2 ஆம் செயலாளர், இலங்கை உயர்தானிகர் காரியாலயம் - சுவீடன்), காலஞ் சென்றவர்களான சிவகுமார், அரவிந்தகுமாரி, லோகேஸ்வரன் மற்றும் கிரிஜகுமாரி, Dr.வசந்தகுமாரி, உருத்திரகுமார், ஜெயரட்ணம் (U.K), மகேசன் (U.K), சுகந்தினி ஆகியோரின் மைத்துனரும், அகிலன், ஜனத்தன், ஜெயராம், ஜெயகரி, பிரகதீஸ் ஆகியோரின் பெரியப்பாவும், சுதேசன், சுதர்ஸன் (கிருஷ்ணா), சுபாஷினி, சுகந்தினி, சுமதி ஆகியோரின் சித்தப்பாவும், Dr. இராஜுகன், Dr. ஹமில்டன், சுதர்ஷன் ஆகியோரின் மாமனும் லோகேஷ், சஞ்சயன், திவ்யானி, ஆகாஷ், ரூபீஷினி, ருஷாந்த், யாஷிகா,ஷான், சஜித்வன், ஷரவன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 4164, Sheppard Ave East இல் (Sheppard/ Midland) அமைந்துள்ள Ogden Funeral Home இல் நாளை (04.11.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணி தொடக்கம் 2.00 மணி வரையும், மாலை 05.00 மணி முதல் 09.00 மணி வரையும் பார்வைக்காக வைக்கப்பட்டு மறுநாள் 05.11.2012 திங்கட்கிழமை காலை 09.00 மணி முதல் 11.00 மணி வரை இறுதிக்கிரியைகள் அதே இடத்தில் நடைபெற்று 1591 , Elgin Mills E., இல் அமைந்துள்ள Elgin Mills Cemetery இல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
இ. சாம்பசிவம், சி. இந்திரகுமாரி
905 5540419

தகவல்:
குடும்பத்தினர்.

(24804)(6.7.8)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், வயது 30, சதய நட்சத்திரம், 12 இல் செவ்வாய், கிரகபாவம் 14 உடைய, வங்கியில் பணிபுரியும் அழகிய மணமகனுக்குப் படித்த அழகான மணமகள் தேவை. தொடர்பு: தீர்க்க சுமங்கலி திருமண சேவை
72, அம்மன் வீதி, கந்தர்மடம்.
T.P. 077 662 7047

(24810) (2.6.7)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

45 நாள்கள் நிரம்பிய பூச்சி நீக்கி தடுப்பூசி ஏற்றப்பட்ட ஜேர்மன் செப்பேட் அல்சேசன் குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:0776156807, 021 226 3846
விழுந்தாலடி, கரணவாய், கர வெட்டி.

(25882) (2.6.7)

# மரண அறிவித்தல்கள்

## சிவநெறிப் புரவலர் தம்பியப்பா சண்முகலிங்கம் (J.P)

(உரிமையாளர், நோதேண் இன்டஸ்ரீஸ் (பி) லிமிடெட். யாழ்ப்பாணம், தலைவர், சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம்)



சுருவிலைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், நீராவியடி, பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பியப்பா சண்முகலிங்கம் 28.10.2012 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் இராசலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தம்பியப்பா - கண்ணம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும், சுபோதினி, சுபேந்திரன், Dr. வினோதினி, நந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. உதயகுமரன், பாலாம்பிகை ஆகியோரின் பாசமிகு மாமனும், சத்யனின் அருமைப் பேரனும், மாணிக்கவாசகன், காலஞ்சென்ற சபாநாதன் மற்றும் சிவநாதன், உலகநாதன், நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற Dr.இராசலிங்கம் மற்றும் சிவலிங்கம், மகாலெட்சுமி, ஆனந்தலெட்சுமி, சந்திரமதி, ஸ்ரீஸ்கந்தராஜா, அருள்கந்தராஜன், நவநீதராஜன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.11.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"குற்றாலம்"
43, பிறவுண் வீதி,யாழ்ப்பாணம்.

(24967)(2.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

## அந்தோனிமுத்து கியூபேட் ராஜகுமார் (ராஜன்)



மண்டைதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனி முத்து கியூபேட் ராஜகுமார் (ராஜன்) நேற்றுமுன்தினம் (01.11.2012) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்ரி அந்தோனி முத்து (தேவராசா - இளைப்பாறிய அதிபர்) மற்றும் மேரி மர்த்தீனம்மா (இராசாத்தி) தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், ஜெயாவின் அன்புக் கணவரும், லெனின் றொகானின் அன்புத்தந்தையும், விஜயகுமார் (கனடா), றாஜேஸ் (ஜேர்மனி), காலஞ்சென்ற றட்ணேஸ் மற்றும் ஆனந்தகுமார் (நோர்வே), கமலேஸ் (ஆசிரியை - மன்/ வேப்பங்குளம் அ.மு.க. பாட சாலை), யோகேஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், வசந்தி (கனடா), அன்ரன் (ஜேர்மனி), மரீனா (நோர்வே), மரியதாஸ் (ஆசிரியர் - மன்/ பரிகாரி கண்டல் அ.த.க.பாடசாலை), சத்தியராசா (முருங்கன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், விதுஷன் (கனடா), யோகான், ஜொனி, ஜொபினா (நோர்வே) ஆகியோரின் பெரிய தந்தையும், பிறாங்றாஜ், அன்திறேயான் (ஜேர்மனி), திருஷியா, திவ்வியா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.11.2012) சனிக்கிழமை மாலை 5.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித பேதுருவானவர் ஆலயத்தில் இரங்கல் திருப் பலி நடைபெற்று பின்னர் பூதவுடல் புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5 ஆம் வட்டாரம், மண்டைதீவு.

(24803)(2.6.7)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவின் நினைவு தினம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொழும்பு ஜே.ஆர்.ஜயவர்தன கேந்திர நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிக்குகளுக்கு தானம் வழங்கினார்.

# சமாதானத்துக்கான சகல மத சர்வதேச மாநாடு கொழும்பில்

**இன்று ஆரம்பம்; 600 வெளிநாட்டு பிரதிநிதிகள் வருகை**

கொழும்பு,நவ.3

சமாதானத்துக்கான சர்வ மத, கலாசார சர்வதேச மாநாடு இன்று சனிக்கிழமை முதல் 10 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

அந்த மாநாட்டில் யுனெஸ்கோ தலைவர் கதலின் பொக்யாய் உட்பட 600 வெளிநாட்டு பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர் என்று மத, கலாசார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் ஆலோசகர் வண போதாகம சந்திம தேரர் தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் அமைதி நிலை ஏற்பட்டுள்ள நிலையில் உலக சமாதானத்துக்காக இந்த மாநாட்டை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. பௌத்த மதம் அடங்கலான ஏனைய மதங்களை இணைத்து இந்த மாநாடு நடைபெறுகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த மாநாடு பல நாடுகளில் நடைபெற்றுள்ள தோடு, சகல மதங்களை மதிக்கும் நாடு என்ற வகையில் இலங்கையிலும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ஆஸி.பயணம் விடாது தொடர்கிறது கடற்படையிடம் சிக்கினர் 43 பேர்

**7 பேர் தப்பியோட்டம்**

கொழும்பு,நவ.3

சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவுக்கு தப்பிச் செல்ல முயற்சித்த 43 பேர் கரையோர பாதுகாப்பு மற்றும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நபர்கள் நேற்று முன்தினம் இரவு பேருவளை கடல்வழியாக படகில் ஆஸ்திரேலியா செல்ல முயற்சித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 33 ஆண்களும் 8 பெண்களும் இரு குழந்தைகளும் உள்ளடங்குகின்றனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டோர் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோண மலை மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

படகில் பயணித்த மேலும் 7 பேர் தப்பிச் சென்றுள்ளனர். அவர்கள் குறித்து தகவல் திரட்டப்பட்டு வருவதாக குற்றத்தடுப்புப் பிரிவினர் குறிப்பிட்டனர். (ச)

# அச்சுறுத்தல் நீதித்துறைக்கு

**மனித உரிமைகள் கண்காணிப்பகம் விசனம்**

கொழும்பு,நவ.3

இலங்கை நீதித்துறையின் சுதந்திரம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது என்று சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

**நீதிச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரத்ன மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதை தொடர்ந்து மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது விசனத்தை தெரிவித்துள்ளது.**

சட்டத்தின் ஆட்சி மதிக்கப்பட வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் அழைப்பு விடுத்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இலங்கை அரசின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு எழுதியுள்ள மனுவிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரத்ன மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதை தொடர்ந்து மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது விசனத்தை தெரிவித்துள்ளது.

நீதித்துறையை பயமுறுத்தும் ஒரு முயற்சியாகவே இந்தத் தாக்குதலைக் கருதுவதாக இந்த அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது. (ச)

# அதிக மழையால் மின்சாரத்துக்கான கேள்வி குறைவு

கொழும்பு,நவ.3

அதிக மழை காரணமாக நாளாந்த மின்சாரத்துக்கான கேள்வி 30 வீதமாகக் குறைந்துள்ளது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

குளிர் மற்றும் மின்னல் தாக்க காலநிலையால் குளிர் சாதன இயந்திரம் மற்றும் மின் உபகரணங்கள் , தொலைக்காட்சி போன்றவற்றின் பாவனை குறைந்தமை இதற்கான காரணம் என்று குறித்த சபை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, அதிக மழை காரணமாக காசல்ரீ, மவுசாகல்ல மற்றும் மேல் கொத்மலை நீர்த் தேக்கங்களின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளபோதும் சமணலவெவ மற்றும் ரந்தெனிகல ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 30 வீதமாகவே காணப்படுவதாக இலங்கை மின்சார சபை குறிப்பிட்டுள்ளது. (ச)

## வீடுகளைத் தூக்கியது காற்று...



கடும் காற்றினால் வெள்ளவத்தை கடற்கரை வீதியிலுள்ள குடியிருப்பாளர்களின் வீடுகள் சேதமடைந்துள்ளன. இதனால் பாதிக்கப்பட்ட 24 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 80 பேர் பௌத்த விஹாரையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

# பிரதம நீதியரசரை பழிவாங்குகிறது அரசு

**சரத் பொன்சேகா குற்றச்சாட்டு**



கொழும்பு,நவ.3

பிரதம நீதியரசரை அரசு பழிவாங்க முயற்சிக்கின்றது என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குற்றம் சுமத்தியுள்ளார்.

புறக்கோட்டை சொலிஸ் அரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணை முயற்சிக்கு எதிராக சட்டத்தரணிகள் போராட வேண்டும்.

அரசு தொடர்ச்சியாக நீதிமன்றத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்கின்றது. எனினும், அவை மக்கள் மத்தியில் பிரபல்யம் அடையவில்லை. நீதித்துறையைச் சேர்ந்தவர்கள் அழுத்தம் பற்றி அறிந்திருந்தாலும், அதற்கு எதிராக எவரும் குரல் கொடுப்பதில்லை.

உலக நாடுகளுடன் மற்றும் பிராந்திய வலய நாடுகளுடன் ஒப்பீடு செய்யும் போது இலங்கையில் நீதிமன்றத்துறையின் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன.

நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ண மீது தாக்குதல் நடத்தியவர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை. தற்போது பிரதம நீதியரசரை பழிவாங்கும் படலம் ஆரம்பமாகியுள்ளது. அமைச்சர்கள் கோழைத்தனமான அறிக்கைகளை வெளியிட்டு நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரை அவமரியாதை செய்கின்றனர்.- என்றார்.(ச)

# விடமாட்டேன்; போராடுவேன்!

**பிரதம நீதியரசர் சீற்றம்**



கொழும்பு,நவ.3

குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக சகல வழிகளிலும் போராடுவேன் என்று பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தெரிவித்தார்.

ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக ஆளும் கட்சியினர் குற்றவியல் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்துள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக சகல வழிகளிலும் போராடத் தயார் என்று பிரதம நீதியரசர் தெரிவித்துள்ளார் என்று டுவிட்டர் தகவல் வெளியிட்டுள்ளது. சட்டத்தரணிகளிடம் ஷிராணி பண்டாரநாயக்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். உலகின் பல நாடுகள் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு ஆதரவாக குரல் கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பொன்சேகாவின் எம்.பி. பதவி விவகாரம்; வழக்கை முடிவுக்குக் கொண்டுவரக் குழு

கொழும்பு,நவ.3

முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவின் நாடாளுமன்ற உறுப்புரிமை தொடர்பான வழக்கை முடிவுக்குக் கொண்டுவர தீர்மானித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், மூன்று நீதிபதிகள் கொண்ட குழுவை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நியமித்தது.

சரத் பொன்சேகா, தன்னை நாடாளுமன்ற உறுப்பினராக கணித்து நாடாளுமன்றம் செல்லவும், நாடாளுமன்றத்தில் வாக்களிக்கவும் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டு மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீதான விசாரணையை நிறைவுக்கு கொண்டுவரும் வகையி லேயே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

நீதிபதிகளான சிஸிர டி ஆப்றூ, ஏ.சலாம் மற்றும் உபாலி அபேரத்ன ஆகியோர் கொண்ட குழுவை மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா நியமித்தார்.

இந்த வழக்கு தொடர்பிலான மேலதிக விசாரணை அடுத்த மாதம் 12ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது
வித்தியா

## இன்றைய நாள்
### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நீங்கள் மாறுபட்ட கருத்து உள்ளவர்களிடம் எதிர்பேச்சு பேசாமல் விலகுவது நல்லது. மன அமைதியைப் பாதுகாப்பதால் செயல்கள் சீரான வகையில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் உருவாகிற குளறுபடியை சரி செய்வீர்கள்.

**இடபம்:** எதிர்பார்த்த காரியம் வெற்றிச் செய்தியைத் தரும். நண்பர், உறவினர்களிடம் சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணி சிறப்பாக நிறைவேறும்.

**மிதுனம்:** உங்களின் கடந்தகால சிரம சூழ்நிலைபற்றி பிறரிடம் சொல்ல வேண்டாம். முன்யோசனையுடன் செயற் படுவதால் பணி இலக்குக் குறித்த காலத்தில் நிறைவேறும். உத்தியோகத்தர், பணியாளர்களை ஊக்கப் படுத்தி பணித்தரம் உயர்த்துவர்.

**கடகம்:** உங்களின் கடந்தகால உழைப்புக்கு நற்பலன் கிடைக்கும். உங்கள் செயல் திறனை பிறர் உணர்ந்து பாராட்டுவர். தொழில், வியாபாரம் செழித்து வாழ்வில் நம்பிக்கை அதிகரிக்கும். கூடுதல் பணவரவு கிடைத்து குடும்பத் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:** உங்களைப்பற்றி நல்ல மதிப்பீடு சமூகத்தில் உருவாகும். சிலரிடம் முன்னர் கேட்ட உதவி எளிதாகக் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணியைத் திறம் பட நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த அளவில் பணவரவு இருக்கும்.

**கன்னி:** உங்கள் மனதில் அடுத்தவர் மீதான நம்பிக்கை குறையும். அன்றாட பணிகளை அதிக பொறுப்புணர்வுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவான மந்தநிலை மாறும். அளவான பணவரவு கிடைக்கும்.

**நாளை**

ஐப்பசி -19 ஞாயிற்றுக்கிழமை 04.11.2012
திதி: பஞ்சமி மு.ப. 11.22 வரை
நட்சத்திரம்: திருவாதிரை பி.ப 03.26 வரை
சுபநேரம்: 09.04 - 10.34 வரை
ராகுகாலம்: 04.34 - 06.04 வரை

**துலாம்:** சிறியசெயல்கூட உங்களுக்கு கடினமாகத் தோன்றலாம். குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனை சரியான முறையில் செயற்பட உதவும். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலமான தன்மைகளை பாதுகாப்பது நல்லது. சராசரி அளவில் பணவரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** உங்கள் நலன் விரும்புவர்களின் வாழ்த்து உதவி கிடைக்கும் செயல்களில் புதிய யுக்தியைப் பின்பற்றுவீர்கள். தொழில் வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி உண்டாகும்.

**தனுசு:** நீங்கள் முன்னர் செய்த உதவிக்க நற்பலன் தேடி வரும். உறவினர், நண்பர் பெருமைப்படுத்துவர். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். பணப் பரிவர்த்தனையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**மகரம்:** வழக்கத்துக்கு மாறான பணி உருவாகி தொந்தரவு ஏற்படலாம். தொழில், வியாபாரம் நடத்துபவர்கள் அரசின் சட்ட திட்டங்களைத் தவறாமல் பின்பற்றுவதால் நன்மை ஏற்படும். பணவரவுகளை சிக்கனமாகப் பயன்படுத்து வதால் தேவையற்ற பணக்கடன் பெறுவதைத் தவிர்க்கலாம்

**கும்பம்:** உங்கள் மனதில் இனம் புரியாத சஞ்சலம் ஏற்படலாம். நல்லோர்களின் ஆலோசனை நல்வழியில் செயற்பட ஊக்கம் தரும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணிகளை நிறைவேற்றுவது அவசியம். பணப் பரிவர்த்தனையில் பாதுகாப்பு நடைமுறையை பின்பற்ற வேண்டும்.

**மீனம்:** உங்கள் நண்பரிடம் சொந்த விடயங்களைப் பேசுவீர்கள். நல்ல தீர்வுக்கான ஆலோசனை கிடைத்து மனதில் நம்பிக்கை கொள்வீர்கள். தொழில் வியாபார வளர்ச்சி இலக்கு எளிதில் நிறைவேறும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். உத்தியோகத்தர்கள் பணி இலக்கு நிறைவேற்றி பாராட்டுப் பெறுவீர்கள்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | 4 | 8 | 3 | 9 | | | |
| 8 | | 5 | | | 2 | 1 | | |
| | 3 | | 5 | 7 | | 4 | | |
| 7 | | | | 8 | | 5 | | 6 |
| | | | | 9 | | | | |
| 2 | | 1 | | 6 | | | | 3 |
| | | 2 | | 1 | 6 | | 9 | |
| | | 7 | 3 | | | 6 | | 1 |
| | | | 9 | 2 | 4 | 3 | 5 | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 5 | 6 | 9 | 4 | 7 | 3 | 2 |
| 4 | 6 | 7 | 2 | 3 | 1 | 8 | 9 | 5 |
| 3 | 9 | 2 | 8 | 5 | 7 | 1 | 6 | 4 |
| 7 | 2 | 6 | 1 | 8 | 3 | 4 | 5 | 9 |
| 1 | 5 | 4 | 9 | 7 | 6 | 3 | 2 | 8 |
| 9 | 8 | 3 | 4 | 2 | 5 | 6 | 7 | 1 |
| 6 | 3 | 1 | 5 | 4 | 2 | 9 | 8 | 7 |
| 5 | 7 | 8 | 3 | 1 | 9 | 2 | 4 | 6 |
| 2 | 4 | 9 | 7 | 6 | 8 | 5 | 1 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# யாழ்., வன்னி மாவட்ட மக்களுக்கு ஓர் எச்சரிக்கை!




- எமது தயாரிப்பான "சிதாரா பொன்னாங்காணித் தைலம்" போன்று வடிவமைக்கப்பட்ட "போலியான தைலம்" சந்தையில் விற்கப் பட்டு வருகின்றது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
  இப் போலியான தைலத்தினைப் பயன்படுத்திய பலர் கடுமையான தலைவலி, முடி உதிர்வு, நரை என்பவற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- எனவே நாம் மக்களைக் காப்பாற்றும் பொருட்டு, அவர்கள் போலியான பொன்னாங்காணித் தைலத்தினைக் கண்டு பிடிக்க கீழே இரண்டு வழிமுறைகளைத் தருகின்றோம்.

1). ஒறிஜினல் சிதாரா பொன்னாங்காணித் தைலத்தில் மட்டுமே 'சிதாரா டிஸ்பென்சரி' என ஆங்கிலத்தில் எழுதப்பட்டு **வைத்திய முத்திரை** பொறிக்கப்பட்டிருக்கும். அவ்வாறு வைத்திய முத்திரை பொறிக்கப்படாத பிளேன் (Plain)மூடிகளை உடைய தைலம் **போலியானது.**




ஒறிஜினல் சிதாரா
பொன்னாங்காணித் தைலத்தின் மூடி.



சிதாரா வைத்திய முத்திரை
பொறிக்கப்படாத பிளேன்(Plain)
மூடி. போலியான தைலம்

**2).மற்றைய வழி:**
ஒறிஜினல் சிதாரா பொன்னாங்காணித் தைலத்தின் பெட்டியில் 'சிதாரா பொன்னாங் காணித் தைலம்' என குறிப்பிடப்பட்டுள்ள பளபளப்பான சதுர வடிவ கீழே காட்டப் பட்டுள்ள 'ஸ்ரிக்கர்' ஒட்டப்பட்டிருக்கும்.




(சி/4378)(5-6-7)

**எனவே மக்களே! இனியும் போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள். போலியான தைலங்கள் உங்கள் ஆரோக்கியத்திற்குக் கேடு விளைவிக்கும் என்பதை மறந்து விடாதீர்கள்!!**

**சிதாரா பொன்னாங்காணித் தைலம் விற்பனை செய்யும் விற்பனையாளர்களின் கவனத்திற்கு!**

- அன்பார்ந்த விற்பனையாளர்களே நீங்கள் சிதாரா பொன்னாங்காணித் தைலத்தினை வாங்கும்போது தயவு செய்து மூடியில் சிதாரா வைத்திய முத்திரை பொறிக்கப்பட்டுள்ளதா எனவும், பெட்டியின் மேலே குறிப்பிடப்பட் டுள்ள பளபளப்பான சிதாரா பொன்னாங் காணித் தைலம் ஒறிஜினல் என அச்சிடப்பட்ட சதுர வடிவ ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டுள்ளதா எனவும் பார்த்து வாங்கவும்.
- போலியான தைலங்களை நீங்கள் விற்பதனால்,மக்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.
- நீங்கள் 'சிதாரா பொன்னாங்காணித் தைலத்தினை' வாங்கும் போது எமது சிதாரா தயாரிப்புக்களின் கடந்த ஒரு தசாப்த கால வடமாகாண ஏக விநியோகஸ்தரான ***சிவா நறுமணப் பூங்கா (இல.288.ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 2567)*** நிறுவனத்தில் மட்டுமே கொள்வனவு செய்யுமாறு வேண்டுகின்றோம்.

குறிப்பு:
**மக்களே! போலித் தைலத்தினைப் பாவித்து அதனால் நீங்கள் எதிர்நோக்கும் பாரதூரமான விளைவுகளுக்கு நாம் பொறுப்பல்ல என அறியத் தருகின்றோம்.**

**கார்குழல் வளர்ச்சியில் கவரிமான் கூந்தலின் கருமைக்கும், பெருமைக்கும் என்றும் பாவியுங்கள் 'ஒறிஜினல் சிதாரா பொன்னாங்காணித் தைலம்'**

Manufactured by:
**SITHARA AYURVEDIC PHARMACY**
Puttalam Road, Chilaw, Srilanka.
Tel.: + 94 032 222 2773, (Reg.Number 6382)AR/PRNo.228


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எல்லா மாவட்டங்களிலும் மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# தமிழீழம் குறித்து பொது வாக்கெடுப்பு ஐ.நா. சபை மூலம் நடத்தப்படவேண்டும்



இலங்கையில் தமிழர்களின் நிலை குறித்து மதிப்பீட்டாய்வு தற்போது ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் நடைபெற்று வருகிறது. இதில் பசுமைத்தாயகம் சார்பில் ஜி.கே.மணி, இர.அருள் ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

இது குறித்து பா.ம.க சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,''ஒக்டோபர் 31ஆம் திகதியன்று ஜெனிவாவில் நடைபெற்ற முன்னோட்ட விசாரணையில் ஜி.கே. மணி உட்பட உலகம் முழுவதிலும் இருந்து ஏராளமான மனித உரிமை அமைப்புகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஜி.கே. மணி முன்வைத்த வாதங்களில், இலங்கையில் நடப்பதை உள்நாட்டுப் பிரச்சினையாகப் பார்க்காமல், இன அழிப்பாகத்தான் பார்க்க வேண்டும். இலங்கைப் போரில் பாதிக்கப்பட்ட தமிழர்கள் அனைவரையும் அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழீழம் குறித்து ஐ.நா. மூலம் பொது வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்று கூறினார்.

தொடர்ந்து நேற்று நடைபெற்ற காலமுறை மதிப்பீட்டாய்விலும், ஜி.கே. மணி யும், அருளும் பங்கேற்று வாதங்களை முன்வைத்தனர்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)



கடந்த ஞாயிற்றுக்கிழமை மரியாயின் சேனை ஆரம்பிக்கப்பட்டு 75 ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி யாழ். நகரில் செபமாலைப் பேரணி இடம்பெற்றது. அதன் முடிவில் யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் திருப்பலி இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதியால் திருச்சொரூப ஆசி வழங்கப்பட்டது. (3-23)

## சாவகச்சேரியில் 600 நோயாளருக்கு ஒரேநாளில் சிகிச்சை

தென்மராட்சி பிரதேசங்களில் அண்மையில் பெய்த மழையைத் தொடர்ந்து சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது. பல்வேறு நோய்களினால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். கடந்த முதலாம் திகதி மட்டும் 600 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவிலும் விடுதிகளிலும் சிகிச்சை பெற்றுள்ளனர். (3-9)

# சோலையில் குரங்குக் கூட்டம் அகற்றி உதவுமாறு கோரிக்கை

### வருமானம் இழப்பு, கூரைகள் சேதம்

தென்மராட்சி, நவ.3

மீசாலைப் பகுதியில் கூட்டமாகக் காணப்படும் குரங்குகளை அங்கிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு அந்தப் பகுதி மக்கள் உரிய அதிகாரிகளைக்கோரியுள்ளனர்.

பழ வகைகளுக்கு பிரசித்தி பெற்ற மீசாலைப் பகுதியில் பெருமளவு குரங்குகள் கூட்டமாக வருவதால் தமது காணிகளில் உள்ள பயிர்களை நாசப்படுத்துவதுடன்பாய்ந்துசெல்கையில் வீடுகளின் கூரை ஓடுகளையும் சேதமாக்கி விடுகின்றன. இதனால் தமக்கு பெரிய வருமான இழப்புக்களுடன் அடிக்கடி திருத்தங்கள் மேற்கொள்வதால் ஒவ்வொரு மாதமும் செலவுகள் ஏற்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

மாமரங்களில் காணப்படும் அனைத்து காய்களையும் பிடுங்கி அழிப்பதால் வருமானம் எதையும் பெறமுடியவில்லை யெனவும் குறிப்பிட்டு, பிரதேசத்தில் காணப்படும் குரங்குகளை அகற்ற நட வடிக்கைமேற்கொள்ளுமாறு கோரியுள்ளனர். (3-9)

## விழிப்புணர்வு அஞ்சலோட்டம்

தென்மராட்சி, நவ.3

சாவகச்சேரி நகரசபையினர் உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வையொட்டி பாடசாலை மாணவர்கள் மூலம் விழிப்புணர்வு அஞ்சலோட்டத்தை நடத்தவுள்ளனர்.

உலக உளநல தினம் உலக நல்லொழுக்க தினம் ஆகியவற்றைக் கடைப்பிடிக்கும் முகமாக இந்த விழிப்புணர்வு அஞ்சலோட்டத்தை நடத்தவுள்ளனர்.

எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி முன்றிலில் ஆரம்பமாகி உளநல, நல்லொழுக்க விழிப்புணர்வு பற்றிய பதாகைகள் தாங்கிய வண்ணம் அஞ்சலோட்டமாக நகரசபை முன்றிலை வந்தடைவர்.

நகரசபை எல்லைக்குட்பட்ட மாணவர்கள் இந்த விழிப்புணர்வு அஞ்சலோட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளதாக நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார்.

உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வில் உளநலமற்றும் நல்லொழுக்கம் பற்றிய விழிப்புணர்வு நாடகம் சபை உத்தியோகத்தர்களால் நடத்தப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (3-9)

ஆச்சார்யாபிஷேக அழைப்பு

நிகழும் மங்களகரமான நந்தன வருடம் ஐப்பசித் திங்கள் 19ஆம் நாள் நாளை [04.11.2012] ஞாயிற்றுக்கிழமை திருவாதிரை நட்சத்திரமும் பஞ்சமித்திதியும் சித்த யோகமும் கூடிய காலை 9.14. மணிமுதல் 11.05.மணி வரையுள்ள தனு லக்கின சுபவேளையில் மருதடிப்பிள்ளையார் திருவருள் துணைகொண்டு வித்தியா குரு

வியாசரத்தினம் சிவஸ்ரீ மு.பிச்சைக்குருக்கள்
(பிரதமகுரு பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் ஆலயம்,இந்தியா)
அவர்களின் நல்லாசிகளுடன்
சிவஸ்ரீ கா.சாமிநாதக்குருக்கள் அவர்களின் பீட்டன்களும்
சிவஸ்ரீ பஞ்சாக்ஷரக்குருக்களின் பேரப்பிள்ளைகளும்
எமது புத்திரர்களுமாகிய



சிரஞ்சீவி வி.கஜானந்தன் ஐயா
சிரஞ்சீவி வி.மதிமுகன் ஐயா
ஆகியோருக்கு குருப்பட்டாபிஷேகமும்
சிரஞ்சீவி வி.வாமநேசன் ஐயா
அவர்களுக்கு விஷேட தீட்சையும்

செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து விழாவில் கலந்துகொண்டு பெரியோர்கள் இளங்குருவை ஆசீர்வதித்தும் ஏனையோர் குருவின் ஆசியைப் பெற்றும் இந்த விழாவை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அழைப்புக் கிடைக்கப்பெற்றவர்களும், கிடைக்கப்பெறாதவர்களும், அன்புள்ளங்களும் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தந்து மதியபோசன நிகழ்விலும் கலந்துசிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்:
மானிப்பாய் இலங்கை வங்கி அருகில்
உள்ள மானிப்பாய் ஐயர் இல்லம்.

சிவஸ்ரீ ப.விநாயகமூர்த்தி குருக்கள்
மனோன்மணி தம்பதிகள்
P.V.M.குருக்கள்

[01/4383][5-6-7]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நவீன ஆடைத் தெரிவுகளுக்கு......
இந்தியாவிலிருந்து நேரடியாகத் தருவிக்கப்பட்ட நவீன வேலைப்பாட்டுடன் கூடிய கூறை சாறிகள், திருமணப் பட்டுப் புடவைகள், பஞ்சாபி, சிறுவர்களுக்கான ஆடைகள் அனைத்தும் முற்றிலும் குளிரூட்டப்பட்ட காட்சி அறையில்.... உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய.... சாவகச்சேரியில்....

"ஸ்ரீராம் சில்க்"

இல.19, நவீன சந்தை உட்புறம், சாவகச்சேரி. (21584)(2.6.7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111


# திருமண வாழ்த்து

இன்று (03.11.2012) சனிக்கிழமை
திருமண பந்தத்தில் இணையும்

**செந்தூரன் - சுமங்கலை**

தம்பதியினரை

இல்லறமாம் நல்லறம் புரிய இணைபவரே
இல்லை எனாதவாறு செல்வங்கள் பதினாறும்
பெற்றிடுவீர் பிள்ளைச் செல்வங்களுடன்
வெற்றி நடைபோட வாழ்த்துகின்றோம்.

யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை நண்பர்கள், 2004 உயர்தர பிரிவு

Wedding Best Wishes

(சி/4718)(6.7.8)

# மரண அறிவித்தல்கள்



திருமதி

## நடராசா பூரணம்

நயினாதீவு, 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும், 395/6, யோசேப் வாஸ் வீதி, வவுனியாவில் வசித்தவருமாகிய திருமதி நடராசா பூரணம் கடந்த (27.10.2012) சனிக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னாரது பூதவுடல் இறம்பைக்குளம் இந்து மயானத்தில் கடந்த (28.10.2012) ஞாயிற்றுக்கிழமை தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. மனோகரன்
(மகன்- முன்னாள் தேன் சுரபி மனோ)

தொ.பே. 077 7571 346,
024 2220 347

(24809) (45.6.7)

## சிவக்கொழுந்து கதிர்காமநாதன்



நெல்லியடி காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து கதிர்காமநாதன் நேற்று முன்தினம் 01.11.2012 வியாழக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - மகேஸ்வரி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற கனகராசா மற்றும் அன்னபூரணம் (சின்னமணி) தம்பதியரின் மருமகனும், நிர்மலாதேவியின் கணவரும், கனிபாரஜ்ஜின் அன்புத்தந்தையும், சிதம்பரநாதன், இராஜேஸ்வரி, யோகேஸ்வரி, புஸ்பவதி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

70, பத்திரகாளி கோயிலடி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சந்திரசேகரம் (மைத்துனர்),
மாசிலாமணி (சகோதரன்).

(24811) (45.6.7)

## சேவை

விமான டிக்கட்டுகள் மிகக்குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ள..............
ரெட்டினா டுவர்ஸ் & ட்ரவல்ஸ்
இல. 687, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
மேலதிக விவரங்களுக்கு அழையுங்கள்
(சி/4418)(3.6.7) தொ.பே - 0212219686

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1977 ஆம் ஆண்டு, திருவோண நட்சத்திரம் கிரகபாவம் 68, உதயத்துச் செவ்வாய் உள்ள அரச தொழில் புரியும் BA பட்டதாரி மணமகனுக்குப் பொருத்தமான மணமகள் எதிர்பார்க்கப்படுகிறது.
தொடர்பு:0777 286050
(24996) (2.6.7)

## விற்பனைக்கு

தொழில் நிறுவனம் ஒன்றுக்குப் பயன்படுத்தக்கூடிய 'தம்ரோ' தளபாடங்களும் (2 மாதம் பாவித்த), 10 ½' LF கன்ரர் (மிற்சுபிசி) 200 -XXXX வாகனமும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0779199824
சாவகச்சேரி வடக்கு, மீசாலை.
(21585) (2.6.7)

## திருமண சேவை

- 82 இல் பிறந்த 12 இல் செவ்வாய் 10 ½ பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு கனடாவிலோ, உள்நாட்டிலோ பட்டதாரி மணமகன் தேவை.
- 89 இல் பிறந்த RC வேதமுடைய ஆஸ்திரேலியா பிரஜா உரிமைபெற்ற மணமகளுக்கு RC வேதமுடைய பட்டதாரி மணமகன் தேவை.
- 87 இல் பிறந்த 8 இல் செவ்வாய் 27 ¾ பாவமுடைய ஆஸ்திரேலியா பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்குப் பட்டதாரி மணமகன் தேவை.
- 79 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 63 பாவமுடைய அமெரிக்காவில் எக்கவுண்டனாகப் பணிபுரியும் மணமகனுக்குப் படித்த Dance, சங்கீதம் கலை ஆர்வமுள்ள மணமகள் தேவை.

தொடர்பு: காலக்கண்ணன் திருமணசேவை,
இல.435/3, கோயில் வீதி, நல்லூர். (கந்தன் கருணைக்கு பக்கத்தில்)
T.P. 0776070862
(24997) (2.6.7)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சுகிர்தமலர்
அருமைலிங்கம்

மண்ணில் 11.03.1942
விண்ணில் 03.11.2008

மடத்துக்கடவை தனில்
மரம்போல எமை தாங்கி
மாட்சிகள் தந்திட்ட அம்மாவே!
ஆண்டுகள் நான்கு கடந்தும்
ஆறவில்லை எம்சோகம்
தேடுகின்றோம் அவனியிலே
உம்முகம் தினம் தினம்
விரைந்து நீர் வாரீரோ!

'மடத்துக்கடவை'
அல்வாய் வடமேற்கு. (24807)(45.6.7)

குடும்பத்தினர்.

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
தம்பிமுத்து சோமசுந்தரம்
திதி: பஞ்சமி

தோற்றம் 01.04.1942
மறைவு 29.10.1999

விதைத்தவன் வெட்டிவிட்டான் – என்
விலைமதிப்பில்லா நற்றுணையை
விதி வரைந்த பாதையிலே எனை மறந்து போனீரே
போன இடம் தெரியாமல் புலம்புகிறேன் பதின்மூன்று ஆண்டுகளாய்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.

– தங்கள் பிரிவால் துயருறும் மனைவி.

சங்குவேலி. (24808)(2.6.7)

## யாழ்ப்பாணம் மாநகர சபை
## பொதுசன நூலகம்/சுப்பிரமணியம் பூங்கா
## தனியார் பாதுகாப்புச் சேவைக்கான விண்ணப்பம்

யாழ். பொதுசன நூலகத்துக்கும், சுப்பிரமணியம் பூங்காவுக்கும் 01.01.2013 தொடக்கம் ஒரு வருட காலத்துக்கு தினமும் 24 மணி நேரம் பாதுகாப்புச் சேவை வழங்கக் கூடிய இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தனியார் பாதுகாப்பு சேவை நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மாநகர சபையில் பெறக்கூடிய விண்ணப்பப் படிவத்தில் மட்டுமே விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப்படிவம் ரூபா 500/= (வற்வரி நீங்கலாக), மீளளிக்கக் கூடிய வைப்புப் பணம் ரூபா 1000/= செலுத்தி மாநகர சபை அலுவலகத்தில் 15.11.2012 ஆம் திகதி பிற்பகல்2 மணிக்கு முன் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப படிவம் பெறப்பட்ட பின்னர் விண்ணப்பிக்காவிடின் வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.

விண்ணப்பங்கள் யாவும் 19.11.2012 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது நேரடியாகக் கையளிக்கப்படல் வேண்டும். கேள்விகள் யாவும் 19.11.2012 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு திறக்கப்படும். விண்ணப்பக்காரர் அவர் பிரதிநிதி கேள்வி திறக்கப்படும்போது சமுகமளிக்க முடியும். மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி யோ. பற்குணராஜா,
மாநகர முதல்வர், யாழ்ப்பாணம்.
02.11.2012

# மரண அறிவித்தல்

திருமதி **இராசபூரணம் குணரட்ணம்**



பாரதி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசபூரணம் குணரட்ணம் நேற்று (02.11.2012) வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குணரட்ணம் (செங்குந்தா இந்துக் கல்லூரி -முன்னாள் ஆசிரியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற வைரமுத்து தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், நாகமணி தம்பதியரின் அருமை மருமகளும், காலஞ்சென்றவர்களான நடராஜா, தங்கச்சியம்மா மற்றும் வேலாயுதப்பிள்ளை (கோப்பாய் கந்தவேள் வித்தியாலயத்தின் ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிருபாகரன் (ஜேர்மனி), ஞானேஸ்வரன் (ஜேர்மனி) தயானந்தி (சுவிஸ்), குணசேகரன் (விஷ்ணு பல்பொருள் வாணிபம், டிவாஸ், பந்தல் சேவை) ஆகியோரின் பாசமிகு தாயும், கலாநிதி (யாழ். மாநகரசபை சுகாதார முன்னாள் உத்தியோகத்தர் ஜேர்மனி), மைதிரேயி (ஜேர்மனி), தவராஜா (சுவிஸ்), பபிதா (ஆசிரியை - கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமியும், சகானா, மயூரன், டிவாகர், டிலானி, சானுஜா, சஜீவன், சாறுஜன், விஸ்ணுஜா, ஷஞ்சஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.11.2012) சனிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாரதி வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

(24997) (45.6.7)

தகவல்: குணசேகரன் (மகன்),
கிருபாகரன் - 0049 721 8648 508,
ஞானேஸ் - 0049 721 3746 24 ,
தவராஜா - 0041 5666 459 46 .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாவில் இலங்கையை கலங்க வைத்த அமெரிக்கா

## இந்தியா, கனடா, ஜேர்மன் நாடுகளும் கேள்விக் கணைகள்

கொழும்பு, நவம்பர். 3

உலக நாடுகள் ஒவ்வொன்றும் நேரடியாகவே இராஜதந்திரச் சமரில் ஈடுபடும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பூகோள காலக்கிரம மீளாய்வுக் கூட்டத்தொடரில் இலங்கை மீது அமெரிக்கா, இந்தியா, கனடா, ஜேர்மனி ஆகிய நாடுகள் நான்கு திசைகளிலிருந்தும் கூட்டாக இணைந்து கடும் தாக்குதல் நடத்தியதால் தற்போது நடைபெற்ற ஜெனிவா தொடர் அரசுக்கு அக்கினிப் பரீட்சையாக அமைந்தது.

குறிப்பாக பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை விவகாரம், 13 ஆவது அரசமைப்புத் திருத்த விடயம், வடமாகாண சபைத் தேர்தல், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் ஆகிய விடயங்களைக் கையிலெடுத்தே மேற்படி நாடுகள் இலங்கை மீது கேள்விக் கணைகளை ஏவின.

அத்துடன், கடுமையான சொற்போரை சமாளிப்பதற்குஇலங்கை அரச தரப்பும் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டதால் நேற்று முன்தினம் நடந்த ஜெனிவாத் தொடர் போர்க்களம் போல் காட்சியளித்தது.

அதேவேளை, பிரதம நீதியரசருக்கு எதிராக இலங்கையில் கொண்டுவரப்பட்டுள்ள குற்றப்பிரேரணை குறித்தும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் மீளாய்வுக் கூட்டத்தில் அமெரிக்க கடும் கண்டனத்தை வெளியிட்டது.

இந்த மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஜெனிவாவுக்கான அமெரிக்கப் தூதுவர் ,பிரதம நீதியரசருக்கெதிராக கொண்டு வந்திருக்கும் குற்றப்பிரேரணை மூலம் ,இலங்கை அரசு நீதித்துறையில் தலையிட்டுள்ளதென்றும் குற்றம்சாட்டியது.

இலங்கையின் மீள்குடியேற்றம் ,கட்டமைப்புப் பணிகள் குறித்து அமெரிக்க கடும் கவலை கொண்டிருப்பதாகவும்,அளிக்கப்பட வாக்குறுதிகளையும் பொறுப்புக் கூறும் கடப்பாட்டையும் இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டுமென்றும் அமெரிக்க தூதுவர் மேலும் குறிப்பிட்டார்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபாரிசுகளின் அமுலாக்கம்,வடக்கு கிழக்கில் படைக் குறைப்பு,தேசியப் பிரச்சினைக்கான அதிகாரப் பகிர்வு தீர்வு,துணை ஆயுதக்குழுக்களின் ஆயுதக் களைவு ஆகிய விடயங்களை உடனடியாக இலங்கை அரசு செய்ய வேண்டுமென்பது அமெரிக்காவின் எதிர்பார்ப்பு என்று குறிப்பிட்ட அமெரிக்கத் தூதுவர், கருத்துச் சுதந்திரமும் உறுதிப் படுத்தப்பட வேண்டுமென்று சுட்டிக்காட்டினார்.

பிரதம நீதியரசருக்கெதிராக கொண்டுவரப்பட்டுள்ள குற்றப்பிரேரணை குறித்து அமெரிக்க கடும் அதிருப்தியை வெளியிடுவதாக குறிப்பிட்ட அமெரிக்கத் தூதுவர்,இது அரசு அப்பட்டமாக நீதித்துறையில் தலையிடுவதையே காட்டுகின்றதென குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட கனடாவுக்கான ஜெனீவாத் தூதுவர், இலங்கையின் மனித உரிமைகள் மேம்படுத்தல் விடயத்தில் கனடா மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளதாகவும், இலங்கையின் வட மாகாணத்தில் உடனடியாக தேர்தல் ஒன்றை நடத்தி மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டியது இலங்கையின் கடமை என்றும் தெரிவித்தார்.

கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட ஜெனீவாவில் உள்ள இந்தியாவுக்கானத் தூதுவர், பதின்மூன்றாம் திருத்தத்தின் ஊடாக தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை கொண்டு வர இலங்கை அரசு உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பது இந்தியாவின் விருப்பென்று குறிப்பிட்டார்.

மீள்குடியேற்றம், முன்னாள் போராளிகளுக்கான புனர்வாழ்வு,நல்லிணக்க ஆணைக்குழுவின் அமுலாக்கம்,மனித உரிமைகளின் மேம்பாடு குறித்து இந்தியா ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளதாக குறிப்பிட்ட இந்திய தூதுவர்,வடமாகாணத் தேர்தலை 2013 ஆம் ஆண்டுக்குள் இலங்கை நடத்துமென்று இந்தியா எதிர்பார்த்துள்ளதாக குறிப்பிட்டார்.

மனித உரிமைகள் அமுலாக்கம் தொடர்பில் இலங்கை அரசு ஏற்கனவே அளித்துள்ள உறுதிமொழிகளை நிறைவேற்றுமென்று இந்தியா நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் இங்கு கருத்து வெளியிட்ட ஜேர்மன் தூதுவர்,பிரதம நீதியரசருக்கேதிரான குற்றப்பிரேரணை குறித்து ஜேர்மன் அரசு கவலை கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

மீளாய்வுக் கூட்டத்தின் இடைநடுவே கருத்து வெளியிட்ட அமைச்சர் சமரசிங்க, பிரதம நீதியரசர் ஒருவருக்கு எதிராக பிரேரணை ஒன்றை கொண்டுவர இலங்கை அரசியலமைப்பில் விசேட ஏற்பாடுகள் இருப்பதாகவும். அதன்படி பல ஆதாரங்களுடன் அவர் தொடர்பில் நடவடிக்கை எடுக்க ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நூற்றி பதினெட்டு பேர் கையொப்பமிட்டு பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## கேப்பாபிலவு மக்களுக்கு நிரந்தர வீடுகள்

யாழ்ப்பாணம், நவ. 3

கேப்பாபிலவில் மீள் குடியேற்றப்பட்ட சுமார் 160 குடும்பங்களுக்கு வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீடுகள் அமைத்துக் கொடுக்கும் பணிகளை மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோன் நேற்று ஆரம்பித்து வைத்தார்.

முல்லைத்தீவுக்கு நேற்றுச் சென்ற மீள்குடியேற்ற அமைச்சர் தலைமையிலான குழுவினர், கேப்பாபிலவு பகுதியில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் குறைகள் தொடர்பாகக் கேட்டறிந்தனர்.

இதன்போது போதிய வசதிகளோ வசிப்பதற்கு வீடுகளோ இல்லாமல் கொட்டும் மழைக்கும் மத்தியில் அவலப்படும் அந்த மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தார், இதில் முதற்கட்டமாக நிர்மாணிக்கப்படவுள்ள சுமார் ஐம்பது வீடுகளின், முதல் ஐந்து வீடுகளுக்கான அடிக்கல்லை நட்டுவைத்தார்.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு அரச அதிபர் வேதநாயகன் மற்றும் அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

(த-16-400)

## வடக்கு-கிழக்கைச் சேர்ந்த 43 பேர் இலங்கை நிர்வாக சேவைக்குத் தெரிவு

யாழ்ப்பாணம்,நவ.3

இலங்கை நிர்வாக சேவைக்கு தரம் iii ஆட்சேர்ப்பதற்காக நடத்தப்பட்ட பரீட்சையில் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த 43 தமிழர்கள் சித்தியடைந்துள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்களிடையே நடத்தப்பட்ட இலங்கை நிர்வாக சேவைக்கான போட்டிப் பரீட்சையில் 43 பேர் சித்தியடைந்துள்ளதாக பொதுச்சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

சித்தி பெற்றோரின் விவரம் வருமாறு,

ஆர்.சிவகாமி, எஸ். அகல்யா, டி.சி.அரவிந்தராஜ், பி.ரி.எம்.இர்பாம், ஜி.பார்த்தீபன், ரி.எம்.முகமட் அன்சார், எஸ்.ரஜீவ், எம்.எஸ்.சில்மியா, எம்.எஸ்.எம்.சப்ராஸ், ஏ.ரி.எம்.ரவீ, கே.காந்தீபன், எம்.எம்.அசீர், ஆர்.பகீரதி, கே.பேடினுகரன், என்.நவநீதராஜா, பி.ரகுநாதன், ஜே.ரலிபுதீன், எஸ்.பிரகாஷ், ஜி.சிவரஞ்சினி, எம்.எம்.ஹைரூன் நிஷா, எல்.பிரசாந்தன், எஸ்.எம்.அல்அமீன், என். தனஞ்சயன், ஆர்.செந்தில், எம்.மலர்வேணி,எஸ்.புவனேந்திரன், எஸ்.சிவலோகநாதன், ஆர்.ரமேஷ். எ.லதுமீரா, ஜி.கஜனி, எஸ்.யோகேஸ்வரராஜா, என்.எம்.நௌதீஸ், எம்.பிரதீப், எம்.பி.முகமட் முபாரக், ஆர்.நிஷாந்தன், ஜே.ராஜமல்லிகை, எம்.ஐ.பிர்னாஸ், ஏ.உதயரட்ணம்,கே.ஜகனாத், ஆர்.சசீலன், எம்.எஸ்.என்.றிஸ்வனி, ஜி.பிரணவன், ஆர்.விஜயகுமார. (த-9-400)

## ராஜீவ் காந்தி கொலை கே.பியிடம் விசாரணை

### இந்தியப் புலனாய்வுப் பிரிவு துருவியது

கொழும்பு,நவ.3

இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதனை இலங்கையில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தியதாக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாக;

இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவினர் கே.பியை விசாரணைக்கு உட்படுத்தியதாகவும், இதன் போது இந்திய முன்னாள் பிரதமர் ராஜிவ்காந்தியின் கொலைக்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென கே.பி தெரிவித்தாகவும் ''த இந்தியன் எக்ஸ்பிரஸ்'' செய்தி வெளியிட்டிருந்தது.

இது தொடர்பாக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(ங-16)

## சர்வதேசத்தின் நம்பிக்கையை இலங்கை இழக்கும் நிலையில் !

ஜெனிவா, நவ.3

ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமைகள் பேரவையில் வியாழக்கிழமை நடைபெற்ற இலங்கை குறித்த விவாதத்தில் கருத்து வெளியிட்ட பெரும்பாலான உலக நாடுகள், இலங்கையில் ஜனநாயகத்தை நிலைநாட்ட ஆக்கபூர்வமானதும், அவசியமானதுமான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தின.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை முறையாக நடைமுறைப் படுத்தாத பட்சத்தில் போருக்குப் பின்னரான நாட்டை முன்னேற்றும் முயற்சியில் இலங்கை சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை இழந்துவிடும் நிலைமை உருவாகலாம் என்றும் அந்த நாடு எச்சரிக்கை விடுத்துள்ளன.

திமோர், துருக்கி, தாய்லாந்து, உகண்டா, உக்ரைன், ஐக்கிய அரபு இராச்சியம், பிரிட்டன், உருகுவே, வெனிசூல, வியட்நாம், சிம்பாப்வே, அல்ஜீரியா, அங்கோலா, ஆர்ஜன்டீனா, ஆஸ்திரேலியா, ஆஸ்திரியா, அசர்பைஜான், பஹ்ரைன், பங் களாதேஷ், பெலாரஸ், பெல்ஜியம், பெனின், பூட்டான், பொலிவியா, பொட்ஸ்வான, பிரேசில், புரூணை பர்கினோ பாசோ, கம்போடியா, கனடா, சிலி, சீனா, கொங்கோ, கோஸ்டோரிக்கா, கியூபா, சைப்ரஸ், செக்குடியரசு உட்பட்ட சுமார் 99 நாடுகள் இலங்கை தொடர்பான மீளாய்வுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றின

மனித உரிமைகளை மேம்படுத்துவதிலும், மக்களின் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்துவதிலும் இலங்கை ஐக்கிய நாடுகளின் கோட்பாடுகளை பின்பற்றி நடக்க வேண்டுமெனவும், இலங்கையுடன் நட்புறவை பேணும் நாடுகளை தர்மசங்கடத்துக்கு உள்ளாக்காத வகையில் இலங்கை செயற்பட வேண்டுமெனவும் மேற்படி நாடுகள் கோரிக்கை விடுத்தன.

## டுபாயில் நகைகள் திருட்டு: இலங்கை இளைஞர் கைது

டுபாயில் மாளிகைகளுக்குள் புகுந்து 600,000 (டுபாய் பணம்) பெறுமதியான தங்க நகைகளைத் திருடிய இலங்கையர் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஒரு மாளிகையில் 3,500 டுபாய் பணம் பெறுமதியான பணத்தைச் சூறையாடியுள்ளதாக டுபாய் குற்றவியல் நீதிமன்றத்தால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பாகிஸ்தான் சாரதி எனவும் மற்றைய ஆசாமி 26 வயதுடைய இலங்கை அலுவலக உத்தியோகத்தர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்க நகைகளை மாத்திரமன்றி மடிக்கணினியையும் இவர்கள் களவாடியுள்ளனர்.

களவாடப்பட்ட பொருள்கள் சிலவற்றை டுபாய் பொலிஸார் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களின் விடுதியில் இருந்து மீட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள திருட்டு வழக்கின் தீர்ப்பு நவம்பர் 26ஆம் திகதிக்கு அறிவிக்கப்படவுள்ளது. (3)

## யாழ். மாவட்டத்தில் கூ.அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐவருக்கு பதவியுயர்வு

யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலர் பிரிவில் பணியாற்றும் ஐந்து கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தரம் ஒன்றிற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

வி.சிவகுமார், இ.விஜயமோகனராசா, தி.வித்தககலாநிதி, பா.ஸ்ரீகுமார், திருமதி பா. கலைச்செல்வி ஆகியோரே இவ்வாறு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கான பதவி உயர்வு சம்பந்தமான சுற்று அறிக்கையை உள்ளூராட்சி மற்றும் கூட்டுறவு நிவாரண அமைச்சின் செயலாளர் அனுப்பி வைத்துள்ளார்.

(வ-17)

## டெசோ தீர்மான அறிக்கை ஐ.நா. சபையிடம் கையளிப்பு

நியூயோர்க், நவ.3

டெசோ தீர்மானங்கள் அடங்கிய அறிக்கையை தி.மு.க. பொருளாளர், மு.க. ஸ்ராலின், ஐ.நா. துணைச் செயலர் ஜோன் எலியசனிடம் நேற்றுக் கையளித்தார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி சென்னையில் நடைபெற்ற டெசோ மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அடங்கிய அறிக்கையுடன் ஸ்ராலின் தலைமையிலான குழுவினர் அமெரிக்கா சென்றிருந்தனர். அங்கு டெசோ தீர்மானங்களை ஐ.நா. பொதுச் செயலரிடம் சேர்ப்பிக்கும் வகையில் குறித்த தீர்மானங்கள் அடங்கிய அறிக்கையை துணைப் பொதுச் செயலரிடம் கையளித்தனர்.

டெசோ தீர்மானங்களை கையளித்த பின்னர் ஸ்ராலின் கருத்துத் தெரிவிக்கையில்,

''நாம் ஐ.நாவின் துணை பொதுச் செயலரிடம் டெசோ தீர்மானங்களை திட்டமிட்ட வகையில் கையளித்து விட்டோம். தமிழர் பிரச்சினையில் நாம் கொண்டுள்ள அக்கறையை அவர் பெரிதும் பாராட்டினார். ஜெனிவாவில் நடைபெற்று வரும் மனித உரிமைகள் பேரவையில் பூகோள காலக்கிரம மீளாய்வுக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை மேற்கொள்ள டெசோ தீர்மான அறிக்கை வலுச்சேர்க்கும் என்றும் எம்மிடம் அவர் தெரிவித்தார். ஆகவே பொருத்தமான தருணத்திலேயே இந்த அறிக்கையை ஐ.நாவிடம் நாங்கள் கையளித்திருப்பதாகக் கருதுகிறோம்.'' என்றார்.

''நாம் ஐ.நாவின் துணை பொதுச் செயலரிடம் டெசோ தீர்மானங்களை திட்டமிட்ட வகையில் கையளித்து விட்டோம்.

(ங-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லையா கிண்ணம் மானிப்பாய் இந்துவுக்கு

யாழ்ப்பாணம், நவ. 3

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் விளையாட்டு அவை, நடத்திய கே.ஏ. செல்லையா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தை வென்றது மானிப்பாய் இந்துக்கல்லூரி.

செல்லையா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக, அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 5 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்று வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னல் மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதிக்கொண்டது. இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைக்காமல் சமபலத்தோடு மோதிக் கொண்டன.

இறுதிநேரத்தில் அபாரமாக ஆடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 4 : 3 என்ற கோல் கணக்கில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை வீழ்த்தி, 2012 ஆம் ஆண்டுக்கான கே.ஏ.செல்லையா வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

**மூன்றாமிடம் சென். ஜோன்ஸுக்கு**

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது.

இதில் 3:0 என்ற கோல் கணக்கில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை இலகுவாக வெற்றி கொண்டு மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டது சென்.ஜோன்ஸ் கல்லூரி.

கே.ஏ. செல்லையா வெற்றிக்கிண்ண இறுதியாட்டத்தில் தொடர் நாயகனாக மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி வீரன் சுதிமிஸ்ஸன், ஆட்ட நாயகனாக அதே அணியைச் சேர்ந்த ஜீவராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.



இதேவேளை கே.ஏ. செல்லையா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான சுற்றுப் போட்டியில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வீரர் எஸ்.டி.சாந்தன், சென். ஜோன்ஸ் கல்லூரி வீரர் எஸ்.திலீபன், இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி வீரர் எம்.கரிஷன் ஆகியோர் சிறந்த வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். (ஙு-23)

## யங்ஸ்ரார் வி.க.வுக்கு மாவை எம்.பி. நிதியுதவி

வலி,வடக்கு.நவ.3

யாழ்.மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வல்வெட்டித்துறை , நெடியகாடு யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்கு நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டுள்ளார்.

விளையாட்டை ஊக்குவிக்கும் முகமாக 50 ஆயிரம் ரூபாவை தனது பன்முகப்படுத்திய வரவு செலவுத்திட்ட நிதியின் கீழ் குறித்த விளையாட்டுக் கழகத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்து வழங்கியுள்ளார்.

இந்த நிதியின் மூலம் விளையாட்டுக்கழக அங்கத்தவர்கள் 75 பேர் பயனடைவதுடன் விளையாட்டுத் துறையும் அபிவிருத்தி அடைய முடியும் என்று நெடியகாடு யங்ஸரார் விளையாட்டுக்கழக நிர்வாகிகள் தெரிவித்தனர். (ஙு-86)

## தேசியமட்ட கராத்தே 6, 7, 8 ஆம் திகதிகளில்



யாழ்ப்பாணம்,நவ.3

இலங்கை கராத்தே சம்மேளனம் வருடந்தோறும் நடத்தும் தேசியமட்ட கராத்தே சுற்றுப் போட்டி எதிர்வரும் 6 ஆம் திகதி ,7 ஆம் திகதி, 8 ஆம் திகதிகளில் சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் இடம் பெறவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்கு பற்றுவதற்காக வடமாகாணத்திலிருந்து 150 வீர, வீராங்கனைகள் பங்கு பற்றவுள்ளனர்.

வடமாகாணத்திலிருந்து இம் முறையே அதிகளவான போட்டியாளர்கள் பங்கு பற்றுவது குறிப்பிடத்தக்து. (ஙு-23)

## ஜேர்மனியத் தூதரகக் குழுவினர் பயிற்சி நிலையத்தை பார்வையிடுவர்

இலங்கைக்கான ஜேர்மனி நாட்டின் தூதரக அதிகாரிகள் 6 பேர் அடங்கிய குழு ஒன்று நாளை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

யாழ். வருகை தரும் இந்தக் குழுவினர் ஜேர்மனி அரசு, சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் என்பவற்றின் நிதிப் பங்களிப்புடன் அரியாலைப் பகுதியில் யாழ். உதைபந்தாட்ட லீக்குக்கென புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் உதைபந்தாட்ட பயிற்சி நிலையத்தின் நிர்மாணிப்பு பணிகளை பார்வையிட உள்ளனர் - என்று யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ். அன்ரனிப்பிள்ளை தெரிவித்துள்ளார். (ஙு-23)

## பிற்போடப்பட்ட கூடைப்பந்து

யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் மாணவ முதல்வன் அமரர். பொன் விபுலானந்தன் ஞாபகார்த்தமாக நாளை ஞாயிற் றுக் கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடத்தவிருந்த ஒரு நாள் மின்னல் வேக கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது எனவும் போட்டிக்கான திகதி பின்னர் உரிய கழகங்களுக்கு அறியத்தரப்படும் எனவும் போட்டி ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (ஙு-23)

# கோல் மழை பொழிந்து சென். அன்ரனிஸ் சம்பியன்

பொன்னம்பலம் பாக்கியரத்தினம் ஞாபகர்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான இறுதியாட்டத்தில் ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி அணி கோல் மழை பொழிந்து சம்பியனானது.

இந்த இறுதிப் போட்டியில் ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரியை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதிக்கொண்டது. இதில் ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி அணி அடுத்தடுத்து கோல்களை அடித்து எதிரணியைத் திக்குமுக்காடச் செய்தது. எனினும் பதிலுக்கு ஸ்கந்தா அணியும் இடையிடையே கோல்களை அடித்தது.

இறுதியில் 7:3 என்ற கோல் கணக்கில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை வெற்றி கொண்டு சம்பியனானது ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் அணி.

இதேவேளை மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் யாழ்.மத்தியகல்லூரிஅணியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணி மோதவிருந்தது. எனினும் ஆட்டம் நடைபெறவிருந்த நேரத்தில் யாழ். மத்திய கல்லூரி அணி போட்டிக்கு சமுகம் தராமையால் யூனியன் கல்லூரி அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.



இந்தச் சுற்றுப் போட்டியில் ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி அணி வீரர் நிஷாந், ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிவீரர் ரி.கனுஷன், யூனியன் கல்லூரி அணி வீரர் எஸ்.சஜீவன் ஆகியோர் சிறந்த வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். (ஙு-23)



வவுனியா பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட சிறுவர், முதியோர் விசேட தேவையுடையோர் தினங்களை முன்னிட்டு நேற்று முன்தினம் வியாழக்கிழமை வைரவ புளியங்குளம் முதியோர் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் ஊசியில் நூல் கோர்த்தல் போட்டியில் மிகவும் ஆர்வத்துடன் பங்குபற்றிய முதியோர்கள். (ஙு-23)

## சிநேகபூர்வ உதைபந்து



யாழ்ப்பாணம்,நவ.3

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி 14 வயதுப் பிரிவு, 16 வயதுப் பிரிவு 18 வயதுப் பிரிவு, 20 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (ஙு-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# 107 வீரர்கள் வெளியேற்றம்

இந்தியன் பிறீமியர் லீக் (ஐ.பி.எல்.) சார்பில் இந்தியாவில் ஆண்டு தோறும் உள்ளூர் 'ரி-20' கிரிக்கெட் தொடர் நடத்தப்பட்டு வருகிறது.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள 6 ஆவது ஐ.பி.எல். தொடருக்காக ஒவ்வொரு அணியின் நிர்வாகமும் தங்களது அணியில் தக்கவைத்துக் கொள்ளும் வீரர்களின் பட்டியலை அளிக்கும் படி, ஐ.பி.எல். நிர்வாகம் கேட்டுக் கொண்டது. இதற்காக ஒக்ரோபர் 31 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டது.

ஒவ்வொரு அணிகளும் தக்கவைத்துக் கொண்ட வீரர்களின் பட்டியலை ஐ.பி.எல். நிர்வாகம் வெளியிட்டது.

மொத்தம் 179 வீரர்கள் தக்கவைத்துக் கொள்ளப்பட்டனர். இதில் 120 இந்திய வீரர்கள், 59 வெளிநாட்டு வீரர்கள் அடங்குவார்கள். அதிக பட்சமாக மும்பை அணி 27 வீரர்களை தக்கவைத்துக் கொண்டது.

மற்ற அணிகளான புனே வொரியர்ஸ் 24, கொல்கத்தா நைட்ரைடர்ஸ் 22, பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் 21, கிங்ஸ் லெவன் பஞ்சாப் 19, டெல்லி டெயாடெவில்ஸ் 18, சென்னை சூப்பர் கிங்ஸ் 15, ராஜஸ்தான் றோயல்ஸ் 14 வீரர்களை தக்கவைத்துக் கொண்டன.


மொத்தம் 107 வீரர்கள் வெளியேற்றப்பட்டனர். இதில் புனே வொரியர்ஸ் அணியில் மைக்கல் கிளார்க், ரைடர், ஸ்மித், நதன் மெக்கலம், தமிம் இக்பால் உள்ளிட்டோர் வெளியேற்றப்பட்டனர்.

சென்னை அணியில் பொலஞ்சர், ஜோர்ஜ் பெய்லி, ஜோகிந்தர் சர்மா, ஸ்டைரிஸ், முகுந்த், ரந்திவ் ஆகியோரது ஒப்பந்தம் விலக்கி கொள்ளப்பட்டது.

ராஜஸ்தான் அணியில் ஜொகன் போத்தா, கைப் வெளியேற்றப்பட்டனர். டெல்லி அணியில் ரொபின் பிஸ்ட், ஆரோன் பின்ச், வேணுகோபால் ராவ் உள்ளிட்டோர் நீக்கப்பட்டனர்.

பஞ்சாப் அணியில் ஸ்டூவர்ட் புரோட், ரமேஷ் பவார், அபிஷேக் நாயர் வெளியேற்றப்பட்டனர். மும்பை அணியில் ரிச்சர்டு லெவி, டேவி ஜேக்கப்ஸ், பெரேரா, டுவைன் ஸ்மித் உள்ளிட்டோருக்கு இடம் கிடைக்கவில்லை.

ஒவ்வொரு அணியில் இருந்தும் வெளியேற்றப்பட்ட வீரர்களை நவம்பர் 19 ஆம் திகதி வெளிடப்படும் வீரர்கள் ஏலத்திற்கான பட்டியலில் அறிவிக்கப்படுவார்கள். (5)




# யுவராஜ்சிங்குக்கு இடமுண்டா?

இந்திய அணியின் சகலதுறை வீரர் யுவராஜ் சிங் - டெஸ்ட் போட்டிகளுக்குத் தயாராகவுள்ளாரா என்பது குறித்துத் தன்னால் கருத்துக்களை வெளியிட முடியாதுள்ளதாக இந்திய அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனி தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணிக்கும், இந்திய 'ஏ' அணிக்குமிடையிலான பயிற்சி ஆட்டம் நேற்று முன்தினத்துடன் நிறைவுபெற்றது. இதில் இந்திய 'ஏ' அணியின் முதல் இன்னிங்ஸில் யுவராஜ் சிங் சிறப்பாக ஆடி 59 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். அத்துடன் பந்து வீச்சில் 5 இலக்குகளையும் கைப்பற்றியிருந்தார். இதன் காரணமாக இங்கிலாந்திற்கெதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் யுவ்ராஜ் சிங் சேர்க்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள மகேந்திர சிங் - யுவராஜ் சிங்கின் உடற்தகுதி குறித்து இங்கிருந்து தன்னால் கருத்துத் தெரிவிக்க முடியாது எனத் தெரிவித்தார். டெஸ்ட் போட்டிகள் நிச்சயமற்ற தன்மையைக் கொண்டவை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்த மகேந்திரசிங் டோனி, டெஸ்ட் போட்டிகளானது ஒரு நாள் சர்வதேசப் போட்டி, 'ரி-20' சர்வதேசப் போட்டியிலிருந்து மாறுபட்டவை எனவும் தெரிவித்தார்.

ஒரு நாள் சர்வதேசப் போட்டியில் களமிறங்கும் போது 50 பந்துப் பரிமாற்றங்கள் களத்தடுப்பில் ஈடுபட வேண்டும் என்பது அனைவருக்கும் தெரியும் எனத் தெரிவித்த அவர், ஆனால் டெஸ்ட் போட்டியில் சில வேளைகளில் ஒன்றரை நாள்கள் தொடர்ச்சியாகக் களத்தடுப்பில் ஈடுபட வேண்டிய தேவை ஏற்படலாம் எனத் தெரிவித்தார்.

எனவே யுவராஜ் சிங் 2 நாள்களுக்குக் களத்தடுப்பில் ஈடுபடக்கூடிய உடற்தகுதியில் காணப்படுகிறாரா என்பதை ஆராய வேண்டும் எனத் தெரிவித்த டோனி, அவரின் உடற்தகுதி தொடர்பாக யுவராஜ் சிங்கே சிறப்பாக அறிவார் எனவும் தெரிவித்தார். (5)

# சேவாக் ஓய்வு



இந்திய அணியின் அதிரடி தொடக்க வீரர் வீரேந்திர சேவாக், சமீபகாலமாக திறன் இல்லாமல் தவிக்கிறார்.

இலங்கையில் நடந்த 'ரி-20' உலகக் கிண்ணத் தொடரில் 3 போட்டியில் 54 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார்.

இந்த நிலையில்,'ரி-20' போட்டியில் இருந்து விடைபெறுவதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி.சி.சி.ஐ.,) அதிகாரி ஒருவரிடம் சேவாக் தெரிவித்ததாக டெல்லியில் இருந்து வெளியாகும் நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டது.

அதில் டெஸ்ட், ஒரு நாள் போட்டியில் கவனம் செலுத்தப் போகிறேன். இளம் வீரர்களுக்கு வழிவிடும் வகையில் 'ரி-20' போட்டியில் இருந்து ஓய்வு பெற உள்ளேன்.

விரைவான 'ரி-20' விளையாடுவதற்கு ஏற்ற உடற்தகுதி இல்லாததே இதற்கு காரணம். ஆனாலும், ஐ.பி.எல். தொடரில் டெல்லி அணிக்காக தொடர்ந்து விளையாடுவேன் என்று சேவாக் கூறியதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனை மறுத்த சேவாக், தனது 'ருவிட்டரில்' கூறுகையில், நான் கிரிக்கெட் சபை அதிகாரியிடம் பேசவில்லை. இது ஒரு ஆதாரமற்ற செய்தி.

எந்த ஒரு கிரிக்கெட் போட்டியில் இருந்தும் ஓய்வு அளிக்கும்படி கேட்கவில்லை என்றும் அனைத்து போட்டியிலும் தொடர்ந்து பங்கேற்க காத்திருக்கிறேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

(5)

# மழையால் கைவிடப்பட்டது ஆட்டம்

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது ஆட்டம் மழை காரணமாகக் கைவிடப்பட்டுள்ளது.

கண்டி பல்லேகல சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெறவிருந்த இந்த ஆட்டம் கடுமையான மழை காரணமாக ஆரம்பிக்கப்படாமலேயே கைவிடப்பட்டது.

இதன்படி, இந்தத் தொடரில் இதுவரை இடம்பெறவிருந்த 2 ஆட்டங்களும் மழை காரணமாகக் கைவிப்பட்டுள்ளன. ஒரே ஒரு 'ரி-20' சர்வதேச ஆட்டம் நடைபெற்ற போதிலும் முடிவேதும் பெறப்படாமலேயே அது கைவிடப்பட்டிருந்தது.

இரு. அணிகளுக்குமிடையிலான 2 ஆவது ஒரு நாள் சர்வதேச ஆட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி பணிநிலை வேண்டுகைகள்

நிறுவனமொன்றின் பின்வரும் பணி நிலைகளுக்கான வெற்றிடங்களுக்கு தகுதியும், ஆர்வமும் உடையவர்கள் நேரில் வரவும்.

கவர்ச்சிகரமான வேதனம், நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

01. அலுவலகப் பணி உதவியாளர்கள் (Peons)
02. தோட்டப்பராமரிப்பாளர்கள் (Gardeners)
03. பாதுகாப்பு சேவகர்கள் (Security Guards)

**இன்றும் நாளையும் நிறுவனப் பிரதிநிதிகளால் நேர்முகத்தேர்வு நடாத்தப்படும்.**

**உதயன் தங்ககம்**
**இல.12, சிவகுருநாதர் வீதி,**
**(கஸ்தூரியார் வீதியில், இந்துக்கல்லூரி மைதானத்துக்கருகில்)**
**யாழ்ப்பாணம்.** (சி/4532)(3.14)


# இரவில் ஆட நாம் தயாரில்லை



இரவு நேர டெஸ்ட் போட்டிகள் நடத்த தங்களுக்கு ஆர்வமில்லை என்று இந்திய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இரவு நேர டெஸ்ட் போட்டி நடத்த ஐ.சி.சி கடந்த சில தினங்களுக்கு முன் அனுமதி அளித்தது.

போட்டியில் மோதும் இரு நாட்டு அணிகளும் ஒப்புகொண்டால் மட்டுமே இரவு நேர டெஸ்ட் போட்டி நடத்தப்படும். 6 மணி நேரம் போட்டி நடைபெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.சி.சி.யின் இந்த முடிவுக்கு ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை மட்டுமே வரவேற்பு தெரிவித்தது.

இந்த நிலையில் ஆஸ்திரேலிய முன்னாள் கிரிக்கெட் வீரர் கில்கிறிஸ்ட், தற்போது ஆடிவரும் மூத்த வீரரான மைக்கல்ஹசி, தென்னாபிரிக்க வீரர் அல்விரோ பீட்டர்சன் ஆகியோர் இரவு நேர டெஸ்ட் போட்டிக்கு எதிராக கருத்து தெரிவித்துள்ளனர்.

ஹசி கூறுகையில், ஆஸ்திரேலிய உள்ளூர் போட்டியில் நான் இரவு நேர டெஸ்டில் பங்கேற்றுள்ளேன். மின்னொளியில் நீண்ட நேரம் களத்தில் நின்று துடுப்பெடுத்தாடுவது மிகவும் கடிமான விடயம். வர்ணப் பந்துகள் பயன்படுத்துவதால் பல நேரங்களில் அது சரியாக தெரியாது. என்னை பொறுத்தவரையில் பகலில் நடைபெறும் டெஸ்ட் போட்டிக்கே முக்கியத்துவம் கொடுப்பேன் என்றார்.

இதற்கிடையே பி.சி.சி.ஐயும் இரவு நேர டெஸ்ட் போட்டியில் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை என்று தகவல் வெளியாகி உள்ளது.

இதுதொடர்பாக பி.சி.சி.ஐ தலைமை செயல் அதிகாரி ரத்னாகர் ஷெட்டி கூறுகையில், 1997 இல் பரீட்சார்த்த முறையாக ரஞ்சி கிண்ண இறுதிச்சுற்றை இரவில் நடத்தினோம்.

அந்த ஆட்டம் பந்துவீச்சாளர்களுக்கு கடும் சவாலாக இருந்தது. பனிப்பொழிவால் மிகவும் அவதிப்பட்டனர். தற்போதைய சூழ்நிலையில் இரவு நேர டெஸ்ட் போட்டி நடத்த நாங்கள் ஆர்வம் காட்டவில்லை என்றார்.

(5)


## கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா?
உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தித்தருகிறோம்.
அழையுங்கள்- 0779086737
GUNAA BEST PC 52, Hospital Road, Jaffna. (22150)(9)

## கணினி மலிவு விற்பனை

Intel D/Core, Full System
160GB Hard Disk, 2GB DDR 3 Ram, 19" LED Monitor, DVD writter
Free: WebCam/ 8GB Pen/Cover/ Phone
3 வருட உத்தரவாதம்
41,500/= மட்டுமே.
St.Antony's.com
187,K.K.S. Road Jaffna.
0212224865 / 0750698608
(அன்னைநாகா பூட்சிற்றி அருகில்) (சி/41444)(3.14)

## வங்கியியல் கற்கை நெறி

CBF, DBF இற்கான அனைத்துப் பாடங்களும் ஒரே இடத்தில்
(எமது வழமையான ஆசிரியர் குழாம்)
புதிய பிரிவு ஆரம்பம் :- 03.11.2012
தொடர்புகளுக்கு:
K.ஸ்ரீபரன் (கணக்கீட்டு ஆசிரியர்)
கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை அருகில். தொ.பே. 0774598430 (24823)(3.14)

## உடனடி வேலைவாய்ப்பு - அலுவலக உதவியாளர்

கணினிப் பயிற்சிக் கூடத்தின் அலுவலக உதவியாளர் பதவிக்குப் பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

சகல பணிகளும் செய்யத் தயாரான தேகாரோக்கியமிக்கவர்கள் நாளை முற்பகல் 10 மணிமுதல் பி.ப 4 மணிவரை நேரில் வரவும்.

**"கேற்வே"**
**347, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.** (சி/4533)(3.14)

## CHEMISTRY

2013 A/L
DAY CLASS
மீள் பரீட்சார்த்திகளுக்கான THEORY வகுப்புக்கள்
ஆரம்பம்- 06.11.2012

**பௌதிக இரசாயனம்**
சேதன இரசாயனம்
அசேதன இரசாயனம்
விரைவில் ஆரம்பம்

DIAS BSc (Hons) SPLINCHEM
NEW SCIENCE COLLEGE
JAFFNA (சி/4527)(9.14)

**Banking CBF, DBF பயில விரும்பும் மாணவர்களுக்கான இலவச அறிமுக வகுப்பு**

இடம் : Spectra Skills Hall
காலம்: 4 th November 2012 (ஞாயிறு)
நேரம்: மு.ப. 10 மணி முதல் 1 மணி வரை
பிரபல வங்கி முகாமையாளர்களாலும் விரிவுரையாளர்களாலும் நிகழ்த்தப்படவுள்ளது.
தொடர்புகளுக்கு : Spectra Skills
No. 19, Stanly Road
(Peoples Bank 2 nd Floor) Jaffna
T. P : 021 222 1422, 021 222 1423 (24930)(6-7-8)

# NEW SCIENCE ACADEMY NELLIADY

க.பொ.த. உயர்தர கணித, விஞ்ஞான வகுப்புக்கள் ஆரம்பம்

இடம்: NEW SCIENCE ACADEMY - NELLIADY
(கொடிகாமம் வீதி, நெல்லியடி)
காலம்: 04.11.2012 ஞாயிற்றுக்கிழமை
காலை 6.30 மணி

**ஆசிரியர் குழு**

| | |
|---|---|
| CHEMISTRY | K. சிவத்திரன் B.Sc. (Hons)<br>S .தங்கராசா B.Sc., Dip. in Edu. (யா/ஹாட்லிக் கல்லூரி) |
| PHYSICS | S. சோதிலிங்கம் B.Sc.(Hons), Dip. in Edu.<br>J .சந்திரப்பிரகாசம் M.Sc.,M.Ed. |
| COMBINED MATHS | K. அருளானந்தம் B.Sc., Dip. in Edu. (யாழ்/ஹாட்லிக் கல்லூரி)<br>யாழ்.பிரபல ஆசிரியர் |
| BIOLOGY | இளங்கோ B.Sc., Dip. in Edu. (யா/ஹாட்லிக் கல்லூரி)<br>யாழ்.பிரபல ஆசிரியர் |

ஆசிரியர் சிவத்திரனின் வகுப்புக்கள் ஞாயிறு காலை 6.30 மணிக்கு 2013 BATCHஇக்கும் காலை 7.30 மணிக்கு 2014 BATCH இக்கும் நடைபெறும்.

ஞாயிறு பி.ப 3.30 மணிக்கு சோதிலிங்கம் ஆசிரியரின் வகுப்பு 2013 இக்கும் 4.30 மணிக்கு 2014 இக்கும் இடம் பெறும்.

ஏனைய பாடநேர அட்டவணை அன்றையதினம் அலுவலகத்தில்.

NEW SCIENCE ACADEMY
NELLIADY. (சி/4519)(3.6) நிர்வாகி

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

**Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)**
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல். சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English (2 Months)**
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above > Duration: 2 1/2 Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**Young Learners for English (YLE)** [வயதெல்லை : 7 - 12]
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

புதிய வகுப்புக்கள் Batch I - 29-10-2012 | Batch II - 31-10-2012 | Batch III - 03-11-2012

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

நம்பிக்கை
எதிர்காலத்துக்கு ஒளி
அளிக்கும்.
-தாமஸ்மூர்

# வார வசந்தம்

01

உதயன் 03 நவம்பர் 2012 சனிக்கிழமை பக்கங்கள்: எட்டு




# பாடசாலை சமூக உறவும் கல்வி முகாமைத்துவமும்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

நடேசு தயாவன்
அதிபர், யாழ்.கொழும்புத்துறை
துரையப்பா வித்தியாலயம்.

பாடசாலை-சமூக உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கு பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

1.பாடசாலையின் வசதி வாய்ப்புக்கள் வளங்களைச் சமூகம் பயன்படுத்துவதற்கான வாய்ப்பினை வழங்குதல்.

பாடசாலையின் நிறைவுக்குப் பின்னர் பயன்பாடற்றுள்ள பாடசாலை வளங்களை இலாப நோக்கற்ற நிறுவனங்கள் பயன்படுத்துவதற்கான அனுமதியை வழங்குதல், இதனை வழங்குவதன் மூலம் பாடசாலையையும் சமூகத்தினையும் இணைப்பதற்கான சந்தர்ப்பம் உருவாகும்.

2.பாடசாலை வாரத்தினை அனுசரித்தல். பாடசாலைக்குப் பொருத்தமான வாரமொன்றினைத் தெரிவு செய்து அக் காலத்தில் பெற்றோரையும் சமூகத்தினரையும் பாடசாலைக்கு வருகை தரச் செய்வதனூடாக உறவினை ஏற்படுத்தல்.


3.வேலைவாய்ப்பு-தொழில் வழிகாட்டற் தினத்தின்ன அனுசரித்தல். இந்தத் தினத்தினை அனுசரிப்பதனூடாக சிறந்த கற்றல் அனுபவங்களை மட்டுமல்ல பாடசாலையின் தேவைகள், எதிர்பார்க்கைகள் தொடர்பான விழிப்புணர்வினையும் சமூகத்தின் மத்தியில் தோற்றுவிக்க முடியும்.

4.செய்திப் பத்திரிகை வெளியிடல். குறித்த கால இடைவெளியில் வெளியீடுகளை மேற்கொள்வதன் மூலம் பாடசாலை பற்றிய பகிரங்கப்படுத்தலினைச் சிறப்பான முறையில் மேற்கொள்ள முடிதல்.

5.பாராட்டி வாழ்த்துதல். குறிப்பிடத்தக்க சாதனைகள் பாடசாலையால் நிலைநாட்டப்படும் போது பாராட்டுக்கள் வாழ்த்துக்களை வெளியிடுதல்.

பாடசாலையினதும் சமூகத்தினதும் உறவுகள் திருப்திகரமனதாக அமையுமிடத்து பங்கேற்புத் திட்டமிடலினை மேற்கொள்ள முடியும். இது பாடசாலை வளர்ச்சிக்கு அளப்பரிய பங்காற்றுவதாக இருக்கும். சிறந்த தொடர்பாடற் கோலத்தினைக் கட்டியெழுப்புவதன் மூலம் பாடசாலையில் இருந்து வீட்டுக்கும் வீட்டில் இருந்து பாடசாலைக்கும் மாணவர் முன்னேற்றம் பற்றிய தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்படும் என்பதோடு சமூகத்தின் மூலம் வளத்தினையும் பாதுகாப்பினையும் பெற்று ஒருங்கிணைப்பதன் மூலம் சிறப்பான சேவையினை ஆற்ற முடியும்.

மேலும் சமூகத்திலுள்ள நிறுவனங்களுக்கும் பாடசாலைக்கும் இடையிலான தொடர்புகள் கட்டியெழுப்பப்படும் போது பாடசாலையில் உள்ளக உறுப்பினர்களின் திறன்கள் வளர்க்கப்படவும் முடியும்.



பாடசாலைக்கும் சமூகங்களுக்குமிடையிலான தொடர்புகளைக் கட்டியெழுப்பக் கூடிய பரப்புகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1.பொருளாதார ரீதியிலான பங்குபற்றல்கள்.

2.பொதுவான சேவைகளும் உதவிகளும்.

3.ஆய்வு சார் செயற்பாடுகள்.

4.கற்றல் கற்பித்தற் புலம்.

5.பாடவிதானம்.

6.முகாமைத்துவப் புலம்.

இந்தத் தளங்களில் பாடசாலையில் இருந்து சமூகத்துக்கும் சமூகத்திலிருந்து பாடசாலைக்கும் தொடர்புகள் கட்டியெழுப்பப்படும்.

பாடசாலை சமூக உறவுகளைக் கட்டியெழுப்புவதில் தடையாக உள்ள காரணிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1.சமூகக் குழுக்களுக்கிடையிலான அதிகாரப் போட்டி நிலை. அல்லது பாடசாலைக்கும் சமூகங்களுக்கும் இடையிலான இழுபறிநிலை.

2.பாடசாலை தனது தனித்துவத்தினை, கட்டுப்பாட்டினை இழக்கும் என்ற பயநிலை.

3.பாடசாலையின் ஈடுபாடு அல்லது பங்குபற்றல் தொடர்பான உடன்பாடற்ற நிலை.

4.அதிபர்கள், ஆசிரியர்கள் சமூகத்துடன் இணைந்து செயற்பட விரும்பாமை.

5.பெற்றோரின் அர்ப்பணிப்பற்ற நிலை.

6.பொருத்தமற்ற கலாசாரக் கோலம் பாடசாலைச் சுற்றாடலில் கட்டியெழுப்பப்படல்.

7.பெற்றோர் தொடர்பான ஆசிரியர்களின் புலக்காட்சி நிலை.

8.பொருத்தமற்ற கல்வி முகாமைத்துவம்.

9.பாடசாலை தொடர்பான சமூகத்தின் நம்பிக்கையீனங்கள்.


பாடசாலைக்கும் சமூகங்களுக்குமிடையிலான இருபக்கத் தொடர்புகளைக் கட்டியெழுப்புவதன் மூலம் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ள முடியும். கூட்டுற நிலையினை வளர்த்துக் கொள்ளுதல் வினைத்திறனை அதிகரித்தல், ஊக்குவித்தல், மதிப்பீடு செய்தல் போன்ற செயற்பாடுகள் இலகுவான முறையில் இடம்பெற முடியும்.

சமூக உறவுச் செயற்றிட்டங்களை உருவாக்குதல், வாய்ப்புகளை ஏற்படுத்தல், கண்காணித்தல் மதிப்பிடல், செயற்றிட்டங்களை கட்டியெழுப்பி பொருத்தமான தொடர்பாடல் வலைப் பின்னலினை உருவாக்குதல், பாடசாலையின் இயலுமையினை கட்டியெழுப்பி பாடசாலையின் கற்றல் கற்பித்தல், செயற்பாடுகளை முன்னெடுத்தல், இதற்காகப் பொருத்தமான வேலைத் திட்டத்தினைத் தயாரித்தல், பொருத்தமான தேர்ச்சிகளை அடைந்து கொள்ளல் என்பன தொடர்பான தெளிவுடன் கல்வி முகாமைத்துவச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதனூடாக பாடசாலைச் சமூக உறவுகள் வலுவடையும் என்பது தொடர்பில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்காது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறதியே உயிரை வாழ வைக்கும்



மதுமிதா

பிறப்பில் தொடங்கும் வாழ்வின் ஓட்டம் இறப்பினைச் சென்றடைந்திடும் வரையில், சுமுகமாகச் செல்ல உறக்கத்தைப் போல் மறதியும் அத்தியாவசியத் தேவையாய் இருக்கிறது. சில நேரங்களில் மரணம் தவிர்க்க இயலாததென அறிந்திருந்தாலும் நெருங்கிய உறவினரின் இழப்பு மனவேதனையினை அதிகரித்து மனச் சிதைவினை ஏற்படுத்தும் அளவில் கொடியதாகவே இருக்கும். அந்தச் சமயங்களில் மறதியே உயிரை வாழ வைத்திடத் தேவையான அருமருந்தாக உள்ளது.

சிறுவயதில் படித்த வாய்ப்பாடு, திருக்குறள் முதற்கொண்டு, உறவினர் நண்பர்களின் பெயர்கள் வரையிலும் நினைவுகொள்ளப்பட வேண்டியவைகளின் அட்டவணையின் எண்ணிக்கை அதிகம் தான். அதுவும் எப்போதும் நினைவுகொள்ள வேண்டியதில்லை. அந்தந்த சந்தர்ப்பம் வருகையில் உடன் நினைவு கூர்ந்தால் போதும். கணினியில் எழுதி சேமித்து பாதுகாத்துவைத்து தேவையான நேரத்தில் அதிலிருந்து எடுத்து உபயோகிப்பது போல் மூளையின் அறைகளில் நினைவுகளை அதனதற்குண்டான அறைகளில் சேமித்து வைத்து விட வேண்டும். தேவையானவற்றை மட்டுமே தேவையான நேரத்தில் எடுத்து நினைவு கொள்ள வேண்டும். இதில் உள்ள தொல்லை என்னவென்றால் கணினி நமது கட்டுப்பாட்டில் உள்ள வரையில் நமது தேவையினை சிறப்பாய் செயல்படுத்தும். வைரஸ் தாக்கினால் மட்டுமே தன்னிச்சையாய் செயல்படும். மனமோ எப்போதும் தன்னிச்சையாய் செயல்பட்டுவிடும். அதனாலேயே மறக்கும் கலையினை வளர்த்துக் கொள்ள வேண்டிய கட்டாயத் தேவை உள்ளது.

மறதி என்பது சில நேரங்களில் வரும். எதனை மறக்க வேண்டுமோ அதனை அடிக்கொருமுறை நினைவு கூர்வதும், எதனை நினைவுகொள்ள வேண்டுமோ அதனை மறந்து விடுவதும், மனிதர்களின் உடன்பிறந்த குணம். இரண்டு மாதங்களுக்கு முன்பு முதல் வெள்ளியன்று மாலை, வெளியில் செல்கையில் உடுத்திய உடையின் நிறம் என்ன?, மூன்று வாரங்களுக்கு முன்பு காலையில் உண்ட உணவு என்ன? என்பது எத்தனை பேருக்கு நினைவில் இருக்கும். அது நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய தேவையும் இல்லை. ஆனால் முப்பது வருடங்களுக்கு முன்பு எங்கோ எதற்கோ நண்பர்களுக்குள் அல்லது உறவினரிடையே நடந்த ஒருசிறு சர்ச்சையை முப்பது வருடங்களுக்கும் மேலாகச் சுமந்து கொண்டு நிம்மதி இழந்து குடும்ப நிம்மதியையும் சேர்த்தழித்து அலைபவர் எத்தனை பேர். இதுவும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய தேவை இல்லைதான். இதனையும் மறந்திருந்தால் வலியினை சுமக்காதிருந்திருந்தால் நம்மில் பலரின் வாழ்க்கை இயல்பாய் இருந்திருக்கும்.

தனி மனித சோகம் சிறிதுசிறிதாய் மறக்கப்பட வேண்டிய ஒன்று. செயலிழக்கச் செய்யும் நினைவுகளை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திப் பார்ப்பது தவிர்க்கப்பட வேண்டும். படிக்காத திரைப்படப் பாடல்களை அல்லது காட்சிகளை என்றும் நாம் நினைவு கூர்வதில்லை. படித்த பாடல்களையே காட்சிகளையே திரும்பத்திரும்ப காண விளைகிறோம். அதுபோல் துன்புறுத்தும் நினைவுகளை மறந்து இதம் சேர்க்கும் நினைவுகளை மட்டுமே பாதுகாத்துக் கொள்ள வேண்டும். வாழ்வு இனிதாய் இருக்கும்.

சமூகக் கட்டுப்பாடு (சமூகத்தின் மீதான அக்கறை) இப்போதெல்லாம் மறக்கப்பட்டு விட்டது. குழந்தைகள் மாடிப்படிகளில் ஓடி ஏறி இறங்கினால், முன்பெல்லாம் எவர் வீட்டுக் குழந்தையாயினும் வயதில் பெரியவர்கள் வித்தியாசம் பாராது என்ன வேலையிருந்தாலும் நின்று அவர்களை நிறுத்தி மெதுவாகப் போ என்று சொல்வார்கள். குழந்தைகளும் அவர்கள் பேச்சிற்கு மரியாதையுடனும் பணிவுடனும் கட்டுப்படுவர். அதுபோல் வீதியில் குடிகாரக் கணவன் மனைவியை அடித்துக் கொண்டிருந்தால், யாராயிருந்தாலும் நின்று தவறு என்று தடுத்து நிறுத்துவார்கள். ஒரு பெரியவர் குளிருக்கு துணியால் காதுகளை மூடிக் கட்டிக் கொண்டு சிகரெட் குடித்துக் கொண்டிருந்தார். ஒரு பெண்மணி அவரருகில் வந்து சிகரெட் குடிக்கக் கூடாதென்பதை வலியுறுத்திச் சொல்லிச் சென்றார். அந்த அளவில் அந்தப் பெண்மணிக்கு சமூக அக்கறை.

அரசியல் தலைவர்கள் ஏதேனும் தவறு அறியாது செய்தால், எதிர்கட்சித் தலைவரோ உறுப்பினர்களோ கடமை உணர்வுடன் எடுத்துச் சொல்லும் முறை மறக்கப்பட்டுவிட்டது.

(தொடரும்)

# கவிதையின் வேர்கள் நீண்டது

க.பிரியா


ஒரு கவிதை தன்னை வெளிப்படுத்திக் கொள்வதற்கான தருணங்கள் உயிர்ப்புமிக்க பொழுதாகவே அமைகிறது. மனக்கிளர்ச்சி சொற்களை, அதன் புதை குழியிலிருந்து அகழ்ந்தெடுத்து வருகின்றது. உதறி, உதறி காயப் போட்டபின் எஞ்சியிருக்கும் ஈரமாய் மனித நேயம் உலர்ந்து போனபின் கிளர்ந்தெழும் வெப்பம் கவிதையென்று தன்னை மொழிபெயர்த்துக் கொள்கிறது.

எல்லோரிடமும் சொற்கள் மூடை மூடையாகக் குவிந்து கிடக்கின்றன. தேவதைகள் உதிர்த்த சொற்களைச் சிலரும், சாத்தான்கள் ஓதிய சொற்களைச் சிலரும், வியர்வையில் மக்கிய வாசனையைச் சுமந்தவர்களில் சிலரும், தங்கள் கிரீடங்களில் சூடிக் கொள்ள அது தன்னைக் கவிதையென்று கூறிக் கொள்கிறது. சொற்களின் அதிபதிகள் எவரும் ஒரு கவிதையை பிரசவித்து விட முடிவதில்லை.

அறிந்தே உணர்ந்த துரோகம் சிலரின் சொற்களை அபகரித்துக் கொண்டு மௌனத்தை கையில் வலுக்கட்டாயமாகத் திணித்துப் போகிறது. அந்த மௌனமோ தன்னை புதைத்தவர்களை வஞ்சம் தீர்க்கும்படியாய் வாக்கியங்களாக உயிர்பெற்று கவிதைகளை பிரசவிக்கின்றன.

பிரியமான இடத்திலிருந்து நாம் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படுகையில் ஏற்படும் உணர்வுகள் எவராலும் அறிந்து கொள்ள முடியாத தவிப்பு உலகம் எல்லாவற்றையும் ஜீரணித்து ஜீரணித்து தன்னை வலுவாக்கிக் கொள்கிறது. எனினும் புறக்கணிப்புகளின் அதீத காயங்களை சேமிப்பில்தான் வைத்திருக்கிறது. விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அது கவலைகளை வட்டியென பெருக்கிக் கொண்டிருக்கத்தான் செய்கிறது.

முட் செடிகளுக்குள் சுற்றுகிற வண்ணத்துப் பூச்சிகளுக்கு காயங்களே இறுதித் தீர்ப்பென்றாலும், சில பூச்செடிகளை புறக்கணித்துவிட்டு வந்த வண்ணத்துப் பூச்சிகளால் செடிகளின் அழுகையை உலகம் கவிதையென்று மொழிபெயர்த்துக் கொள்கிறது.



> பிரியமானவர்களால்
> உபசரிக்கப்படாத வார்த்தைகள்
> ஒரு முட்குவியலாக மனதை
> குத்திக் கிழித்துக்
> கொண்டேயிருக்கிறது. அங்
> கொரு கவிதையின் விதை
> மெல்ல முளைப்பதை
> ஈரமானவர்களால் உணர முடியும்.

தனித்திருக்கிற தனிமை பெரும் இன்பமாகவும் சிந்தனையின் ஊற்றுக் கண்ணாகவும் இருப்பது உண்மைதான். கும்பலில் தனித்துப் போகிற பெருந்துயரம் இதயத்தை உடைத்துப் போட்டு விடுகிறது. தீய்ந்த பிரியங்களின் நெடி அங்கே நெருடுகிறது. பிரியமானவர்களால் உபசரிக்கப்படாத வார்த்தைகள் ஒரு முட்குவியலாக மனதை குத்திக் கிழித்துக் கொண்டேயிருக்கிறது. அங்கொரு கவிதையின் விதை மெல்ல முளைப்பதை ஈரமானவர்களால் உணர முடியும்.

முளைக்கத் தவிக்கிற விதைகளின் வீரியம் தன்னை மிதிக்கும் [illegible] போர்க்[illegible] கவிதையின் [illegible]டுகிறது. தனக்கான மனிதத் துணைகளை வெப்பமாய் வைத்துக் கொள்ள தன் சொற்களால் சூடேற்றிக்கொண்டே இருக்கின்றன. காலங்காலமாய் மக்கிக் கொண்டிருந்த உணர்ச்சிகளிலிருந்து வெப்பக் காற்று பூமியை உடைத்துக் கொண்டு வெளியேறுகையில் புல், பூண்டுகள் கருகவே செய்கின்றன. நச்சுக்களைகளை ஒழிக்கும் பூச்சி கொல்லியாகவும் கவிதைகள் பூமியை வலம் வருகின்றன.




சட்டென எல்லோர்க்குள்ளும் ஒரு அதிசயமழை பெய்யத்தான் செய்கிறது. துரதிர்ஷ்டம் வாய்ந்தவர்கள் ஒரு குடைக்குள் ஒளிந்து கொண்டதை பெருமையோடு கூறிக் கொள்கிறார்கள். அதிர்ஷ்டம் வாய்ந்தவர்களோ துளித் துளியாய் மழையை அனுபவிக்கிறார்கள். அந்தத் துளிகள் எழுத்துகளாகப் பிறப்பெடுக்க அதுவோ பெருக்கெடுத்து ஓடும் கவிதையென்று பெரு வெள்ளமாகிறது.

வரலாற்றைச் சுமந்து கொண்டு அலைகிற ஒரு கவிதை எப்போதும் ஒரு தீப்பந்தத்தை ஏந்திக் கொண்டுதான் ஊர் சுற்றுகிறது. நினைவின் தடங்களில் சொட்டுச் சொட்டாய் வீரன் ஒருவனின் இரத்தத் துளிகள் சிதறிக் கிடக்கின்றன. யாரோ ஒரு வழிப்போக்கன் அதைச் சுரண்டிப் பார்க்க அது தன்னை கவிதையென்று கூறியபடி எழுச்சியுடன் கிளம்புகிறது.

கவிதையின் வேர்கள் நீண்டது மட்டுமல்ல; ஆழமானதும்தான். மனிதர்களின் மனங்களில் கம்பீரமாய் நிலைத்து நிற்கிறது ஒரு நல்ல கவிதை எப்போதுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கு பற பற...

இன்றும் கிராமங்கள் மற்றும் பாடசாலைகளில், சிறுவர்களினால் விளையாடப்படும் விளையாட்டுகளில் இதுவும் ஒன்று. வெறும் பொழுதுபோக்கு மட்டுமின்றி, அறிவுக்கும் விருந்து படைக்கும் அற்புதவிளையாட்டு இது. இந்த விளையாட்டின் முக்கிய நோக்கம், பறக்கின்ற உயிர்களுக்கும், மற்றவைக்கும் உள்ள வேறுபாட்டை உணர்த்துவதே ஆகும். அதுமட்டுமன்றி, கீழே குறிப்பிட்டுள்ள மறைமுக நன்மைகளும் உள்ளன.

1.தெளிவாக கவனிக்கும் திறன்.

2.சொல்வதை விரைவாகப் புரிந்துகொள்ளும் திறன்.

இந்த விளையாட்டை எப்படி விளையாடுவது என்று பார்ப்போமா?

**விளையாடத் தேவை:**

குறைந்தது 8 பிள்ளைகளும் அமைதியான இடமும் இருந்தால் போதும்

**விளையாடும் முறை:**

1.அனைவரும் வட்டமாக அமர்ந்து கொள்ள வேண்டும். இரண்டு கைகளையும் நிலத்தில் வைத்திருங்கள்.

2.குழுவினரை வழிநடத்த ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார். அவர் கட்டளைகளின் படி மற்றவர்கள் செயல்படவேண்டும்.

3.வழிநடத்துபவர், ஏதாவது ஒன்றைச் சொல்லி இறுதியில் ''பற பற'' என்ற வார்த்தையைச் சேர்த்துச் சொல்ல வேண்டும்.

உதாரணமாக, கொக்கு பற பற என்று சொன்னால், எல்லோரும் ''கொக்கு பற பற'' என்று சொல்லிக்கொண்டு, பறப்பது போல் கைகளை அசைத்துக் காட்டவேண்டும்.

அன்றி, ''செங்கல் பற பற'' என்றால், பிள்ளைகள் அந்த வார்த்தையை சொல்லவோ,செய்கைகள் செய்யவோ கூடாது.அப்படிச் செய்தால், செய்பவர் ஆட்டத்திலிருந்து விலக்கப்படுவார்.

4. குழுவில் இருப்பவர்கள், வழிநடத்துபவர் சொல்வதை கவனமாக,தெளிவாகக் கேட்க வேண்டும். சொல்பவை பறப்பவையா அல்லது பறக்க இயலாதவையா என்பதை உணர்ந்து வேகமாக செயலில் காட்ட வேண்டும்.

5. வழிநடத்துபவர், ஆட்டத்தைத் துவங்கும்போது மெதுவாகச் சொல்லியும், போகப் போக வேகத்தைக் கூட்டியும் கட்டளை இட வேண்டும். இதனால், வட்டம் சுருங்கத் துவங்கும்.இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருப்பவருக்கு பரிசுகொடுக்கலாம்.

6. மீண்டும் வட்டமாக அமர்ந்து வேறு ஒருவர் வழிகாட்டியாக செயல்பட வைத்து விளையாடத் தொடங்கலாம். ஆர்வம் குறையும் வரை விளையாடலாம்! குறைந்தது மூன்று சுற்றுகள் விளையாடுவது நன்று.

# பற்பசையில் இவ்வளவு பொருள்களா?




பற்பசை பல்லை துலக்கவென அலுமினியம் சல்பேற், மக்னீசியம் சிலிக்கேற், கல்சியம் பொஸ்பேற், சோடியம் மெற்றாபொஸ்பேற் ஆகியவற்றைக் கொண்டது. பற்பசையின் காயாத்தன்மையைப் பேணுவதற்கும் பெரும்பாலும் கிளிசரீன் பயன்படும். அத்துடன் ஒட்டும் தன்மையைப் பேணுவதற்குச் சிந்தற்றிக் பொலித்தீன் கிளைக்கோலும், சோடியம் அல்ஜீனேற்றும் பயன்படும். சோடியம் CMC சிறந்த ஒட்டும் பொருளாகும். பல்லைத் துப்புரவாக்குவதற்காக சோடியம் லோறில் சல்பேற், மக்னீசியம் லோறில் சல்பேற் என்பன பிரதானமாக உபயோகிக்கப்படும். கிருமித் தாக்கத்தைக் கட்டுப்படுத்தவும், வாய் நாற்றத்தைத் தடுக்கவும் குளோரபில், புளோரைட், சோடியம் டை ஐதரொட்சி அசற்றேற் போன்றன உள்ளெடுக்கப்படும். இனிப்புத் தன்மைக்காக சக்றின் பயன்படும். சுவையூட்டிகளாகப் பெப்பமின்ற், வின்ரகிறீன், கராம்பு, மல்லி, யூக்கலிப்பரஸ், சாதிக்காய் ஆகியவற்றின் எண்ணெய் வகைகள் உள்ளடக்கப்படும் பாதுகாப்புப் பொருள்களாக குளோரபோம், சுவையூட்டும் எண்ணெய், பராஜத ரொட்சி பென்சோவேற், புறப்பைல் பராஜத ரொக்கி பென்சோவேற் என்பன பயன்படும்.

அட இவ்வளவா? எனப் பயந்து விடாதீர்கள் இவ்வளவும் நிறைவான பற்பசையின் இலட்சணங்கள்.

பா.லக்ஷிப்பிரியா,
நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.




# தாயின் இதயம்

பச்சைப் புல்வெளியில் அழகு இருக்கிறது
பருத்த மரங்களில் உறுதி இருக்கிறது
கோடை மலைச்சாரலில் குளிர்ச்சி இருக்கிறது
குதூகலக் காற்றில் இன்னிசை இருக்கிறது

ஆடும் ரோஜாச் செடியில் அழகு இருக்கிறது
அழகிய பனித்துளியில் புதுமை இருக்கிறது
சிட்டுக் குருவியின் பாட்டில் இனிமை இருக்கிறது
செவ்வான் பரப்பில் அமைதி இருக்கிறது

இயற்கையிடம் இந்தக் குணங்களைப்
பார்க்க முடிகிறது
எல்லாவற்றையும் ஒருங்கே அடக்கி
வைப்பது தாயின் இதயம்

சி.பிரசாந், தரம்-7
நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை




# மலர்கள்

இப்போது பார்க்கும் இடங்கள் எங்கும் அழகான மலர்கள் பூத்துக்குலுங்குகின்றன. பார்ப்பதற்கு கண்கள் ஆனந்தம் அடைகின்றன. மனதுக்கு மகிழ்ச்சியும் தருகின்றன. மலர்களைக் கண்டு, வண்டு முதல் மானிடன் வரை மயங்காதவர்கள் உண்டா..? இயற்கையை ரசிக்கும் ஒவ்வொரு உள்ளமும் மலர்களின் அழகையும் அதன் நறுமணத்தையும் நுகர்ந்து மகிழும்.

ஒவ்வொரு வடிவங்களில் மலர்கள் இருக்கின்றன. மலர்கள் இயற்கையைத் தரும் பெரும் செல்வமாகும்.

பல பல வடிவங்களில் பல பல நிறங்களில் காணக்கூடியதாக உள்ளன. மக்களின் மனதை வருடி தன் வசம் இழுத்துக்கொள்ளும் வாசனை மலர்களும் உண்டு. உதாரணமாக மல்லிகைப்பூ இதன் வாசனையால் மயங்காதவர்கள் இல்லை.

மலர்களின் பெயர்கள் நிறைய உண்டு

மல்லிகை ரோஜா. முல்லை, தாமரை, செவ்வந்தி, சூரிய காந்தி என நிறையப் பெயர்கள் உள்ளன. தேனீக்கள் கூட அதில் தேனை உண்டு மகிழ்வாக வாழ்கின்றன.

மலர்கள் இறைவனின் பூசைக்கு பயன் படுத்தப்படுகின்றன. பெண்களின் கூந்தலைக்கூட அலங்கரிக்க உதவுகின்றன. ஒவ்வொரு மங்கலமான நிகழ்ச்சிகளுக்கும் துயரத்தின் நிகழ்சிக்கும் உதவுகின்றன.இதில் வாசனைத் திரவியம் கூட தயரித்து பயன் அடைகின்றனர் ஒவ்வொரு மரமும் மலர்கள் வந்தால் தான் காயை கொடுக்கின்றது.

முதல் பூவாகி காயாகி கனியாகுவதே இயற்கையாகும். இதன் முலம் எந்த மரத்திற்கும் பெருமை உண்டு. வீட்டைக் கூட அழகாகவும் வாசனையுடனும் வைத்திருக்கும் பெருமை இந்த மலர்களுக்கு உண்டு

மலர்களை நேசித்து நம் வீட்டிலும் பூஞ்செடி நடுவோம்.

# வாகனங்களின் தமிழ்ப் பெயர்




க.சர்மிலன், தரம் -3 ஏ.
கிளி/ ஐயனார்புரம் அ.த.க.பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரண்பாடுகளும் போராட்டங்களும்



**உணவுச் சங்கிலியில் ஒன்றையொன்று பிடித்துஉண்பது, இயற்கை வைத்த முரணே. அந்த இயற்கையே ஒன்றில் இருந்து மற்றையது தன்னைக் காத்துக் கொள்ளும் இயற்கை அரண்களையும் வைத்துள்ளது. அத்துடன் தன்னைத்தானே பாதுகாக்க வேண்டும் என்ற பய உணர்வையும், கூடவே போராட்ட உணர்வையும் வைத்துள்ளது.**

இராமஜெயபாலன்

முரண்பாடுகளென்பது சமத்துவமின்மையால் ஏற்படுகின்ற விளைவு. எவ்வாறாயினும் முரண்பாடுகள், மனோநிலையைப் பாதிக்காதவரை முரண்பாடுகளால் தொல்லையில்லை. மற்றும் முரண்பாடுகளுக்கு எதிரான போராட்டங்களும் இல்லாமலில்லை. உதாரணம் உணவுச் சங்கிலியில் ஒன்றையொன்று பிடித்து உண்பது, இயற்கை வைத்த முரணே. அந்த இயற்கையே ஒன்றில் இருந்து மற்றையது தன்னைக்காத்துக் கொள்ளும் இயற்கை அரண்களையும் வைத்துள்ளது. அத்துடன் தன்னைத்தானே பாதுகாக்க வேண்டும் என்ற பய உணர்வையும், கூடவே போராட்ட உணர்வையும் வைத்துள்ளது. இவை ஓர், ஈர் உயிரினத்தில் ஏற்பட்ட எதிர்பாராத பரிணாம வளர்ச்சியல்ல, மாறாகப் பல்வேறு உயிரினங்களில் பல்வேறு வடிவில் இருக்கின்றது. எவ்வாறாயினும தாவரங்கள் தவிர்ந்த மற்ற உயிரினங்கள், ஒன்றிலிருந்து இன்னொன்று உணவைப் பெற்றுக்கொள்ளாவிட்டால் நீரையும், காற்றையும் தவிர வேறு எதையும் நுகர முடியாது இருந்திருக்கும்.

**கோள்களில் முரண்பாடு-**

பெரிய கோள்களும் சிறிய கோள்களுமாகச் சூரியனை வலம் வருகின்றன. இவற்றில் சூரியன், சந்திரன், பூமியே எம்மைப் பொறுத்தவரை முக்கியத்துவம் பெறுகின்றன. காரணம் சூரியனின் இன்றியமையாத் தேவை. தவிர சந்திரனே முதல் காலத்தைக் கண்டுபிடிக்க உதவியதால் தெய்வீகமாகப் போற்றுகின்றான். ஆனால் இந்த மூன்று கோள்களும் சமனானதாக இல்லை. சூரியன் மட்டுமே நெருப்பாக எரிகிறது. ஆனால் மூன்று கோள்களும் நெருப்பாக எரிந்து கொண்டிருந்தால் ஈர்ப்பு விசையில் ஒன்றில் ஒன்று கட்டுப்பட்டு இயங்காது. தவிர பூமியின் உயிரினங்கள் தோன்றியும் இராது. சரி அப்படியல்லாது, பூமி மற்றும் சந்திரன் போல் சூரியனும் நெருப்பாக எரிந்து கொண்டிராது விட்டால் இரவு, பகல் ஏற்படாது. வெப்பநிலை இல்லாது உயிரினங்கள் வாழ முடியாத நிலையேற்பட்டுவிடும்.

**பூமியில் முரண்பாடு-**

பூமி கோள வடிவத்தில் இருக்கின்றபோதும் எமது உணர்வில் அது தட்டையாகவே உணரப்படுகின்றது. தவிர பூமியில் உள்ள கனியவளங்கள், நீர் வளங்கள் இதர வளங்கள் சரிசமனாக எங்கும் இல்லாததால் இவைகளைத் தேடிய காரணத்தாலேயே மனித மற்றும் உயிரினப் பரம்பல் ஏற்பட்டது.

**தாவர இன முரண்பாடு-**

தாவர இனம் தமது உணவைத் தாமே தயாரிக்கின்றது. தவிர அதன் இனப்பெருக்கம், இனப்பரம்பல், இயற்கையின் அனுசரணையால் மனிதன் உட்பட விலங்குகளால் (பொதுவாக) இடம்பெறுகிறது. இவ்வாறு இடம்பெறுவதால் தாவர இனத்துக்கு எந்தச் சங்கடங்களும் இல்லாதுவிட்டாலும் பிற உயிரினங்களின் தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். தாவர இனத்தில் பல்வேறு முரண்பாடுகள், முதலாவது உணவுத் தேவைகளுக்குரிய தாவரங்கள் மற்றும் இதர தேவைகளான தளபாடம், கருவிகள், அழகுக்கான பூந்தோட்டம் உட்பட பிற தேவைகள் தவிர உணவுத் தாவரங்கள் கூடப் பலவகை தானியங்கள் மரக்கறி வகைகள் மற்றும் மருத்துவக் குணத் தாவரங்கள். இவற்றுள் புரதம், கொழுப்பு, காபோவைதிரேட்டு மற்றும் விற்றமின்கள், கனியுப்புக்கள் மேலும் சுவை ஊட்டிகள் எனப் பல்வேறு தேவையுடைய தாவர இனங்கள் உண்டு.

**விலங்குகளில் முரண்பாடு**

இங்கு விலங்குகள் எனப் பொதுவாக அழைக்கப்பட்டாலும் மனிதன் தவிர்ந்த எல்லா உயிரினமும் அடங்கும். மேலே சொல்லப்பட்டவை போல் முரண்பாடுகள் விலங்குகளில் இருந்தாலும் பிரச்சினைக்குரிய முரண்பாடுகள் விலங்கிலிருந்தே ஆரம்பிக்கப்படுகின்றன. அதாவது உணவுச் சங்கிலி மற்றும் ஆண், பெண் வேறுபாடு. இங்கு விதிவிலக்கான விலங்குகளை - சிலந்தி ஒரு பொதுவான விலங்கியல் தன்மையை ஆராய்கின்றபோது விலங்குகள் ஐந்து புலன்கள் வழியாக காமத்தைச் சேமித்து அனுபவிப்பதில்லை. காரணம் அவை உடைகள் அணிவதில்லை. தவிர அவை உணவு வகைகளைச் சேமித்து சுவைக்காகச் சமைத்து உண்பதில்லை. பசியின் உந்துதலால் தமக்குரிய வழமையான உணவு வகைகளை மட்டுமே உட்கொள்கின்றன. இவற்றிடம் பந்த பாசம், பற்றுக்கள் கிடையாது. மட்டுப்படுத்தப்பட்ட தாய்மை உணர்வு மட்டுமே இருக்கிறது. தவிர தமது குஞ்சுகளையோ குட்டிகளையோ சிறிது காலத்தில் கொத்தியும் முட்டி மோதியும் விலத்திவிட்டுத் தமது புது வாழ்வை ஆரம்பிக்கின்றன. இதனால் இவற்றுக்கு ஏற்படும் துன்பங்கள் இவைகளைப் பெரிதாகப் பாதிப்பதில்லை.

**மனிதரில் முரண்பாடு**

மனித சமூகம், பொறுப்பற்று இருந்த ஆண்சமூகத்தை, பொறுப்புடன் செயற்பட வைக்க, ஆண்வழிச் சமுதாய அமைப்பை உருவாக்கியது. இதனால் மனித வலு பிணைந்து வலுப்பெற்றது. இதற்குப் பெண்களின் கற்பும் கவர்ச்சியும் ஆயுதமாக்கப்பட்டன. இதனால் தமது பரம்பரைகளைக் குறைவில்லாது காக்க தொழில்முறைப் பரம்பரைகளும் உருவானது. தாவர விலங்குகளில் தாய்மை உணர்வு மட்டுமே இருந்தது. மனிதரில் பல்வேறு உறவு முறை முக்கியமாக தாய், தந்தை மட்டுமல்லாது பேரன், பேர்த்தி, பூட்டன், பூட்டி, கொப்பாட்டன் எனப் பாசப் பிணைப்புக்கள் வளர்ந்து சென்றன. இதனால் சுமைகள் பொறுப்புக்கள் மட்டுமல்ல துன்பங்களும் வேதனைகளும் பல்வேறு காரணங்களால் ஏற்பட்டது. நோய்கள், இயற்கை அழிவு, போர் மேலும் பல.

இதனால் மனிதனிடம் இயற்கைக்கு எதிரான உணர்வே புதிய ஆன்மிக சாதனையாக உருவானது. அதாவது உடைகளை உடுக்காது நிர்வாணமாக, நாவிற்குச் சுவை தராத இலை குழை மட்டுமே உண்டு, காட்டில் சென்று, நீர் மற்றும் காற்றைக் கூட ஒறுத்துத் தவமியற்றினர். இந்தக் கொள்கையைச் சேர்ந்தவர்களில் சிலர் உடல் முழுவதையும் உடையால் மறைத்து இச்சைக்கு அடிமையாகாது உணவு வகைகளையும் ஒறுத்து ஆன்மிக சாதனை செய்தனர். எவ்வாறாயின் இவர்களின் உறவு முறை அல்லாத கொள்கை அடிப்படையான பரம்பரையினர் பல்வேறு சமயங்களை உலகில் உருவாக்கினர். எவ்வாறாயினும் அவர்களின் துன்பமில்லாத நிலை இவற்றுள் முக்கியமானது. சமணசமயம், இந்து சமயம் உட்பட உலகின் தொன்மையான மதங்கள் முற்றாக அழிந்து புதுவடிவம் எடுத்தவையே இன்றைய மதங்கள் அனைத்துமாகும்.

# இந்தோ – அரேபிய எண்களின் பரிணாம வளர்ச்சி

அருணா தருமலிங்கம்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| I | II | III | IV | V | VI | VII | VIII | IX | X | XI | XII |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| XX | XXX | XL | L | LX | LXX | XC | C | CX |
| 20 | 30 | 40 | 50 | 60 | 70 | 90 | 100 | 110 |
| CC | CCC | CD | D | DC | CM | M | MC | MM |
| 200 | 300 | 400 | 500 | 600 | 900 | 1000 | 1100 | 2000 |

MCMLXX : 1970

ரோமானிய எண் குறிகள்

பொதுவாக எண்களைப் பொறுத்தவரை நாம் ஒன்று, இரண்டு, மூன்று எனத் தொடர்ந்து கூறவோ எழுதவோ முனைகின்றோம். இவை இந்தோ - அரேபிய எழுத்துக்கள் என்பது வரலாற்று ஆசிரியர்களின் கூற்றாகும். தமிழ் மொழியில் இலக்கங்களுக்கென்று பிரத்தியேக எழுத்துக்கள் காணப்படுகின்றன என்பதை நாம் நன்கு அறிவோம். ஒன்று என்பதை 'க' என்றும் இரண்டு என்பதை 'உ' என்றும் ஐந்து என்பதை 'ரு' என்றும் குறிப்பிடுகின்றனர்

தென் இந்தியாவைப் பொறுத்தவரை பண்டைக்காலத்திலிருந்தே எண்களைக் குறிக்கும் தனி எழுத்துக்களைப் பயன்படுத்தி வந்தார்கள். தமிழ் நாட்டிலுள்ள சாஸனங்களில் எண்குறிகள் எட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து பாவனைக்கு விடப்பட்டது. இருப்பினும் இதற்கு முன் ஆண்ட பல்லவர் முதலியோருடைய காலத்திலிருந்து இவற்றின் வளர்ச்சியை ஓரளவுக்கு அறியமுடிகின்றது. சென்னையில் காணப்படுகின்ற எண்களில் ஒன்றுக்கு மேற்பட்ட இலக்கங்களைக் குறிக்கும்போது அவை இவ்வாறு அமைக்கின்றன. பத்து 'ய', நூறு 'ள', ஆயிரம் 'சூ', இருபது இருநூறு, இரண்டாயிரம் ஆகிய எண்கள் முறையே 'உய, உள, உசூ' என்று குறிப்பிட்டார்கள்.

தமிழ்நாட்டுச் சாஸனங்களில் கால், அரை, முக்கால் போன்ற பின்னங்களுக்கு தனி எண் குறிகள் உண்டு. காணி, அரைக்காணி, முந்திரிகை போன்ற கீழ்வாய் இலக்கங்களுக்கு தனிக் குறிகள் தென்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ாலத்தின் தத்துவத்தை டணர வைக்கின்ற ிலட்சியவாதிகள்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

மனதை ஒருமுகப்படுத்தினால் சக்தி கிடைக்கும் என்பதற்கு இதைவிட சான்றுகள் தேவையில்லை எனலாம். மனதை ஒருமுகப்படுத்துதல் சாதாரண விடயமல்ல. முயற்சித்தால் எளிதாகிவிடும். அதற்குப் பொறுமையும், உழைப்பும், முயற்சியும் இருந்தால் வெற்றிபெற்றுவிடலாம். சகல சக்திகளையும் பெற்றுவிடலாம். ஒரு காரியத்தை மேற்கொள்வதற்கு முன்பாக நன்றாகச் சிந்திக்க வேண்டும். யோசித்து முடிவு செய்தபின் அதையே முயன்று முடிக்க வேண்டும். எந்தப் பணியில் ஈடுபட்டிருந்தாலும் மனம் அதிலேயே ஒன்றிப்போய் இருத்தல் வேண்டும். முகம், கை, கால் அலம்பும் போதோ குளிக்கும் போதோ வேறு சிந்தனைகளை மனதில் நினைக்கக் கூடாது. பின்னர் சாப்பிடும் வேளையில் வேறு எண்ணங்களை நினைவில் வைத்துக் கொண்டு சாப்பாட்டு மேசையில் இருக்கும் தின்பண்டங்களை ருசி பார்த்தல் கூடாது. முழுமனதையும் சாப்பாட்டிலே பதிய வைத்து உண்ண வேண்டும்.

சாப்பிடுகின்ற உணவும் ஜீரணிக்க உகந்த நிலையில் வயிற்றைச் சென்றடைகின்றது. பொதுவாக ஒரு விடயத்தை எண்ணிக் கொண்டிருக்கும்போது எக்காரணம் கொண்டும் பிறவிடயங்களைப் பற்றித் துளிகூட நினைத்தல் கூடாது. நாம் எதைப் பற்றியும் தீவிரமாகச் சிந்திக்காமல் சிறிது நேரம் இருக்க முடியுமானால் எமது உடலும் மனமும் ஓர் ஒப்பு நிலையை அடைகின்றன.

நாம் ஒரு காரியத்தில் இறங்கும்போது நம்பிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தே ஆக வேண்டும். துன்பதுயரங்களைச் சிந்தித்து எதிர்நீச்சல் போட்டதன் பின்னரே வெற்றி கிடைக்கலாம். இதற்கு மின்குமிழைக் கண்டுபிடித்த எடிசன் எவெரெஸ்ட் சிகரத்தில் வெற்றிக் கொடியை பட்டொளி வீசப்பறக்க விட்ட பெண்கில், எழுபது நாள்கள் கடல் பிரயாணம் செய்து பின்வாங்காது இறுதியில் அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ் போன்றவர்களின் வியக்கவைக்கும் கண்டுபிடிப்புக்களைச் சான்றாகக் கொள்ளலாம். இவை எல்லாம் வெற்றியளித்தமைக்குக் காரணம் முயற்சியே ஆகும். வாழ்க்கை எமக்குப் பாடமாகட்டும் என்பதை கீழே வரும் உண்மைக்கதை நன்கு உணர்த்துகின்றது.

மர்மப்படங்களையெடுத்து உலகப் பிரசித்தி பெற்ற ஹாலிவூட் சினிமா இயக்குநர் அல்பிரட் ஹிட்ச்கொக்கின் தந்தை மிகவும் கண்டிப்பானவராம். அவர் தனது மகன் ஹிட்ச்கொக்கை அதைச் செய்யாதே இதைச் செய்யாதே என்று கட்டளை பிறப்பிப்பது வழக்கமாம். இதனால் ஹிட்ச்கொக் இளைஞனாக வளர்ந்த பின்னரும் பயந்த சுபாவமும் தாழ்வு மனப்பான்மையும் மாறவே இல்லை. ஹிட்ச்கொக்கின் எதிர்காலம் கேள்விக் குறியாகப் போகிறதே என்று கவலையடைந்த உறவினர் ஒருவர் ஹிட்ச்கொக்குக்கு தந்திரமூலம் அதிர்ச்சி வைத்தியம் மேற்கொள்ளத் திட்டமிட்டார். இதன் பிரகாரம் முகவரி எழுதப்பட்ட கடித உறையொன்றை அவரிடம் கையளித்து அதை உரியவரிடம் சேர்ப்பிக்குமாறு வேண்டிக் கொண்டார். விலாசத்தைக் கண்டதும் ஹிட்ச்கொக் திகிலடைந்தார்.



முகவரியில் பொலிஸ் பொறுப்பதிகாரியின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே தயங்கித் தயங்கி பொலிஸ் காரியாலயத்தை நோக்கி ஹிட்ச்கொக் பயணித்தார். அங்கு சென்று கடிதத்தைக் கையளித்தது தான் தாமதம் ஹிட்ச்கொக்கை 'லொக்கப்பில்' போடும்படி பொறுப்பதிகாரி பொலிஸாருக்கு உத்தரவிட்டார். குற்றம் எதுவும் செய்யாத எனக்கு ஏன் இந்தக் கதி? புலம்பியவாறு விளக்கமறியல் கூண்டில் இரண்டு, மூன்று நாள்கள் ஹிட்ச்கொக் கழிக்க வேண்டியேற்பட்டது.

அவருக்கும் ஏனைய கைதிகளுடனே உணவுப் பரிமாற்றப்பட்டது. அடி, உதை நீங்கலாக ஏனைய அதிர்ச்சி வைத்தியம் ஹிட்ச்கொக்குக்கு அவ்வப்போது வேண்டுமென்றே வழங்கப்பட்டது. சிறையில் கழிந்த இரண்டு ஒரு நாள்களிலேயே ஹிட்ச்கொக்குக்கு பயம் தெளிந்து, தாழ்வு மனப்பான்மையும் மறந்து சாதாரண பிரஜையாக மாறிவிட்டார்.

ஒருநாள் பொலிஸ் பொறுப்பதிகாரி ஹிட்ச்கொக்கைத் தனது காரியாலயத்துக்கு அழைத்துச் சென்று புத்திமதி கூறியபின் தனது காரிலேயே வீடு வரை அழைத்துச் சென்றார். உறவினரின் அழுத்தம் காரணமாக ஹிட்ச்கொக்கின் தந்தை எடுத்ததற்கெல்லாம் கண்டிப்பதை நிறுத்திவிட்டார். ஹிட்ச்கொக் தற்போது புதிய மனிதன் ஆகிவிட்டார். விளக்கமறியல் சாலையில் அவர் பெற்றுக் கொண்ட அனுபவம் அவரை முழுமையாக மாற்றிவிட்டது எனலாம். தோல்வியின் மறுபக்கமே வெற்றி என்பது புத்திஜீவிகளது கூற்றாகும். தோல்வியே அனுபவங்களைக் கற்றுத் தருகின்ற ஆசான். தோல்வியைச் சந்திக்காமல் வெற்றியை அடைவது கஷ்டமான காரியமாகும்.

தன்னம்பிக்கையும் முயற்சியும் எந்த ஆசையும் நிறைவேறுவது கடினமான விடயம். ஆகவே காலச்சக்கரத்தை மிகவும் உன்னிப்பான முறையில் கொண்டு செல்வோமானால் வாழ்க்கையில் சுபீட்சமும் நிம்மதியும் பெறலாம். இதற்கு காலத்தின் தத்துவத்தை உணர வைக்கின்ற இலட்சியவாதிகளிடமிருந்து கற்க வேண்டியுள்ளது என்பது மறுப்பதற்கில்லை, எனலாம்.

(முற்றும்)


**பல்வேறு நாடுகளின் எண் குறிகள்**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இந்தோ-அரேபிய எண் குறிகள் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| மாயா எண் குறிகள் | • | •• | ••• | •••• | — | •<br>— | ••<br>— | •••<br>— | ••••<br>— | [illegible] |
| கிரேக்க எண் குறிகள் | A | B | Γ | Δ | E | F | Z | H | Θ | I |
| பாபிலோனிய எண் குறிகள் | / | // | /// | //// | ///<br>// | ///<br>/// | ////<br>/// | ////<br>//// | ///<br>///<br>/// | ∩ |
| எகிப்திய எண் குறிகள் | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| சீன எண் குறிகள் | 一 | 二 | 三 | 四 | 五 | 六 | 七 | 八 | 九 | 十 |

தற்போது தமிழ் எண்களுக்கான எழுத்துக்களை அநேகம் பேர் உபயோகிக்கும் சந்தர்ப்பம் மிக அரிதாகவே உள்ளது. திருமண அழைப்பிதழ், பஞ்சாங்கம், இந்து சமய பொக்கிஷங்களை விளக்கும் நூல்கள் போன்றவற்றில் இவற்றைக் காணலாம்.

முன்னர் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட நாணயங்கள், ரூபா நோட்டுக்கள் போன்றவற்றில் அதன் பெறுமதியை தமிழ் எண் எழுத்துக்களால் குறிப்பிடப்பட்டிருந்தமையை நாமறிவோம். ஆனால் இன்றைய கால கட்டத்தில் நாணயங்கள், ரூபா நோட்டுக்கள் போன்றவற்றைப் புதிதாகப் பாவனைக்கு விடுகின்ற சந்தர்ப்பங்களில் பெறுமதியை தமிழ்மொழியில் பொறிக்கவோ அல்லது அச்சிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது. ஆதிகாலத்தில் மக்கள் சித்திரங்கள் வரைந்து எண்களைக் குறிப்பிட்டு வந்தனர்.

அமெரிக்க இந்தியர்களும் படங்களை வரைந்து எண்களை குறிப்பிட்டு வந்தனர். ஒரு படகில் ஐந்துபேர் செல்வதை அதில் ஐந்து பேர் பயணிப்பது போன்ற சித்திரத்தை வரைந்து காட்டினர். அதேவேளை ஒரு பயணத்துக்கு நான்கு நாள்கள் சென்றது என்பதை படத்தில் மேலதிகமாக நான் [illegible] யே ஒரு நாட்டின் சனத்தொகை ஐம்பது கோடி என்றால் அதனை [illegible] சிக்கல் தோன்றியது. ஆகவே இது சாத்தியப்படக் கூடிய விடயமல்ல எனத் தீர்மானித்தனர். (தொடரும்)




எமது காலினைத் தொடுவதற்காக
காத்துக்கிடக்கிறாய்.
வெள்ளத்தில்
இறங்க மனமில்லாதவர்கள்
வீட்டுக்குள் இருந்துகொண்டு
மழை பிடிக்கிறது என்று
பொய் சொல்கிறார்கள்.
பிறகு எப்படி உன்னிடம்
உண்மையை எதிர்பார்க்க முடியும்.

ஜன்னல் ஊடே
கையை வெளியே விட்டு
மழைத்துளிகளைத்
தட்டிப் பார்க்கின்ற ஆனந்தம் இருந்தும்
வீட்டுக்கு வெளியே வந்து
கருத்தக் குடை கொண்டு
மறுக்க மனம் எப்படி முடிகிறது.
முழுமையாக எல்லோரும்
விடுதலைப் போராட்டத்தில்
ஈடுபட்டிருந்தால்
விடுதலை அடைந்திருப்போம்
போராடாமல் இருந்துகொண்டு
போராட்டத்துக்கு
ஆதரவு தெரிவித்ததால்தான்
இன்று போராட்டத்தில்
தோல்வி கண்டோம்

ஊரே நனைந்துகொண்டு
வானம் கருப்பாக
இருந்துகொண்டு,
எல்லோரையும் வெளியே வராமல்
பூட்டிக்கொள்ளும்
நடைமுறை இருந்தும் உன்னை
தவிர்த்துக் கொள்ள முடியாதவர்களுக்கு
நனையத்தான் பிடிக்கிறது.
பலர் வீரச்சாவடைந்துள்ளார்கள்.

அனுமதி கேட்காமல்
பாய்ந்துகொண்டு விரைவாக
வழிந்து சென்றடையும்
பள்ளம் உள்ள நிலங்கள்
தாங்கிக் கொண்டு,
மழை நின்றும் காயாமல்
பல நாள்கள் காத்துக்கிடக்கின்றன.
தமிழர் விடுதலைக்கான போராட்டம்
பெரும் அளவில்
வடிவம் கொண்டபோதும்
முடியாமல் போனதால்
அடுத்த போராட்டத்தை
எதிர்பார்த்துக் காத்து நிற்கின்றனர்.

விருப்பத்துடனோ விருப்பமில்லாமலோ
காய்ந்துகொண்ட நிலம்,
மழையை எதிர்பார்க்கின்றபோது
விருப்பம் இல்லாமல் போய்விடாது.
விடுதலைக்கான தேடல்
மீண்டும் தொடரும்.

எல்லோரையும் நனைக்கும்
மழைக்கு வித்தியாசம் தெரியவில்லை.
மழையில் நனையும் எல்லோருக்கும்
முழுமையாக நனையத் தெரியவில்லை.
பக்கத்தூரில்
கூடுதலாகப் பெய்கிறது என்று,
எமது ஊரில்
அன்றைய தினம் பெய்ய மறுக்கும்
மழைக்கு,
கொஞ்சம் கூட மனமில்லை என்று
சொல்லும் எமது மனதுக்கு,
எனது ஊரினை
தொடர்ந்து நனைக்கின்றபோது
மழை பிடிக்காமல்
கொஞ்சம் கூட மனமில்லை
மழைக்கென்று சொல்லுகின்ற
எமது மனதுக்கு,
எதைத்தான் நிரந்தரமாக பிடிக்கிறது. (வளரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகசாலை

## நூல் - 'அருள் ஒளி'




தெல்லிப்பழை, ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம் வெளியிடும் மாத சஞ்சிகையான 'அருள் ஒளியின் நவராத்திரி விழாச் சிறப்பு மலர் வெளிவந்துள்ளது. இதில் நவராத்திரி விழா, நவராத்திரி மகத்துவம் எனும் கட்டுரைகளுடன் நவராத்திரி காலத்தில் ஸ்ரீ மகாலட்சுமி தேவி வழிபாடு பற்றிய விளக்கமும் தரப்பட்டுள்ளது. கேதார கௌரி விரதம், சக்தி வழிபாடு, செவ்வாய் விரதம் போன்றவற்றின் மகிமை பற்றியும் நிறை உணவு அறிவியல், கொல்லாமை என்பவற்றின் வழி சைவ சமய ஒழுக்கங்களைப் பேணுவதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டுள்ளது. சைவநெறி வளர்க்கப்பட வேண்டியதன் தேவையையும், அதனைப் பின்பற்றி ஒழுகும் வழக்கத்தையும் கொண்டியங்குவதன் மூலம் சைவப் பாரம்பரியத்தையும் சைவநெறி முறைகளையும் காக்க "அருள் ஒளி" தந்துள்ள ஆக்கங்கள் சிறப்பாக உள்ளன. வாசிப்போர் சைவம் செழிக்க உதவும் வகை வழிகாட்டும் நல்லதோர் இதழ் இதுவாகும்.


## நூல் - 'அம்பிகைபாகன் ஆளுமைத் தடம்'




யாழ். தேசிய கல்வியற்கல்லூரி விரிவுரையாளர் முருகேசு கௌரிகாந்தன் அவர்கள் 'அம்பிகைபாகன் ஆளுமைத்தடம்' எனும் நூலை வெளியிட்டுள்ளார். அதில் யாழ்ப்பாணக் கல்விமான்களுள் ஒருவரான அம்பிகைபாகன் அவர்களின் பணிகளும் வரலாறும் பற்றிய விவரங்கள் தரப்பட்டுள்ளன. "அம்பிகை பாகன் பிறின் சிப்பல் வீட்டுக்குச் சென்றால் படிக்க நல்ல புத்தகம் தருவாரடா!" என்று பலரும் எண்ணம் கொண்டு அவரைக் கண்டு விட்டுப் போகலாம் எனக் கருதிவரும் செய்கை தொடக்கம் அம்பிகை பாகனாரின் கல்வி, நிர்வாகப் பணிகள், எழுத்தாக்கப் பணிகள், பதிப்புப் பணிகள், சமயப் பணிகள், பொதுப் பணிகள் எனப் பலவற்றையும் ஆய்ந்து தொகுத்து இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

அத்துடன் அவருடன் தொடர்பு கொண்டமையாலும், அவர் பலருடன் தொடர்பு கொண்டமையாலும் வளர்த்துக் கொண்ட ஆளுமைச் சிறப்பை விளக்கியும் குடும்ப விலாசத்தை விரித்தும் எழுதப்பட்ட கட்டுரைகள் இதில் இடம்பெற்றுள்ளன. பின்னிணைப்பாக அம்பிகைபாகனாரின் அருந்துணையான நகுலாம்பிகை பற்றிய குறிப்புக்களும், அம்பிகைபாகனாரின் வாழ்நாள் நினைவூட்டும் நிழற்படங்களும் அவருக்குக் கிடைத்த வாழ்த்துக்களும் இணைக்கப்பட்டுள்ள, வாழ்ந்தோரின் வாழ்க்கை வாழ்பவர்களுக்குப் பாடமாக அமைதல் வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு வெளிவந்துள்ள அருமையான இந்நூல் வாசிப்பவர் மனதில் வாழ்வின் மகிமையை உணரச் செய்கிறது.

## நூல் - 'இலங்கையில் தமிழ் மொழி உரிமைகள்'




இலங்கையில் தமிழ் மொழி உரிமைகள் எனும் நூலை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வெளியிட்டுள்ளது. இதனை கலாநிதி தேவநேசன் நேசையா அவர்கள் எழுதியுள்ளார். யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் பல்கலைக்கழக கல்வியைப் பெற்றவர். பதுளை, மன்னார், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் அரச சேவையில் பணியாற்றியவர். இக்காலங்களில் மொழிப்பிரச்சினையைப் பற்றி அறிந்தவற்றையும் அனுபவித்தவைகளையும் கருத்திற் கொண்டும் தமிழ், சிங்களம், மொழிவாரியாக இனங்களுக்கு இடையேயான முரண்பாடுகளுக்கு வழிசமைத்த வகை குறித்த வரலாற்றுடன் கூடிய ஆய்வை இந்நூலின் மூலம் நேசையா அவர்கள் முன்வைத்துள்ளார். அத்துடன் மொழி அமுலாக்கம் தொடர்பாகவும், கல்வி, சமாதானம் என்பவை குறித்தும் மும்மொழிக்கொள்கை, தேசிய ஐக்கியம் அரசியலமைப்பு என்பவை பற்றியும் ஆய்வுடன் கூடிய கருத்துக்களை இந்நூலில் எழுதியுள்ளார். முன்வைக்கப்பட்டுள்ள பல விடயங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியவையாகவும் உண்மையானவையாகவும் இருக்கும் நிலையில் இன்னும் தீர்வு காணப்படாமல் தொடரும் தமிழ் மக்கள் சார்ந்த உரிமைகளும் விடயங்களும் இன ரீதியான முரண்பாடுகளாகவே பார்க்கப்படுகின்றன. தீர்வை நோக்கிய முன்னெடுப்புகளுக்கு இந்நூலின் கருத்துக்களும் உதவலாம்.

## போற்றுதற்குரிய மனிதராக வாழ்ந்தவர் குருகுலம் தந்த அமரர் கதிரவேலு



போற்றுதற்குரிய சிறந்த மனிதராக வாழ்ந்தவர் கிளிநொச்சி குருகுல நிறுவுநர் வேலுப்பிள்ளை கதிரவேலு அப்புஜி எனப் பாசத்தோடு அழைக்கப்பட்டவர். 1916ஆம் ஆண்டு ஜப்பசி 21 ஆம் நாள் வேலுப்பிள்ளை தங்கம்மா தம்பதியினருக்கு மகனாக நெடுந்தீவில் பிறந்தவர். குறுகிய காலத்திலேயே பெற்றோரை இழந்தவர். சிறிய தந்தையாராலும் பேரனாரதும் அரவணைப்பிலே வளர்ந்தவர். மனைவியாக நற்குணம் படைத்த சின்னம்மாவைத் தேர்ந்து அதன் பயனாக முருகதாஸ், நீலாம்பிகை, விமலாம்பிகை ஆகியோரைக் குழந்தைகளாகப் பெற்றவர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு வந்த அப்புஜி தியாக சிந்தனையுடன் செயற்பட்டுக் கிளிநொச்சி மண்ணுக்குப் பெருமை சேர்த்தார். திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்றார். புன்னாலைக் கட்டுவன் ஆயக்கடவை தமிழ்க் கலவன் பாடசாலை, கிளிநொச்சி உருத்திரபுரம் மகாவித்தியாலயம், பேரா தனை மகாவித்தியாலயம், கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இவரது பணி சிறந்திருந்தது. அதிபராய் உயர்ந்து கிளிநொச்சி உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தின் விஞ்ஞான கூடத்தை அமைத்தார். மாணவர் இயல், இசை என்பவற்றில் மேம்படவும் எழுத்திலும், பேச்சுத்திறனிலும் ஆர்வம் கொள்ளவும் ஊக்குவித்தார்.

வடபகுதியோடு மாத்திரமின்றி மலையகம் வாழ் தமிழ் மக்களின் கல்வியிலும் வாழ்க்கையிலும் அக்கறை கொண்டவராக பேராதனை தமிழ்க்கலவன் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றினார். கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் உயர்ச்சியில் கொண்ட கருத்துக்கள் இன்று நிறைவேற்றியுள்ளமை அவரது தூரநோக்கின் வெற்றி எனலாம். அதிபராக, ஆசிரியராக மாத்திரமன்றி நல்லதொரு நிர்வாகியாக சமய நிறுவனங்களின் வளர்ச்சியில் தனது சேவையால் சிறந்திருந்தார். உருத்திரபுரத்து சமேத உருத்திரபுரீஸ்வரர் ஆலய வளர்ச்சிக்காகப் பெரும் பணியாற்றினார். வட்டாரம் வாய்க்கால் காந்தி நிலையம் அதன் நோக்கில் வளரத் தகுந்த முயற்சிகளை மேற்கொண்டார்.

"ஆதாரக்கல்விக் குருகுலம்" ஒன்றினை 1964 ஆம் ஆண்டு மாசி மாதம் 24 ஆம் திகதி அப்புஜி ஆரம்பித்தார். 55 வயதில் ஓய்வு பெற்று முழு நேரத்தையும் குருகுலத்தின் சேவைக்காகவே அர்ப்பணித்தார். ஏழைப் பிள்ளைகளையும் தாய், தந்தையற்றோர், முதியோர் போன்ற ஆதரவற்றோர் பலரையும் குருகுலத்தில் பேணி வந்தார். குருகுலத்துப் பிள்ளைகளுக்கு உணவுடன் கல்வி, கலை, கலாசாரம், சமய அனுட்டானம், மத போதனை என்பவற்றைப் பயிற்றி நல்லதோர் சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு உழைத்தார். குருகுலத்தில் மாணவர் விரும்பும் காலம்வரை இருக்க, அதற்கேற்ற வசதிகளைச் செய்து கொடுத்து உதவினார். குருகுலச் சிறுமிகள் இசையில் திறமைபெறத் தமது சொந்தச் செலவிலேயே இராமநாதன் கல்லூரியில் "சங்கீத இரத்தினம்" அல்லது 'டிப்ளோமா' சான்றிதழ் பெற ஊக்குவித்தார்.

### நீத்தார் நயப்புரை

1977 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தால் இடம்பெயர்ந்த மக்களுக்கு ஊற்றுப்புலம் என்ற கிராமத்தை உருவாக்கி, அவர்களில் பலரையும் அங்கே குடியமர உதவினார். குருகுலத்தின் மேற்பார்வையிலே பாண் பேக்கரி, ஓட்டுத் தொழிற்சாலை, தச்சுவேலை, அச்சகம் என்பவற்றை உருவாக்கினார். இவர் உருவாக்கிய ஓட்டுத் தொழிற்சாலை நாட்டின் போர்ச்சூழலால் இடைநிறுத்தப்பட்டது. அவற்றால் சோர்வடையாத அப்புஜி உற்சாகத்துடன் மாதிரிப் பாலர் பாடசாலையையும் சிறுவர் விடுதியையும் அமைத்தார். எதிர்பாராத வகையில் கடந்த 1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தின் குண்டுத் தாக்குதலுக்குள் அம்மா உட்பட குடும்ப உறுப்பினர் பலருடன் காலமானார். அவர் உருவாக்கி வளர்த்த குருகுலம் 316 பிள்ளைகளைக் காக்கும் அறப்பணிக் கோயிலாக ஒளிர்கிறது. அதனை மகாதேவ ஆச்சிரமத்துடன் இணைத்துக் கொண்டாலும் அப்புஜியின் சேவைக்கு அடையாளமாகி அது தனித்தொளிர்வதை எதிர்பார்ப்பது அப்புஜியின் ஆன்மாவுக்குச் சாந்தி தருவதாகும்.

**சு.பசுபதிப்பிள்ளை,**
**கிளிநொச்சி.**



## இரு முகங்கள்

செல்வா



பார்க்கிறவர்கள் எல்லோருக்கும்
பிடிக்கும் படி
ஒருவரை ஒருவர்
தேடிப்பார்த்தால்
என்றைக்குமே எவரையும்
பார்க்க முடியாமல்
போய்விடும்
என்பது தெரியாமலா
உன்னை விரும்பும்
என்னிடம்
பார்க்கிறவங்களுக்குப்
பிடிக்காது என்றாய்.



பக்கத்து வீட்டுப் பையன்
நல்லவன்
என்றைக்குமே
உனக்குப் பாதுகாப்பாக
இருப்பான்
என்று உன்னிடம்
என்னைப் பற்றிச் சொன்ன
உனது தாயிடம்
கடைசிவரை
உனக்குப் பாதுகாப்பாக
இருப்பான் என்று
நான் எப்படிச் சொல்ல


## புத்தகங்களின் வாசனை

(சென்ற வாரத் தொடர்ச்சி...)

சிலர் புத்தகங்களை அரும்பாடு பட்டு வாங்கி வைத்திருந்த காரணத்தால் யாருக்கும் இரவல் கொடுக்க மாட்டார்கள்.

இரவல் வாங்குபவர்களும் வாங்கும் போது புன்சிரிப்புடன் கேட்டு வாங்கிப் போய் பல நாள்கள் சென்றாலும் அந்த புத்தகத்தின் இருப்பையே வசதியாகத் மறந்து போவார்கள். அவர்கள் படித்தார்களா இல்லையா அல்லது வேறு யாருக்காவது தானம் செய்துவிட்டார்களா ஒன்றும் தெரியாது. இரவல் கொடுத்தவர் அப்புத்தகத்தை வாசித்திருக்காவிட்டால் அவர் மனம் மிகவும் பாடுபடும். படித்துவிட்டாவது கொடுத்திருக்கலாம் என மனம் அடித்துக் கொள்ளும். அந்த பாதிப்பில் இனி ஒருத்தருக்கும் புத்தகம் தரக் கூடாது எனும் முடிவுக்கு வந்துவிடுவார். வாங்கிய புத்தகங்களை ஒழுங்கில் திருப்பித் தருபவர்களையும் மற்றவர்களுக்கும் பகிர்ந்துதான் கொடுப்பவர்களுக்கும் வாங்குபவர்களுக்கும் இடையே கண்ணுக்குத் தெரியாத இழையொன்று ஊடாடிக் கொண்டிருக்கும். இரவல் வாங்கிய புத்தகங்களை வாசித்தவுடன் நல்ல நிலையில் திருப்பித் தருபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

நல்ல புத்தகங்கள் ஒரு மனிதனை உருவாக்கும் ஆற்றல் பெற்றவை. தோண்டத் தோண்ட கிடைக்கும் அறிவுச் சுரங்கம் புத்தகங்கள். புத்தகங்கள் நிறைவான பொக்கிஷம், நல்வாழ்க்கைக்கான பெரும் புதையல். புத்தகங்களை அலட்சியப்படுத்தாமல் அதைப் போற்றிப் பாதுகாத்து வைத்தால் அவற்றின் வழிகாட்டுதலால் எங்கும் எதிலும் வெற்றி பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்ததும் அறியாததும்

ஒரு பெரிய சிந்தனையாளர் ரஷ்யாவிலே இருந்தார். அவர் நிறைய புத்தகங்களை எழுதியிருந்தார். அவரது பெயர் ஒஸ் பென்ஸ்கி.

உலகின் மிகச் சிறந்த மூன்று புத்தகங்களிலே ஒன்றை அவர் எழுதியிருக்கின்றார் என்று கூட சொல்வதுண்டு. அந்தளவுக்கு அவர் எழுத்தாளர்.

அந்தக் காலத்தில் குருத்ஜீஃப் என்ற பெரியவர் ஒருவர் இருந்தார். மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தார். அவரைத் தேடி அந்த எழுத்தாளர் சென்றார்.

''ஐயா.. உங்களிடம் சில கேள்விகள் கேட்டு விளக்கம் பெறலாம் என்று வந்திருக்கிறேன்! என்றார். உடனே அந்தப் பெரியவர் என்ன செய்தார் தெரியுமா?

ஒரு வெற்றுக் காகிதத்தை எடுத்தார். அவரிடம் கொடுத்தார். ''இதை வைத்திருங்கள். நாம் இருவரும் பேசுவதற்கு முதல் நீங்கள் ஒரு காரியம் செய்ய வேண்டும்'' என்று சொன்னார்.

''என்ன செய்ய.. சொல்லுங்கள் !'' என்றார் அவர்.

இந்தக் காலத்தில் உங்களுக்குத் தெரிஞ்சதெல்லாம் என்ன? தெரியாதெல்லாம் என்ன? என்ற பட்டியலை எழுதிக் கொண்டு வாங்கோ! அதன் பின்னர் உங்களுக்குத் தெரியாத விடயங்களைப் பற்றி நாம் இருவரும் உரையாடலாம். ஏனென்றால் உங்களுக்குத் தெரிந்ததைப் பற்றி நாம் பேசிப் பயனில்லை. தெரியாததைப்பற்றிப் பேசினால்தான் உங்களுக்கு அது பயனுள்ளதாயிருக்கும்!'' என்றார்.

அவர் அப்படிச் சொன்னது அந்த எழுத்தாளருக்கு சிறிது தர்ம சங்கடமாக இருந்தது. நாம் எவ்வளவு பிரபலமான எழுத்தாளர். என்னைப்போய் இப்படி எழுதச் சொல்கிறாரே என்று நினைத்தார். எனினும் அந்தப் பெரியவர்மேல் அவருக்கு மிகவும் மரியாதை. அவர் கொடுத்த காகிதத்தை வாங்கிக் கொண்டு தனியாக ஓர் இடத்தில் போய் அமர்ந்தார். யோசிக்க ஆரம்பித்தார்.

''கடவுளை எனக்குத் தெரியுமா? என்று முதலில் யோசித்தார். கடவுளை பற்றித்தான் எனக்குத் தெரியுமே தவிர கடவுளைத் தெரியாது என்று புரிந்தது. ஆனால் தனக்குத் தெரிந்த ஒரு விடயம் ''கடவுள்'' என்று அவரால் குறிப்பிட முடியவில்லை.

சரி என்று அடுத்தகட்டமாக ஆன்மா பற்றி சிந்தித்தார். ஆத்மாவைப் பற்றித்தான் தெரியுமே தவிர ஆத்மா எமக்குத் தெரிந்த விடயமாக இருக்கவில்லை என்பது புரிந்தது. அதனால் ஆத்மாவையும் தெரிஞ்ச பட்டியலில் சேர்க்க முடியவில்லை.

இவ்வாறு ஒவ்வொன்றாக அவர் யோசிக்க யோசிக்க எதுவுமே எமக்குத் தெரியவில்லை என்பது அவருக்குத் தெளிவானது.

நேராக எழுந்து அந்தப் பெரியவரிடம் போனார்.

''ஐயா! உங்களை வந்து சந்திக்கும் வரை எவ்வளவோ விடயங்கள் எனக்கு தெரிந்திருக்கிறதாக நினைத்தேன். அதனால் உங்களிடம் நிறைய கேள்விகள் கேட்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு வந்தேன். ஆனால் நீங்கள் கேட்ட ஒரு கேள்விக்கு விடை காண்பதற்கு முயன்றபோது எனக்கு ஒன்றுமே தெரியவில்லை என்பதைப் புரிந்து கொண்டேன். என்றார்.

''அப்படி என்றால் உலகப் புகழ் பெற்ற இவ்வளவு புத்தகங்களை உங்களாலே எப்படி எழுத முடிந்தது? என்று கேட்டார் பெரியவர்.

''ஐயா இப்போது தான் எனக்குப் புரிகின்றது! எனக்கு தெளிவில்லாத பல விடயங்களையும் நான் எழுதியிருக்கின்றேன். அவையெல்லாம் வெறும் வார்த்தைக் குவியல்கள் என்பதை இப்போது நான் உணர்கிறேன். வார்த்தைகளே அறிவு என்கின்ற மயக்கத்திலிருந்து இப்போது நான் விடுபட்டுவிட்டேன். அறிவுத் துறையிலே நான் ஒரு பூஜ்யம் என்கிறது புரிந்து விட்டது'' என்றார்.

அப்போது பெரியவர் சொன்னார்:

''இப்பதான் உங்களுக்கு உண்மையான அறிவு ஏற்பட ஆரம்பித்து உள்ளது. எப்போது மனிதன் தன்னுடைய அறியாமையை உணர ஆரம்பிக்கின்றானோ அப்போதுதான் அறிவின் தொடக்கத்தில் அடி எடுத்து வைத்தவனாக அவன் ஆகிறான்!'' அப்படி என்றார்.

அதுக்குப் பிறகு, ஒஸ்பென்ஸ்கி என்கின்ற அந்த சிந்தனையாளர் புத்தகம் எதுவும் எழுதவில்லை என்று சொல்கிறார்கள்!

நம்முடைய அறியாமை நமக்கு விளங்க ஆரம்பித்துவிட்டது என்று அர்த்தம். ஆனால் அது நமக்கு விளங்குவதில்லை. அதுதான் சிக்கல்.

ஒரு நண்பர் சொன்னார்:

''ஐயா.. நான் எப்போது வீட்டைப் பூட்டிவிட்டு வெளியூர் போனாலும், திருடன் பூட்டை உடைக்கிறான்.. அதனால் இப்போது புத்திசாலித் தனமான ஒரு காரியம் செய்து விட்டு உங்கள் ஊருக்கு வந்திருக்கிறேன் என்றார். ''என்ன செய்திருக்கிறீங்கள் என்று கேட்டேன். ''வீட்டை பூட்டாமலே வந்து விட்டேன்!''



**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# வாசகர் திருமுகம்

## மின்வெட்டில் ஏன் பாகுபாடு?

மின்சாரம் தற்போது அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாகக் காணப்படுகிறது. மின்சாரம் இல்லாத கணப்பொழுதுகள் எமது வாழ்வே இருளானதாக எண்ணத் தோன்றுகிறது. எமது கோப்பாய் பகுதிக்கு கடந்த மூன்று வருடங்களாக மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. ஏனைய பிரதேசங்களில் நடைமுறையில் இருக்கும் மின்வெட்டினைக் காட்டிலும் எமது பிரதேசத்தில் மின்வெட்டு அதிகம் காணப்படுகிறது. மின் பிறப்பாக்கியின் வலுப் போதாமை, பின்னர் அவசர திருத்த வேலை, இப்போது வீதி அபிவிருத்தி வேலை இவையே மின்வெட்டுக்கு மின்சாரசபை கூறும் காரணங் கள் ஆகும்.

தற்போது வீதி அபிவிருத்தி வேலை காரணமாக மின்வெட்டு அமுல்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் வீதி அபிவிருத்தி செய்யப்படவில்லையா? அங்கெல்லாம் எமது பகுதியுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைந்த அளவு மின்வெட்டு அமுல் செய்யப்படுகிறது. கோண்டாவில், கொக்குவில், தாவடி போன்ற பிரதேசங்களில் மின்வெட்டு மிகக் குறைவாகவே அமுல் செய்யப்படுகிறது.

எமது பகுதியில் சனி,ஞாயிறு தினங்களில் மின்வெட்டு அமுல்படுத்தப்படுகின்றது. ஏனைய பிரதேசங்களில் மாதத்தில் எப்போதாவது ஒன்று அல்லது இரண்டு சனிக்கிழமைகளில் மட்டும் மின்வெட்டு அமுல்படுத்தப்படுகிறது.

ஆனால் எமது பகுதிக்கு ஒவ்வொரு சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மின்வெட்டு அமுல்படுத்தப்படுவது ஏன் என்று தெரியாமல் எமது பிரதேச மக்கள் உள்ளனர்.

எமது பகுதியில் வீதி அபிவிருத்திக்காக மின் கம்பங்களை பிடுங்கி நடுவது பெரும்பாலும் நிறைவடைந்து, வீதி திருத்தமும் இறுதிக் கட்டத்துக்கு வந்து விட்டது.

ஆனால் பிற பிரதேசங்களில் வீதி திருத்தம் காரணமாக எமது பகுதிக்கும் சேர்த்து மின்வெட்டு அமுல்படுத்துவது எந்த வகையில் நியாயமாகும்.

எதற்காக இந்தப் பாகுபாடு. இது பற்றி மின்சார சபையுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டால் ''அப்படித்தான்'' என்ற பதில் மட்டுமே கிடைக்கிறது.

மின்சாரம் இல்லாமலேயே பல வருடங்கள் வாழ்ந்தவர்கள் நாம். எமக்கு அது பழகிய ஒன்று. ஆனால் தற்போது மின்சாரத்தை நம்பி பல மக்கள் வாழ்வாதாரங்களை உருவாக்கியுள்ளார்கள். அதிகாரிகள் பதிலளிப்பார்களா?

**பாதிக்கப்பட்டவர்களில் ஒருவன்.**

## பஸ்ஸின் சீரின்மையும் பயணிகளின் சிரமமும்

யாழ்.திருநெல்வேலிப் பரமேஸ்வராச் சந்திப் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக நின்று, மாலை 4 மணியில் இருந்து 5 மணி வரை தனியார் பஸ்ஸில் ஏறும் பயணிகளின் நிலையை எவரும் கவனத்தில் எடுக்கவில்லை.

ஒரு மணித்தியாலத்தில் 10 நிமிட இடைவெளியில் மூன்று தனியார் பஸ்கள் யாழ் நகர் நோக்கிச் செல்லுகின்றன. இந்த பஸ்களில் கூடுதலாக பல்கலைக்கழக மாணவர்களும் சில உத்தியோகத்தர்களும் ஏனையவர்களும் அடங்குவர். இவர்களில் அனேகமானவர்கள் யாழ்.நகர் சென்று அங்கிருந்து தூர இடங்களாகிய அராலி, வட்டுக்கோட்டை, சுழிபுரம், பண்டத்தரிப்பு மற்றும் சாவகச்சேரி, மீசாலை, கொடிகாமம் போன்ற இடங்களுக்கு பிரயாணம் செய்பவர்களாகக் காணப்படுகின்றனர். யாழ்.நகர் செல்லும் இந்த மூன்று தனியார் பஸ்களிலும் பிரயாணிகள் கூட்டத்தின் நெரிசலிலும் ஏறிச் செல்கின்றனர்.

யாழ்.நகர் செல்லும் இந்த தனியார் பஸ்கள் 10 நிமிடங்களில் சென்றுவிடும். ஆனால் காவல் நிற்பதோ ஒரு மணித்தியாலம். அங்கிருந்து புறப்பட்டு வீடு செல்ல மாலை 6.30 மணிக்கு மேல் ஆகிவிடும்.

வீதி திருத்த வேலைகள் இடம்பெற்று இருந்தால் பஸ்கள் ஒற்றையடிப் பாதைக்காக தரித்து நின்று புறப்பட தாமதமாகும்.

இப்படியாகப் பிரயாணத்துக்காக வீணாக நேரத்தை செலவிடுவது மக்களுக்கு மன உளைச்சலையும் விரக்தி மனப்பான்மையையும் ஏற்படுத்துகின்றது.

இதேபோல் காலையிலும் தூர இடங்களில் இருந்து யாழ்.வருவதற்கு நேரத்துடன் பஸ்தரிப்பு நிலையத்துக்கு வந்தாலும் பஸ்கள் ஒன்றையொன்று முந்திச் செல்வதற்காக ஏற்றாமல் செல்கின்றன.

எனவே இந்தப் பரிதாப நிலையை உணர்ந்து மாலையில் வீடு திரும்ப 4.30 மணியளவில் பலாலி வீதியூடாக யாழ்ப்பாணத்துக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றை ஒழுங்கு செய்து உதவும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

**அன்பன், திருநெல்வேலி.**

## சேமித்த பணத்தை வழங்குவார்களா?

ஜே/339 கிராம அலுவலர் பிரிவில் கடந்த காலத்தில் தற்காப்பு வளர்ச்சிக் கழகம் ஒன்று மிகவும் சிறப்பாக இயங்கியது. இந்தக் கழகத்தில் பலர் கடன் எடுத்தும் தொழில் செய்து சேமிப்பு செய்தவர்களும் உண்டு. இந்தக் கழகம் கடந்த கால இடப்பெயர்வுடன் செயற்படாமல் போய்விட்டது. தற்போதைய சூழலில் மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் மீண்டும் இந்தக் கழகம் இயங்கி சேமிப்பு வைப்பில் இட்டவர்களின் பணத்தையும் கடன் அடிப்படையில் எடுத்தவர்களிடம் பணத்தையும் மீளப்பெற்று இந்தக் கழக செயற்பாட்டை மீள ஆரம்பிக்க வேண்டுமென அங்கத்தவர்கள் தெரிவித்துள்ளனர். இந்தக் கழக செயற்பாடு குறித்து கழக உறுப்பினர் ஒருவரை தொடர்புகொண்டு கேட்டேன். அவர் ஏனோ தானோ என்று பதிலளித்தார். மேலதிக தகவல்களை அறியும் முகமாக இந்தக் கழகத்துக்குப் பணம் வழங்கிய நிறுவனத்துடன் நேரடியாக சென்று வினாவினேன். கழகம் ஒரு லட்சம் ரூபா வழங்கியதாகவும், அந்தப் பணத்தைக் கொண்டு கழகத்தை திறம்பட நடத்தி மக்களுக்கு சேவை செய்யும்படியும் சேமிப்பவர்களுக்கு சேமிப்பு புத்தகத்தில் உள்ள பணத்தை அந்தந்த கழகங்கள் இயங்கினால்தான் பெற முடியுமென கூறினார்கள்.

ஆனால் இந்தக் கழகச் செயற்பாடுகள் தற்போதும் முடங்கிய நிலையில் இயங்காமல் இருப்பதால் பணத்தை நம்பி வைப்பில் இட்ட பயனாளிகள் சேமிப்பு புத்தகத்தை வைத்துக் கொண்டு விழி பிதுங்கி நிற்கின்றனர்.

அப்பாவி மக்கள் வியர்வை சிந்தி உழைத்த பணம். எனவே உரிய கழகத்தினர் மக்களின் நன்மைகருதி கழகத்தை மீள ஆரம்பித்து அவர்களின் பணத்தை மீள வழங்க முன்வரவேண்டும். எமது மக்கள் எத்தனையோ துன்ப, துயரங்களை சந்தித்து மனமுடைந்து பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களை மேலும் பாதிப்படையவிடாது சம்பந்தப்பட்ட கழகத்தினர் செயற்படுவார்களா?


**நலன்விரும்பி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
03/11/2012

# புருவங்களை எவ்வாறு பராமரிக்கலாம்!





★ புருவங்களை எப்போதும் திரெடிங் முறையில் அகற்றுவதே மிகவும் நல்லது. சிலர் வோக்சிங் முறையிலும் அகற்றுவதுண்டு. வோக்சிங் செய்வதால் நாளடைவில் அந்த இடத்துத் தசைகள் சுருங்கித் நலிவடைந்துபோக அதிக வாய்ப்பு உள்ளது. எனவே வோக்சிங் முறையில் புருவங்களை நீக்கக்கூடாது .

★ சிலர் பிளேடு உபயோகித்துப் புருவங்களை ஷேப் செய்வதும் உண்டு. இந்த முறை மிகவும் ஆபத்தானது. அப்படி அகற்றும்போது அந்த இடத்து முடிகள் மறுபடி வளரும் போது மிகவும் அடர்த்தியாக மற்றும் ஒழுங்கற்ற முறையில் வளரும். எனவே இவ்வாறு செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

★ புருவங்கள் நரைத்திருந்தால் மஸ்காராவை உபயோகித்து கறுப்பாக்கிக் கொள்ளலாம். மஸ்காரா பிரஷ்ஷை இலேசாகக் காய வைத்து நரையை மறைக்கத் தடவலாம். ஐப்ரோ பென்சில் உபயோகிப்பதைவிட இவ்வாறு செய்வது மிகவும் அழகாக, இயற்கையாக இருக்கும்.

★ கண்களுக்கு அடிக்கடி ஐபேட் உபயோகிக்கலாம். இது கண்கள் குளிர்ச்சி அடைவதற்கும், புருவங்கள் சீராக வளர்வதற்கும் உதவும்.


★ புருவங்களின் வளர்ச்சிக்கு லாவண்டர், ரேஸ்மெரி மாதிரியான அரோமா எண்ணெய்கள் மிகவும் சிறந்தவை. அவற்றைச் சூடு படுத்தாமல் அப்படியே மசாஜ் செய்ய உபயோகிக்க வேண்டும்.

# விரல்களுக்கு மசாஜ்




கை விரல்கள் அழகாக இருக்க வேண்டும் என்றால் அவற்றுக்கு நகப்பூச்சு மட்டும் பூசினால் போதாது. அதற்கான சிறப்பான கவனமும் தேவைப்படுகிறது. கை விரல்களுக்கு சிறந்த மசாஜ் கொடுத்து அவற்றை முறையாகப் பராமரித்து வந்தால்தான் நகங்களும் அழகாகத் தோன்றும்.

கை விரல்களுக்கு மசாஜ் செய்வதற்கு முன்பு அதற்கான க்ரீமை கைகளில் தடவுங்கள். பிறகு க்ரீம் சருமத்துக்குள் ஊடுருவும் வரை நன்கு மசாஜ் செய்ய வேண்டும். இவ்வாறு செய்து பின்னர் உங்கள் கை விரல் நகங்களுக்கு நகப் பூச்சை பூசுங்கள். அழகாக மிளிரும்.



# பளபளப்பான முகம் வேண்டுமா?

## நீராவி பிடியுங்கள்





முகத்தை அழகாக்க எத்தனை வகையான அழகு சாதனப் பொருள்களைப் பயன் படுத்தினாலும் ஆவி பிடிப்பது போல் இருக்காது. ஏனெனில் அழகு சாதனப் பொருள்களில் இரசாயனங்கள் கலந்திருக்கும். மேலும் சருமத்துக்கு ஏற்ப ஒவ்வொரு அழகுப் பொருள்களும் வேறுபடும்.

ஒருவேளை மாற்றிப் பயன்படுத்திவிட்டால் அதனால் தேவையில்லாத பக்கவிளைவுகள் ஏற்படும். ஆகவே எந்த ஒரு பக்கவிளைவும் ஏற்படுத்தாமல் சருமத்தை அழகாகவும் உடலை ஆரோக்கியமாகவும் வைக்க சூடான நீரை வைத்து ஆவி பிடிப்பது மிகவும் சிறந்தது.


ஏனெனில் இதனால் சருமத்தில் உள்ள சருமத் துளைகள் விரிவடைந்து அதில் உள்ள அழுக்குகள் கிருமிகள் விரைவில் வெளியேறிவிடும்.

இதற்கு செலவும் ஏற்படாது. இதனை எந்த நேரத்திலும் வீட்டில் சூடான நீரை வைத்து செய்யலாம். ஆவி பிடிப்பதால் கரும்புள்ளிகள் மற்றும் வெள்ளைப் புள்ளிகளும் விரைவில் நீங்கிவிடும். அதற்கு 5 – 10 நிமிடம் ஆவி பிடித்து பின் தேய்த்தால் மூக்கில் காணப்படும் வெள்ளையானவை விரைவாக வந்துவிடும். மேலும் அவை எளிதில் வருவதோடு, கரும்புள்ளிகள் வேரோடு வந்துவிடும். பின்னர் அவை வராது போய்விடும்.

ஆவி பிடிக்கும்போது முகத்திற்கு சரியாக இரத்த ஓட்டம் இருக்கும். மேலும் துளைகள் நன்கு எந்த ஒரு தொந்தரவும் இல்லாமல் சுவாசிக்கும். அதனால் சருமம் நன்கு அழகாக பொலிவோடு விளங்கும்.

# முகச் சுருக்கத்தைப் போக்க

## எளிமையான வழிகள்



வயதாகிவிட்டது என்றாலே முகத்தில் சுருக்கங்கள் தோன்றுவது இயற்கையான செயல். அதற்கு முன்கூட்டியே சில வழிமுறைகளைக் கையாண்டால் முகச்சுருக்கம் ஏற்படுவதைத் தவிக்கலாம்.

முகச்சுருக்கத்தை நீக்க எளிமையான சில குறிப்புகள்

★ சந்தனப்பவுடருடன் பன்னீர், கிளிசரின் சேர்த்து பேஸ் [illegible] முகத்தில் தேய்த்து சிறிது நேரம் கழித்து கழுவ வேண்டும் [illegible] இரு முறை செய்துவர முகச் சுருக்கம் நீங்கும்.

★ புளிவாழைப்பழத்தைப் பிசைந்து அதனுடன் பயத்தம் மாவைக் கலந்து முகத்தில் தேய்க்க முகம் பொலிவு பெறும் .

★ பப்பாளிப் பழத்தை நன்றாக அரைத்து அத்துடன் சில துளிகள் பால் மற்றும் பாதாம் எண்ணெய் சேர்த்து முகத்தில் பூசலாம்.

★ ஒரேஞ் பழத்தோலை நன்றாகக் காயவைத்து அதை அரைத்து மாவாக்கி பேஸ்ட் போல் பயன்படுத்தலாம். இவ்வாறு செய்தால் முகச் சுருக்கம் நீங்கும் முகம் பொலிவும் பெறும்.

★ சந்தனப் பவுடர் மற்றும் பால் கலந்தோ அல்லது வெள்ளரி விதையை நன்றாக அரைத்து அத்துடன் பன்னீர் கலந்தோ முகத்தில் பூச சுருக்கம் மறையும்.

★ அதிகமாகக் கோபப்படுபவர்களுக்கு விரைவிலேயே சுருக்கம் ஏற்படும் வாய்ப்பு இருப்பதாக சில தகவல்கள் தெவிக்கின்றன. எனவே கோபப்படுவதைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org